# VIRAPATNI

WITH AN ENGLISH FOREWORD

BY

S. ANAVARATAVINAYAKAM PILLAI,
M.A., L.T.,

Lecturer in Tamil, Ceylon University College,
Formerly Chairman, Board of Studies in Tamil
and
Editor, Tamil Lexican, University of Madras.

D. SUBBIAH PILLAI,
ALANGADU,
MUTUPET POST.

1926.

I

TERED.

# வீரபத்தினி.

## (கோவலன் கதை.)

இலங்கை சர்வ கலாசாலைத் தமிழ்ப் போதகாசிரியரும்
சென்னை சர்வ கலாசாலைத்
தமிழ் ஆலோசனைச் சபையின் மாஜி அக்கிராசனரும்
மேற்படி கலாசாலைத் தமிழகராதிப் பேராசிரியருமாகிய

ஸ்ரீமாந்

**எஸ். அனவரதவிநாயகம் பிள்ளை**

எம்.எ., எல்.டி., அவர்களின்
முகவுரையுடன் கூடியது.

---

அக்ஷய ஆண்டு.

---

ஆக்கியோன் :

**து. சுப்பையா பிள்ளை,**

ஆலங்காடு,
முத்துப்பேட்டை போஸ்டு.

---

ரிஜிஸ்தர் செய்தது. 1926. விலை ஒரு ரூபா.

# வீரபத்தினி.

# FOREWORD.

I have been asked to write a foreword to the **Virapatni**, the story of Kovalan-Kannaki, and I do so with pleasure. The story is an ancient one, quite familiar to all Tamils, and was first recorded in the famous Tamil epic of the Anklet, **Silappadhikaram**. There is a later ballad-like composition known as Kovalan-Katai and fathered on Puhalendi. In recent times, the story has been dramatised for stage purposes by several writers who have freely altered it to suit their individual tastes. There are also some abridgments of the **Silappadhikaram** in Tamil prose, like the **Kannaki** and the **Silappadhikara-k-Katai**. The **Virapatni** also professes to be a prose version of the **Silappadhikaram** but appears to me to excel others in certain important respects. In the first place, it is a closer version of the epic. Then, quotations from the original are more frequent and it would appear some taste has been displayed in the choice of the lines quoted. Another feature which is peculiar to this book is the attempt at elaborate narration of the stories that are merely referred to or mentioned briefly in the original. Thus, the book is no

doubt a useful addition to the already existing literature dealing with the Kovalan-Kannaki story. I have reason to think that the author Mr. D. Subbiah Pillai has been engaged in writing this book for sometime, and find evidence in it to say that he has made a very careful study of the original epic. The book has been written in elegant Tamil and furnished with a glossary of difficult words and explanatory notes on proper names. I would recommend it safely for use in High School and College classes as a Tamil text book for detailed or non-detailed study.

**S. A. Vinayakam Pillai,**
LECTURER IN TAMIL,
**Ceylon University College.**

Colombo,
17th April, 1926.

# முகவுரை.

கற்பின் திட்பமும் ஒழுக்கத் திறனும் வினையின் வலியும் பிறவும் மருவிய வீரபத்தினி கதை எல்லாச் சுவைகளும் நிரம்பியது; கண்ணகி—கோவலன் வரலாற்றைக் கூறுவது. கண்ணகி, தன்னுடைய கற்பின் வன்மையாற் காட்டிய வீரத்தைப் பாராட்டி, வீரபத்தினி என்னும் பெயர், அத் தெய்வக் கற்பினளுக்கு முன்னோரால் இடப்பட்டது. இக் கதை நிகழ்ந்த காலத்திலேயே இருந்த இளங்கோவடிகள், இதனைச் சிலப்பதிகாரம் என்னும் பெயரால் தேனினும் பாகினும் இனிக்கும் மதுரமொழிகளை அடுக்கிப் பாடியருளினர். மேன்மைசான்ற ஆசிரியராகிய அவ் இளங்கோவடிகளின் அடிச்சுவட்டைப் பின்பற்றி எழுதப் பெற்றது இவ் வீரபத்தினி.

எவ்வாற்றானும் தலைசிறந்த, மெய்ம்மையும் தெய்விகமும் வாய்ந்த, கண்ணகிகதை தமிழுலகத்து நன்கு பரவவில்லை யென்பது ஒருதலை. தமிழ்நாட்டிலே நடந்ததும் தமிழ் மக்களாற் பொன்னினும் மணியினும் போற்றத் தக்கதும் ஆகிய இந்த அரும்பெரும் சரிதை அங்ஙனம் பரவாதது பண்டுள்ளோர் உரைநடை யெழுதிப் பரப்பாமையாற் போலும்.

இச் சிறந்த கதையை மாணவர்களும் பிறரும் எளிதிற் கற்றறியும் பான்மையில் வெளிப்படுத்த வேண்டு

மென்னும் பேரவா இதை எழுதும்படி என்னைத் தூண்டிற்று.

எனது சிற்றறிவுக்கு எட்டியவரையில் இனக் கதைகள் பலவற்றை இயன்றமட்டில் விளக்கி, நூலைத் தெள்ளியநடையில் எழுதியிருக்கின்றேன். இதில், சிலப்பதிகாரத்திலிருந்தெடுத்த, இனிமையாகவும் எடுத்துக்காட்டாகவும் உள்ள, பல அடிகள் ஆங்காங்கே சேர்க்கப் பட்டிருக்கின்றன.

சிலப்பதிகாரத்தை ஆராய்ந்து வீரபத்தினியை எழுதுங்காலத்து அடியேன்பால் அன்புபாராட்டி, ஐயங்கள் தீர அறிவுறுத்தியும், ஒப்பு நோக்கியும் பேருதவி செய்த பெருந்தகை ஸ்ரீமான் எஸ். அனவரதவிநாயகம்பிள்ளை (எம்.ஏ. எல்.டி.,) அவர்களுக்கு அடியேன் செய்யும் கைம்மாறு என்றென்றும் நன்றி பாராட்டிப் போற்றுவதே.

எனது அறிவுக் குறைவால் இதில் ஏதேனும் பிழைகள் நேர்ந்திருத்தல்கூடும். அவற்றை அறிஞர்கள் எனக்குத் தெரிவிப்பார்கள் என்றும், அங்ஙனம் தெரிவிப்பவைகளை அன்புடன் ஏற்று மறுபதிப்பில் திருத்திக் கொள்ளலாம் என்றும் எதிர்பார்த்திருக்கின்றேன்.

சாதி மதம் முதலான வேற்றுமைகளின்றி, தமிழ் கற்றார் எல்லோருக்கும் பயன் தரத்தக்க இக்கதை யாவரிடத்தும் பரவி நிலவும் வண்ணம் திருவருள் கூட்டுவதாக.

து. சு.

இராமநாதபுரம் சமஸ்தான வித்வானும்
சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷிகாலேஜ் தமிழ்ப்பண்டிதருமாகிய,
ஸ்ரீமாந்.

## சர்க்கரை இராமசாமிப்புலவரவர்கள் இயற்றிய

# சிறப்புப்பாயிரம்.

---

கற்பினுக் காசி யாய கண்ணகி சரிதந் தன்னை
யற்புட னாய்ந்து செந்தே னாமெனக் கற்றோர் கொள்ளப்
பொற்புற வியற்றி யீந்தான் புவிபுக ழாலங் காட்டுக்
கற்பகச் சிதம்ப ரேந்த்ரன் கழறொழு தியனா றேர்ந்தோன்.

கங்கையின் குலத்தோன் கற்றோர் களுக்கெலா மினிய நண்பன்
திங்களங் கண்ணி வேய்ந்த சிவபிரா னடியார்க் கன்பன்
மங்கள சுகுண னெந்த வர்த்தகத் தினுஞ் சிறந்தோன்
எங்கள்கண் மணிக ளாக இலங்குசுப் பைய வேளே.

---

மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பரீட்சகரும்
"உலகியல்விளக்கம்" நூலாசிரியரும்
யாழ்ப்பாணம்
பரமேச்வரக் காலேஜ் தலைமைத் தமிழ்ப்பண்டிதரும் ஆகிய
ஸ்ரீமாந்.

## க. சு. நவநீதகிருஷ்ண பாரதி அவர்கள்

பாடியவை.

---

சீரணி காதற் கற்புயர் வீரம்
திகழ்ந்துமுத் தமிழெனு மினிய

பேராமு தூட்டி முந்நலங் காட்டும்
பெருமைசால் சிலப்பதி காரச்
சாரமிஃ தெனத்தேன் றெளிவெனத் தமிழின்
தழைவென யாவருஞ் சாற்ற
வீரபத்திநிப்பேர் பெறுமுறை நூலை
மேதினிக் களித்துவாழ்ந் தனனே.

இங்கையங் குலத்தை நலந்தரு மதியைக்
கன்னிமுத் தமிழெனு மகளை
மங்கலம் நிறைய மணந்தொளிர் தனத்தான்
மால்சிதம் பரனடி மனத்தான்
இங்கித கவிஞன் இறைவியை வழுத்து
மியல்பினன் கற்றவ ரினத்தான்
தெங்குகு ழூலங் காட்டினைத் தழைக்கச்
செயுமுகிற் சுப்பைய வேளே.

---

குலசேகரன்பட்டினம், திருவள்ளுவரகம்,
திருவாளர்.

## ப. இராமநாதபிள்ளை அவர்கள்

பாடியது.

---

நானிலம் புரக்கும் மூவேந்தர் நாட்டில்
இலகும் அறம்பொருள் இன்ப மென்னும்
முப்பாற் பொருளும் முறைமையி னமைத்துச்
செப்பத் துணிந்த சேரர் இளங்கோ
அடிகள் தாமும் அப்பொருண் மருவ
இயலிசை நாடகம் என்னும் யாப்பால்
"அரசியல் பிழைத்தோர்க் கறங்கூற் றாவதூஉம்
உரைசால் பத்தினிக் குயர்ந்தோ ரேத்தலும்

# VII

ஊழ்வினை யுருத்துவந் தூட்டு மென்பதூஉம்”
சூழ்வினைச் சிலம்பு காரணமாக
நாட்டினர் சிலப்பதி காரநற் காதை
அதனையே, இற்றைஞான் றுள்ளார் இனிதினுணரப்
பாட்டிடை யிட்ட உரைநடை வகையால்
நாட்டவர் மகிழ நற்றமிழ் மொழியால்
அடிகள் அடக்கிய அருங்கதை முழுவதும்
படியினில் விரித்துப் பயில்வோர் போற்ற
வீரபத் தினியெனும் விழைபெயர் மிரீஇ
ஆலங் காட்டினுக் கணிசெய் வேளாண்
தோன்றல் துரைசாமி ஈன்ற குரிசில்
ஆங்கிலப் பழக்கமும் அருந்தொழின் மாண்பும்
பாங்குற வமைந்தவென் பயனுறு தோழன்
தமிழ்நூற் றேர்ச்சியும் தக்க இசையும்
பொருந்த வாய்த்த புலவர் தலைமணி
ஈந்தனன் உலகிற் கிசைசேர்
சுப்பையா பிள்ளை யெனுந்தூ யோனே.

# பொருளடக்கம்.

## புகார்ச் சிறப்பு.


| | | | |
|---|---|---|---|
| க. | அகநகர் புறநகர் | ... | 1 |
| உ. | நாளங்காடிப்பூதம் | ... | 3 |
| ந. | கொற்றப்பந்தர் பட்டிமண்டபம் தோரணவாயில் | ... | 4 |
| ச. | வெள்ளிடை மன்றம் | ... | 5 |
| ரு. | இல்ஞ்சிமன்றம் | ... | 6 |
| சு. | நெடுங்கல் நின்றமன்றம் | ... | 6 |
| எ. | பூதசதுக்கம் | ... | 7 |
| அ. | பாவைமன்றம் | ... | 7 |
| கூ. | சக்கரவாளக்கோட்டம் | ... | 8 |
| க0. | வனங்கள் | ... | 9 |
| கக. | பத்தினிப்பெண்டிர் | ... | 11 |


## கோவலன் வாழ்க்கை.


| | | | |
|---|---|---|---|
| க. | திருமணம் | ... | 18 |
| உ. | தனிமனைபுகுதல் | ... | 20 |
| ந. | மாதவி நடனம் | ... | 21 |
| ச. | மாதவி நட்பு | ... | 22 |
| ரு. | கண்ணகியின் பிரிவாற்றுமை | ... | 23 |
| சு. | இந்திரவிழா | ... | 24 |
| எ. | கோவலன் மாதவியைப் பிரிதல் | ... | 26 |
| அ. | தேவந்தி வரலாறு | ... | 28 |
| கூ. | கண்ணகி கனு | ... | 31 |
| க0. | கோவலன் வருகை | ... | 34 |

## வழிச் செலவு.


| | | |
|---|---|---|
| க. | புறப்பாடு ... | 36 |
| உ. | கவுந்தியடிகளைக் கண்டடிபணிதல் ... | 37 |
| ங. | மருதநிலக் காட்சி ... | 40 |
| ச. | சாரணர் எதிர்ப்படல் ... | 41 |
| ரு. | வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் நரியாயினமை ... | 44 |
| சு. | மாங்காட்டு மறையோன் வழித்திறங்கூறல் | 45 |
| எ. | வனதெய்வம் ... | 51 |
| அ. | ஐயை கோட்டம் ... | 53 |
| கூ. | மாதவி ஏவிய கோசிகற் காண்டல் ... | 57 |
| க0. | வையை கடந்து மதிற்புறஞ் சார்தல் ... | 61 |


## மதுரைச் செய்தி.


| | | |
|---|---|---|
| க. | நகரக்காட்சி ... | 63 |
| உ. | கோவலன் நகர்கண்டு மீளல் ... | 64 |
| ங. | கோவலன் கனா ... | 70 |
| ச. | அடைக்கலம் அருளல் ... | 71 |
| ரு. | குரங்குக்கை வானவன் ... | 73 |
| சு. | மாதரி மனை ... | 75 |
| எ. | சிலம்பு விலைபகர்தல் ... | 79 |
| அ. | அரசன் ஆணை ... | 80 |
| கூ. | களவுத்திறன் ... | 81 |
| க0. | கோவலன் இறுதி ... | 85 |
| கக. | ஆய்ச்சியர் ஆட்டம் ... | 86 |
| கஉ. | கொடுந்துயர் பூண்டாள் கோவலற் காண்டல் | 90 |
| கங. | வழக்குரைத்தல் ... | 94 |
| கச. | வீரமொழி ... | 98 |

கரு. மதுரை தீப்பட்டல் ... 100
கசு. மதுராபுரித் தெய்வம் வரன்முறை கிளத்தல் ... 103
கஎ. வீரபத்தினி மேற்றிசைப்போதல் ... 108

## சேரநாட்டில் தெய்வமாதல்.

க. காதற் கொழுநனைக் கண்டு விண்ணடைதல் ... 109
உ. குறவர் கூத்து ... 110
ங. சேரன் மலைவளங் காணச்சேறல் ... 112
ச. குன்றவர் கூற்று ... 113
ரு. சாத்தனார் கண்ணகி வரன்முறை சாற்றல் 115
சு. கல்லுரு நாட்டக்கருதி யாராய்தல் ... 117
எ. படை எழுச்சி ... 120
அ. நீலகிரி ... 123
கூ. ஆரியமன்னரை அமரில் வெல்லல்... 124
க0. கங்கை நீர்ப்படை ... 126
கக. சேரன்பால் மாடலன் சென்றுரையாடல் 127
கஉ. வஞ்சிமாநகர்க்கு வந்துசேரல் ... 129
கங. பத்தினிக்கல் நாட்டு ... 130
கச. வீரபத்தினியார் விண்ணிடைத்தோன்றல் 134
கரு. தேவந்திமங்கை தெய்வமுற்றுரைத்தல் 136
கசு. மூவர்பெண்களின் முன்னைப்பிறப்பு... 138
கஎ. வரம் தரல் ... 140
கஅ. பத்தினித் தெய்வம் இளங்கோவடிகட்கு அருளல் ... 140
ககூ. பத்தினிகோயிற் கண்டவர் ... 141
உ0. இளங்கோவடிகள் திருவாக்கு ... 142
அரும்பொருள் விளக்கம் ... 143

# பெயர்விளக்கம்.

**கோவலன்** :—காவிரிப்பூம் பட்டினத்துப் பிறந்த வணிகன்; சிலம்பு காரணமாக மதுரையில் வெட்டுண்டு வானகஞ் சேர்ந்தவன்; கதைத்தலைவன்.

**கண்ணகி (வீரபத்தினி)**:—கோவலன் மனைவி; காவிரிப்பூம் பட்டினத்துப் பிறந்து தனது வீரக்கற்பினால் மதுரை நகரைத் தழற்படச் செய்து, சோரநாட்டில் தெய்வமானவள்; கதைத் தலைவி.

**மாசாத்துவான்** :—கோவலன் தந்தை; காவிரிப்பூம் பட்டினத்துப் பெருஞ் செல்வன்; மதுரையில் மகன் மாண்டதறிந்து தன் செல்வங்களைப் பலர்க்கும் அள்ளி வழங்கிவிட்டு புத்தமதத் துறவியானவன்.

**பெருமனைக்கிழத்தி** :—கோவலன் தாய்; மகன் மதுரையில் மாண்டதற்காற்றாமல் ஏங்கி உயிர்விட்டுப் பின்பு சோரநாட்டில் அரட்டன்செட்டியின் இரட்டைப்பெண்களி லொருத்தியாய்க் கண்ணகியின் தாயுடன் மறுபிறப்புற்றவள்.

**மாநாய்கன்** :—கண்ணகியின் தந்தை; மருமகன் மடிந்தமை கேட்டுச் செல்வங்களைப் பலர்க்கும் வழங்கிவிட்டுச் சமணத் துறவியானவன்.

**மாதவி** :—காவிரிப்பூம் பட்டினத்தாள்; சித்திராபதியின் மகள்; நாடகக் கணிகை; கோவலனின் காதற் பரத்தை; கோவலன் மதுரையில் மாண்டதறிந்து மனம்வெறுத்துப் புத்தமதப் பிட்சுணியானவள்; தன் மகள் மணிமேகலையையும் பிட்சுணி ஆக்கினவள்.

**வசந்தமாலை** :—மாதவியின் தோழி. இவளைக் கூனி என்றுங் கூறுப.

**தேவந்தி** :—பாசண்டச் சாத்தன் மனைவி ; கண்ணகியின் பார்ப்பனத்தோழி ; கண்ணகிக்கு மதுரையில் நேர்ந்த பெருந்துயர்கேட்டு அவளைத் தேடிச்சென்று திருச்செங்கோட்டை யடைந்து கண்ணகி கோயிலிற் பூசை செய்திருந்தவள்.

**கவுந்தி அடிகள்** :—ஆருகத மதத்தினளாகிய இவர், முதிர்ந்த தவமுடையவர்; கண்ணகிக்கும் கோவலனுக்கும் வழித்துணையாகி, மதுரை சென்று ஆங்குஇருவருக்கும் நேர்ந்ததீமை கேட்டு, பட்டினிவிரதத்தால் உயிர்துறந்தவர்; மதுரை செல்லும் வழியில் வம்பப்பரத்தையையும் வறுமொழியாளனையும் நரியாகச் சபித்தவர்.

**சாரணர்** :—சீரங்கத்தில் தோன்றி கண்ணகி கோவலனொடு சென்ற கவுந்தி யடிகளுக்கு அறமுரைத்தவர்.

**மாங்காட்டு மறையோன்** :—இவர் கண்ணகி முதலாயினோர் செல்கையில் எதிர்ப்பட்டு வழித்திறமுரைத்தவர்.

**கௌசிகன்** :—மாதவியின் ஓலை கொண்டுசென்று கோவலனைக் காட்டிற்கண்டு மறுமொழிபெற்றுச் சென்றவன்.

**மாடலமறையோன்**:—இவர், மதுரையில் கவுந்தியடிகளிருந்த அறப்பள்ளியிற் கோவலனைக்கண்டு அவனது புகழ்ச்செயலை விளம்பினவர்; கோவலன் மடிந்ததுவும் மதுரைச் செய்தியும் காவிரிப்பூம் பட்டினத்தில் வெளியிட்டவர் ; சேரன் செங்குட்டுவனைக் கங்கைக்கரையிற் சந்தித்துக் கோவலனாதியர் வரலாறு கிளர்ந்தவர் ; வஞ்சியில் செங்குட்டுவனை யாகம் புரியச் செய்தவர் ; திருச்செங்கோட்டில் தேவந்தி முதலாயினோர் வரலாறு தெரியச் செய்தவர்.

**மாதரி** :—மதுரையில் இடையர் குலத்தினள்; கவுந்தியடிகளால் கண்ணகியையும் கோவலனையும் அடைக்கலமாகக் கொடுக்கப்பெற்றவள்; அவ்விருவருக்கும் நேர்ந்த பொல்லாங்கைப் பொறுக்கலாற்றாது தீக்குதித்து மடிந்து, பின்னர்த் திருவநந்தபுரத்தில் சேடக்குடும்பியின் மகளாய்ப் பிறந்தவள்.

**ஐயை** :—மாதரி மகள்; தேவந்தி முதலாயினாருடன் கண்ணகியைத்தேடி திருச்செங்கோட்டை யடைந்தவள்.

**பொற்கொல்லன்** :—மதுரையில் கோவலனைக் கள்வனென்று பாண்டியனிடம் வஞ்சகமாகக்கூறிக் கொல்வித்தவன்; அரண்மனைத் தட்டான்.

**நெடுஞ்செழியன்** :—பாண்டிய மன்னன்; பொற்கொல்லனின் வஞ்சக மொழியால் தடுமாற்றமடைந்து கோவலனைக்கொல்லுமாறு காவலர்க்கு ஆணை கொடுத்தவன்; பின்பு, கண்ணகி யுரைத்த வழக்கால் உண்மையுணர்ந்து நெறிமுறை தவறினேனே யென்றேங்கி உயிர் நீங்கினவன்.

**கோப்பெருந்தேவி** :—பாண்டியன் நெடுஞ்செழியனின் மனைவி; கணவன் கண்ணகி வழக்கால் அரியணையினின்றும் விழுந்து மாண்டதைப் பொறாமல் உடன் வீழ்ந்து மாய்ந்த அறக்கற்பினள்.

**செங்குட்டுவன்** :—சேரவேந்தன்; கண்ணகி திருச்செங்கோட்டில் வந்து விட்புலஞ் சென்றாளென்பதைக் குறவர்களால் அறிந்து, இமயமலையினின்றும் கண்ணகி சிலையைச் செய்துவந்து நாட்டிக் கோயில்கண்டவன்; கனகவிசயர் ஆதிய ஆரிய மன்னரைப் போரில் வலியடக்கிச் சிறைபிடித்தவன்; மாடலமறை

யோன் வழுத்திய வண்ணம் இராசசூய யாகஞ்செய்தவன்.

**வேண்மாள்** :—செங்குட்டுவ வேந்தனின் மனைவி; கண்ணகியைச் சேரநாட்டில் நாட்டிச் சிறப்புச்செய்ய வேண்டுமென்று நாயகனுக்குக் கூறினவள்.

**சாத்தனார்** :—மதுரையில் தானிய வாணிகஞ் செய்தவர்; சேரன் செங்குட்டுவனுக்குக் கண்ணகி கோவலன் முதலாயினார் வரலாற்றை விளக்கினவர்; இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரத்தைக் கேட்டவர்; அதன் தொடர்பாகிய மணிமேகலை என்னுஞ் சிறந்த காப்பியத்தைப் பாடினவர்; கடைச்சங்கப் புலவருள் ஒருவர்; சீத்தலைச் சாத்தனார் என்றும் கூலவாணிகன் சாத்தனார் என்றும் அவரைக் கூறுப.

**இளங்கோவடிகள்**:—சேரன் செங்குட்டுவனின் தம்பி; இளமையிலேயே துறவு பூண்டவர்; கோவலன் கண்ணகி கதையாகிய சிலப்பதிகாரத்தைக் கனியினுங் கட்டிபட்ட கரும்பினும் இனிக்கும் வண்ணம் பாடியருளினவர்; கூலவாணிகன் சாத்தனார் பாடிய மணிமேகலையைக் கேட்டவர்.

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 9 | 16 | சமைத்தனர் | சமைப்பித்தனர் |
| 10 | 3 | பசுஞ்சோலைகள் | பசுஞ்சோலை |
| 11 | 11 | சிறந்தோரன்றெனிற் | சிறந்தோரல்லரெனிற் |
| 13 | 22 | அல்லையாயின் | இல்லையாயின் |
| 14 | 1 | சான்றுகள் தான் யல்லள் | சான்றுகள் தாம் யல்லேன் |
| | 20 | கடற்கரையில் | காவிரிக்கரையில் |
| 15 | 13 | வன | வன் |
| 16 | 9 | அப்போழுதே | அப்பொழுதே |
| 19 | 8 | தினளும், | தினளும் ஆகிய, |
| 20 | 7 | அமையாது | அமையா |
| 22 | 11 | அளைவ | அவளை |
| 36 | 7 | சூழ்ந்த ர் | சூழ்ந்தார் |
| 40 | 5 | க விரி | காவிரி |
| 41 | 20 | பட்டினப்பக்கத்தில் | பட்டினப்பாக்கத்தில் |
| 44 | 11 | அறிகுவம | அறிகுவம் |
| 65 | 13 | பேதமை | பேதைமை |
| 68 | 26 | பரிபவப்ப்ட்டாளாக | பரிபவப்பட்டாளாக |
| 95 | 20 | கோப்ெருந்தேவி | கோப்பெருந்தேவி |
| 99 | 24 | வேற்கண்ணாள் | வேற்கண்ணாள் ; |
| 115 | 14 | மூதுர் | மூதூர் |
| 123 | 19 | வாழ்த்தி சென்றனர் | வாழ்த்திச் சென்றனர் |

உ

கடவுள் துணை.

# வீரபத்தினி.

(கோவலன் கதை.)

காப்பு.

கரும்பும் இளநீரும் கட்டிக் கனியும்
விரும்பும் விநாயகனை வேண்டி—அரும்பவிழ்தார்ச்
சோமான் செய்த சிலப்பதிகா ரக்கதையைச்
சாரமாய் நாவே தரி.

## புகார்ச் சிறப்பு.

நீர்வளமும் நிலவளமும் மிகுத்துப் பூமடந்தையின் புனைகலமாகவும் நாமடந்தையின் நல் இடமாகவும் செல்வமும் சீரும் சிறந்துவிளங்கும் சோழநாட்டில், காவிரியாறு சடலொடு கலக்கும் சங்கமுகத் துறையையும்,

அககர், புறநகர்.

தூசுந் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையோ டளந்துகடை யறியா
வளந்தலை மயங்கிய

மாட மாளிகைகள் வனப்பொடு வயங்கும் அகலமான வீதிகளையும், பட்டாலும் எலிமயிராலும் பருத்திப்பஞ்சினு லும் அரிய நுண்ணிய சித்திரவேலைகள் பலிந்த நெய்தற் றொழிலாளர் செப்பு செய்குநர் மரங்கொல் தச்சர் கருங்கைக் கொல்லர் பொன்செய் கொல்லர் ஓவியம் எழுதுவோர் ஆயுள் வேதர் காலக்கணிதர் முத்துக்கோப்பார் சங்கறுப்பார் உள் ளிட்ட பல சிறந்த இன்றியமையாத தொழிலாளர்களின் இருக்கைகளையும், வெயிலெறி மணியும் நிலவெறி முத்தும் மின்னிடு பொன்னும் பட்டும் பவளமும் பல்வகை மணங் களும் உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையா உணவுப் பண் டங்கள் பலவும் பிறபொருள்களும் கொண்டுவிற்கும் கடை வரிசைகளையும், கடலோடிகளையும், பிறதேச வாசிகளையும், அகநகரினும் புறநகரினும் நிறையக் கொண்டிலங்குவது **பூம்புகார்** நகரம், இந் நகரத்திற்கு **புகார்**, **காகந்தி காவிரிப்பூம் பட்டினம், பட்டினம்** என்னும் பெயர்களும், உண்டு.

இந் நகரத்து அகநகருக்குப் **பட்டினப்பாக்கம்** எனவும் புறநகருக்கு **மருவூர்ப்பாக்கம்** எனவும் பெயர். அவ்விரு பாக் கத்துக்கும் இடையே நிரைநிரையாகத் தழைத்துநிற்கும் மரங்களை கால்களாக் கொண்டு கட்டிய கடைத் தொகுதி கள் நிறைந்த இடமொன்றுண்டு. அவ்விடத்திற்கு **நாளங் காடி** என்று பெயர். நிலமகளின் அணிமுடியில் அமைந்த

நடுநாயக மணிபோல்மிளிர்வது, புகார் நடுவிற் சமைந்த நாளங்காடி. இங்கே பண்டங்களைக்கொள்ளல் கொடுத்தலி லுண்டாம் ஓசை எந்நேரமும் கடலொலியைக் கடவா நிற்கும். இதில் நாளங்காடிப்பூதத்தின் பீடிகையும்' முத்துப்பந்தர் பட்டிமண்டபம் தோரணவாயில் ஆகிய அழ கொழுகு காட்சி நிலயங்களும், ஐவகை மன்றமும், பல கோயில்களும், பள்ளிகளும் பொலிந்திருந்தன.

அவற்றுள் நாளங்காடிப்பூதத்தின் வரலாறு வருமாறு இந்திரன் ஓர்காலத்தில் தனது நகரமாகிய அமராவதியைத் தவிர்க்கலாகாததொரு காரியப்பொருட்டுச் சிலநாள் பிரிவான் ஆயினன். அந்நாள் அவன் அமராவதியைக் காவல்புரிவார் யாருளர் என எண்ணினன். கதிரவன் குலத்துப் பிறந்த முசுகுந்தச் சக்கரவர்த்தி அஃதுணர்ந்து தானே காவல்புரிவதாக முன் வரலாயினன். அதுகேட்ட வானவர் கோமான் ஒரு பூதத்தை முசுகுந்தனுக்குத் துணையாகவிட்டு நீங்கினன் அஞ்ஞான்று மன்னர் பெருமானாகிய முசுகுந்தனொடு அவுணர்கள் மாறிட்டு மலைவாராயினர். முதலில் அவற்கு ஆற்றாது தோற்றோடிய கொடிய அவுணர்கள், பின்னுஞ் சூழ்ந்து வஞ்சக இருளம்பொன்று விட்டனர். அந்த அம்பி னின்றும் வெளிப்பட்டு நிறைந்த இருள் கண்ணொடு மனத் தையு மறைத்தமையின், அறிவும் மங்கிப் போரொழிந்து நின்றான் முசுகுந்தன். அக்காலை, வாசவனால் துணையாக விடப்பட்ட பூதம், ஓர் மந்திரத்தை அவன் செவியறிவுறுத் தது. அவ்வளவில், அவுணரது வஞ்ச அம்பின் இருள் உடைந்தொழியவே, மன்னர்பிரான் அவுணக்கொடியரைக்

நாளங்காடிப்பூதம்.

கொன்றுகுவித்து வென்றிகொண்டனன். இவற்றை அறிந்த வானவர்கோமான், என்றும் முசுகுந்தற்குக் காவலாக வென அப்பூதத்தை ஏவினன். அஞ்ஞான்று அவனால் நாளங்காடியில் கொடுவந்து நிறுவப்பெற்று, என்றென்றுஞ் சோழ மன்னர்கட்கு உறுதுணையாய் நின்று பாதுகாத்து வந்தது அப்பூதம். நாளங்காடியில் நிறுவப்பெற்றமையால் **நாளங்காடிப்பூதம்** என அதன்பெயர் வழங்கலாயிற்று.

மற்று, போரென்ன வீங்கும் பொருப்பன்ன திண் புயத்துக் **கரிகாற்பெருவளவன்** தமிழ்நாட்டில் தன்னோடு எதிர்த்துப் போரியற்று மன்ன ரின்மையின், வடதிசையிற் பகைப்போரைப் பெறலாமென்னும் கருத்தை உட்கொண்டு, நன்னாளில் வாளும் குடையும் முரசமும் வெளியேற்றி,

கொற்றப்பந்தர்
பட்டிமண்டபம்
தோரணவாயில்

நண்ணார்ப் பெறுகவிம்
மண்ணக மருங்கிலென் வலிகெழு தோளென

வேண்டி, வழிபடு தெய்வ வணக்கஞ் செய்து, நாற்படையும் புடைசூழ வடதிசைப் போயினன். இமையவருறையும் இமயம் வரைச் சென்றும் பகைவரைப் பெறாது ஏமாறித் திரும்புஞ் செம்பியன், அப்பாற் செல்ல வழிவிடாது எதிர்ந்துநின்ற இமயத்தின் பிடர்மீது தனது **புலிமுத்திரை**யைப் பொறித்து மீண்டான். மீண்டு வருங்கால், பகையின்றித் திறையாக **வச்சிரநாட்டு வேந்தன்** ஓர் **முத்துப்பந்தர்** தந்தனன்; **மகதநாட்டு மன்னன்** பகைத்துப் போராற்ற வியலாது ஒரு **பட்டிமண்டபத்தை** நல்கினன்; **அவந்தியரசன்** நட்புக் கொண்டு உயர்ந்த வேலைப்பாடுக ளமைந்த **வாயிற்றோரண**

மொன்று ஈந்தனன். அம்மூன்றும் பொன்னாலும் மணியாலும் இயன்றவை; எனினுங் கம்மியராற்செய்யப்படாதவை. அவற்றைத்தந்த மூன்றரசர்களின் முன்னோர்களும், ஒவ்வொரு காலத்தில் இன்றியமையா வுதவிகளைத் தேவதச்சனாகிய மயனுக்குச் செய்தனர். அவ்வுதவிகளுக்குக் கைம்மாறாக அவர்களுக்கு மயன் படைத்துத் தர வந்தனவாகும் அம்மூன்றும். அவை தம்மைக் கையுறையாயேற்ற கரிகாலன், அவற்றைத் தனது வாழ்க்கைத் தலைநகராகிய காவிரிப்பூம் பட்டினத்தில் நாட்டினன். படைப்பின் மேன்மையாலும், பலநாட்டுப் பலவூரின் கண்ணவாகிய அவை ஒரு நாட்டு ஒரு நகரில்வந்து ஒன்றியிருக்கும் அருமையாலும், அவற்றைப் பெரியோரும் போற்றுவர்.

இங்ஙனம் சிறந்த அம்மூன்றினையுந் தன்னகத்துக்கொண்ட புகாரில், உடையவர் காவலிலாது மூட்டு முதலியனவு

(க) வெள்ளிடை மன்றம். மின்றி வெளிப்படையாகப் பொன் பொதிந்த மூட்டை முடிச்சுகள் கிடப்பினும் திருட்டுப்போகாமற் காப்பதொரு மன்றம் உண்டு. இம் மன்றத்தின் மகிமையால், உடையவர் பெயரெழுதிக் குறியிட்ட எப்பொருட் பொதியும் வைத்தவை வைத்த விடத்திலேயே பத்திரமா யிருக்கும். உள்ளோரார் எவருங் களவு செய்தலில்லை. அயலூரார் அறியாமல் திருட்டெண்ணங் கொண்டு யாதாமொரு பொருளை யெடுப்பாராயின், அதனைத் தலையிற்சுமந்து ஆண்டுச் சுற்றிச் சுற்றித் திரிதலின்றி வெளியிற் கொண்டுபோகார். அங்ஙனங் கொண்டுபோக விடாது அறிவை மயக்குவது அம்மன்றம். இதனால் அப் பட்டினத்தில் களவே யில்லை. இதற்கு வெள்ளிடைமன்றம் என்று பெயர்.

இன்னொரு மன்றம், பொய்கை யொன்றைப் பக்கத் தேயுடையது. கூனிய வுடம்பினர், செவிடர், தொழுநோ யால் (குஷ்டம்) அழுகியமெய்யினர் ஆதிய பிணிகொண்டோ ரெல்லாம் அப்பொய் கையில் மூழ்கி அம் மன்றத்தை வலஞ்செய்யின் பிணிநீங்கி நல்லுடம்புபெறுவர். இதற்கு இலஞ்சிமன்றம் என்று பெயர்.

(உ) இலஞ்சி மன்றம்.

மற்றொரு மன்றத்தில், ஒளி வீசுவதொரு நெடிய கல் லுண்டு. இக்கல்லை ஒருமுறை சுற்றிவந்து வணங்கின், வஞ்ச னையால் மருந்திடப் பெற்று மதிமயங்கி னோர் மருந்தீடுதீர்ந்து நலம் பெறுவர்; நஞ்சுதின்றோர், பாம்பு தீண்டப்பட்டோர், பேய் பிடிக்க லுற்றோர் என்றின்னோ ரெல்லாம் அவ்வத் துன்பங்கள் நீங்கிச் சுகமடைவர் இன்னன துன்பநீக்கத்துக்குக் காரண மாயது அக்கல்லின் வெளிப்படும் ஒளியே யாம். இவ்வொளி நோயாளர் உடம்பிற் பட்டமட்டில் நோய் கெட்டோடும். இது **நெடுங்கல் நின்றமன்றம்** எனப்பெறும்.

(ந) நெடுங்கல் நின்ற மன்றம்.

இனி நாளங்காடியின் நாற்சந்தி மன்றத்தில் நிற்பது ஒரு பூதம்.

தவமறைந் தொழுகுந் தன்மையி லாளர்
அவமறந் தொழுகும் அலவைப் பெண்டிர்
அறைபோ கமைச்சர் பிறர்மனை நயப்போர்
பொய்க்கரி யாளர் புறங்கூற் றாளரென்
கைக்கொள் பாசத்துக் கைப்படு வோர்.

**அதாவது:**—'இழுக்கிய எண்ணத்தை யுள்ளே கொண்டு பலரும் நம்புதற்கேற்ற தவக்கோலத்தை மேலிற்பூண்டு

(ச) பூதசதுக்கம். தம்மை உலகு அறிந்துவிடாதவாறு அக் கோலத்தில் மறைந்தொழுகும் தீங்குடையோர், தம் பாசாங்கினாற் கணவர் தம்மீது ஐயங் கொள்ளாவகை மயக்கிக் கூடாவொழுக்கத்திற் பிறரொடு மருவும் மடவார், தன்னை நம்பிய அரசனைக் கீழறுக்கக் கருதிய அமைச்சர், பிறர் மனைவியரை விரும்பும் பேதையர், பொய்ச் சான்று புகலுவோர், ஒருவனை எதிரிற்போற்றிப் புறத்தே தூற்றுவோர் ஆகிய இவர்கள் என் கையிலுள்ள பாசத்தில் சிக்குவோராவர்' என்று நாற்காததூரம் கேட்கும் வண்ணம் தனது உரத்த குரலால் அப்பூதம் அறிவுறுத்தும். அங்ஙனந் தான் உணர்த்தியதை மீறி யாதானுமொரு தீச் செயலை யாரேனும் செய்யின், அவரை அதன் கைப்பாசம் கட்டி யிழுத்துவர, உடனே நிலத்தில் அறைந்து விழுங்கி விடும். இப்பூதம் ஆங்கிருப்பதால் தீ நிகழ்ச்சிகள் தலையெடுத்தலில்லை. அது நிற்கும் இடத்துக்குப் பூதசதுக்கம் என்றும் அதற்குச் சதுக்கப்பூதம் என்றும் பெயர் வழங்கலாயிற்று.

இனி, அரசன் செங்கோல் எக்காரணம் பற்றியேனுங் கோடுமாயின், அல்லது அறங்கூறவையத்தார் எப்போ

(ரு) பாவை மன்றம். தாவது நடுவுநிலை திறம்பி ஓரவாரத் தீர்ப்புக் கூறுவாராயின், நாவால் யாதும் ஓதாது கண்ணீர் சொரிந்து அழாநிற்கும் ஒரு பாவை. இப்பாவை நிற்கும் இடம் பாவைமன்றம் எனப் பெயர் பெறும்.

மேலே எண்ணிட்ட ஐந்தையும் ஐம்பெருமன்றம் என்று சேர்த்துச் சொல்வதும் உண்டு.

இவையேயன்றி, இந்நகரின் சிறந்த நிலயங்களுட் சக்கரவாளக்கோட்டமும் ஒன்று. எல்லா உலகங்களையும் தன்

சக்கரவாளக் கோட்டம்.

னுள் அடக்கிய கோளத்தைச் சக்கரவாளம் என்பது பௌத்தநூலார் வழக்கு. காவிரிப்பூம்பட்டினம் தோன்றிய காலம் முதலாக வுள்ளதொரு சுடுகாட்டின் பக்கத்தே யுள்ளது இச் சக்கரவாளக் கோட்டம். இது ஆக்கப்படுதற்கு முன்னெல்லாம் இப் பகுதி சுடுகாட்டுக் கோட்டமாக மட்டுமிருந்தது. இச் சுடுகாடு பலவகைக் கட்டடங்களையும் உடையது. இதை யொரு நகரமென் றெண்ணிச் சார்ங்கலன் என்னும் பார்ப்பனச் சிறுவனொருவன் தனியே அங்குச் சென்றனன். அவன் அங்குக் களித்தாடிய வொரு பேயால் அறையப்பட்டு, அலறிச்சென்று தன் தாயாகிய கோதமையை அடைந்து, "அம்மே! சுடலைப் பேய்க்கு உயிரைக் கொடுத்தேன்" என்று வீழ்ந்து இறந்தான். இறந்த மைந்தனைத் தோளிலிட்டு அப் பட்டினத்துக் காவற்றெய்வமாகிய சம்பாபதி திருமுன் சென்று, "என்னுயிரை எடுத்துக்கொண்டு என் மகன் உயிரை மீட்டுத் தந்தருளல் வேண்டும்" என்று கோதமை புலம்பினள். அதற்குச் சம்பாபதி மனமிரங்கி, "போன உயிரை மீட்டுத்தருதல் என்னா லாகுங்காரியமன்று, வருந்தாதே" எனப் பகர்ந்தனள். "கேட்ட வரங்களைத் தெய்வம் தருமென்பது நூல் வழக்காகவும் யான் வேண்டிய இவ்வரத்தைத் தந்தருளாயாயின் இப்பொழுதே உயிர்விடுவேன்" என்று கோதமை கூறினள். அதற்குச் சம்பாபதி, "ஈண்டுள்ள தேவர்களில் எவரேனும் நின் விருப்பத்தை நிறைவேற்று

வாராயின் யானும் அவ்வண்ணம் செய்தல் கூடும், என் ஆற்றலைக் காண்பாய்" என்று கூறி நான்குவகை அருவப்பிரமகணங்களையும், பதினாறுவகை உருவப் பிரமகணங்களையும், இரு சுடர்களையும், அறுவகைத் தெய்வ கணங்களையும், அசுர கணங்களையும், எண்வகை நரகர்களையும், பல விண்மீன் கூட்டங்களையும், அச்சுவினி முதலிய நாட்களையும், கோட்களையும் தன்னகத் தடக்கிய சக்கரவாளக் கோட்டத்தின் வரந்தரு தேவரையெல்லாம் வரவழைத்து, அவள் முன் நிறுத்தி "இவள்கொண்ட இன்னல் இதுவாகும், இதனைத் தீர்ப்பீராக" என்று மொழிந்தனள். அவர்களும் போன உயிரை மீட்டளித்தல் தம்மாலாகா தென்று சம்பாபதி மொழிந்தவாறே சாற்றினர். கோதமை ஒருவாறு மனந்தெளிந்து மகனைச் சுடுகாட்டிற் சேர்த்துவிட்டு உயிர் துறந்தாள். பின்னர், சம்பாபதியின் ஆற்றலை உலகினுக்கு வெளிப்படுத்தவும், எல்லாத் தேவர்களும் ஓரிடத்தில் கூடிய தன் அறிகுறியாகவும் ஆண்டொரு கோட்டம் சமைத்தனர். அக்கோட்டம் மேருமலையும், அதைச்சூழ்ந்த ஏழு மலைகளும், நான்கு பெருந் தீவுகளும், இரண்டாயிரம் சிறு தீவுகளும், பிற சீரிய இடங்களும், அவற்றில் வாழ்வார்களும் அடங்கிய உருவங்களை விளக்கி மயன் என்னுந் தெய்வத் தச்சனால் நிருமிக்கப்பட்டது.

வனங்கள். இனி, காவிரிப்பூம் பட்டினத்தில் இலவந்திகைவனம், உய்யானவனம், சம்பாதிவனம், கவேர வனம், உவவனம் எனவழங்கும் பல சோலைகள் உண்டு.

இவற்றுள் இலவந்திகைவனம்: இயந்திரங்களைக் கொண்ட குளத்தை அகத்தேயுடையது. அக்குளத்தினைச் சூழ்ந்த பசுஞ்சோலைகள் சோழவேந்தர்கட்கு வேனிலையும், இளந் தென்றலையும் மன்மதன் திறைப் பொருளாக வழங்கினாற் போன்று மலர் பல அலர்ந்து மகிழூட்டுவது; மன்னர் பெருமான் மனைவிமாரோடுசென்று விளையாட்டயர்வது.

**உய்யானவனம்:** பாசத்தைக் கைபிற் கொண்ட பூதத்தின்காவலை யுடையது. அவ்வனத்தின் மலர்கள் தேவர்களால் விரும்பப்படுபவை. அம்மலர்கள் வாடுவதில்லை; வண்டு நுகர்வதில்லை.

**சம்பாதிவனம்:** சம்பாதி, சடாயுவொடு உடன் பிறந்த பறவை. அவ்விரு பறவைகளுந் தங்களுள் யார் மிக உயரப் பறப்பது என்பதில் மாறுகொண்டு பறக்கலாயின. சம்பாதி மிக உயரச் சென்றமையின் ஞாயிற்றின் வெம்மையால் இறகுகள் எரிந்து வீழ்ந்தது. இப்பறவை தங்கியிருந்தமையால் இதற்குச் சம்பாதி வனமென்று பெயர்.

**கவேரவனம்:** காவிரி யாற்றை யீன்றோனாகிய கவேரன் என்னும் அரசரிஷி யிருந்து தவஞ்செய்த இடமாதலால் அஃது அப்பெயர் பெற்றது.

**உவவனம்:** அருளும் அன்பும் ஆருயிரோம்பும் ஒரு பெருங்கொள்கையும் ஒழியாது, நோன்பு பூண்ட பகவனது ஆணையாற் பூக்கும் பன் மரங்களையுடையது. அவ்வனத்தில் ஓர் பளிங்குமண்டபம் உண்டு. அது தன்பால் இருப்போரின் ஒலியை வெளிப்படுத்தாமல் உருவைமட்டும் வெளிப்படுத்தும். அம்மண்டபத்தில் மாணிக்கச்சுடர் பரந்தொரு

பதுமபீடம் உளது. அப்பீடத்தில் அரும்புகளை யிட்டால் மலரும். பல்லாண்டு கழியினும் அதிலிட்ட மலர்கள் வாடா. அம்மலர்களில் வண்டுகள் மொய்யா. எதனையுங் கருதாது அப்பீடத்தில் மலரைப்பெய்தால் அவை அங்ஙனே கிடக்கும். ஏதேனுமொரு தெய்வத்தை நினைந்து அதிற் பெய்தால் அங்ஙனம் பெய்தமலர்கள் பீடத்தை நீங்கி அத்தெய்வத்தின் அடிகளிற் செல்லாநிற்கும். இது மயனாலாக்கப் பட்டது.

நிற்க, ஒருநாட்டில் அல்லது ஊரில் சீரும் செல்வமும் அளவுகடந்து சிறந்திருக்கு மெனினும் ஆங்குள்ள மகளிர் நலஞ்சிறந்தோரன்றெனிற் பயனில்லை. அதிலுங் கற்புடை மகளிர் இல்லா நாடு வறிய காடேயாகும். ஆகலின், அவ்வகையாலும் பூம்புகார் சிறந்ததென்பதைப் பின்வரும் வரலாறுகள் தெளிவுறுத்துவன வாகும்.

(க) இந் நகரில் அளவில்செல்வத்து வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு ஒரேயொரு மகள்தா னுண்டு.

பத்தினிப் பெண்டிர்.

இப்பெண் பிறப்பதற்கு முன்பு மதுரையில் மற்றொரு பெண்ணை வதுவைபுரிந்து வாழ்கின்ற தனது மருகனுக்கே தன்மகளையுஞ் செல்வங்களையுங் கொடுப்பலென்று பல்லோரும் அறியக் கூறிக் கொண்டிருந்த அவ்வணிகன், சின்னாளில் உயிர்துறந்தான். அதனை யாற்றாத அவன் மனைவியும் அந் நாளிலே இறந்து பட்டாள். சுற்றத்தார் மதுரைக்கு ஓலை போக்கினர். அவ்வோலைகண்ட மருகன் ஆற்றொணாத் துயரத்தனாகி, அண்டையிலுள்ளார் தேற்றத் தெளிந்து, காவிரிப்பூம் பட்டினஞ்

சென்று, மாமன் இல்லைச் சேர்ந்திருந்தான். மாமன் கருத்தை அவனுக்குக் கிளைஞர் விளம்பினர். அதற்கிணங்கிய அவன், தம்மூர்ச் சுற்றத்தார்முன்பு மன்றல் புரிவேனென வாக்களித்து, அச் செல்வியையும் செல்வங்களையும் ஏற்றுப் புகாரை நீங்கினன். பொருள் பண்டங்களையெல்லாம் அவனுடன்வந்த உறவினர்கள், அவன்கட்டளைப்படி எடுத்து முன்சென்றார்கள். இவன் மாமன்மகளோடும் பின்சென்றான். அங்ஙனஞ் சென்றவன், திருப்புறம்பயம் என்னும் பதியை அடைந்து, அன்றிரவு அவண் தங்கி வைகறையில் வழிச் செல்வாமெனக் கருதி, வன்னிமரமும் மடைப்பள்ளியும் கோயிலும் கிணறுமுள்ள ஓரிடத்தில் வதிந்து, உணவுசமைத்துண்டு உறங்கலாயினன். உறக்கத்தில் அவனை அரவந்தீண்ட, உடனே விடந்தலைக்கேறி மாண்டான். ஊற்றதையறிந்த அப்பெண்மணி, இரவெல்லாம் ஏங்கி உருகி அழுதனள். தந்தையைத் தாயை இழந்த தமியள், துணைவன்கதியும் இன்னவாறாயின் என்செய்வாள் பாவம்! துக்கமே உருக்கொண்டதுபோல் தோன்றினாள். காலையில் அவ் வூரும் அறிந்து உருகிற்று.

துணையிழந்த அந்த எளிய பெண்ணுக்கு இரங்கி, இறைவன் எழுந்தருளி, மாண்டு கிடக்கும் வணிகனைக் கடைக்கணித்தருளலும், அவ் விடங்கொண்ட வணிகன் விடங்கொண் டெழுந்தான். இறைவனைக் காணும் தவமுடையாள் அழுகை நீத்தாள்; உவகை பூத்தாள். பின்னர், வணிகன் தனக்குநேர்ந்த இன்னலை உணர்ந்தான். இருவரும், தம்பொருட்டு இங்ஙனம் கருணைபாலித்த இறைவனைப் பலவாறாகப் புகழ்ந்து போற்றினர். இதுகாறும்

அும் மயிலியலாள் அவன் உடம்பைத் தீண்டினாளில்லை. வதுவை யானலன்றி மாமன்மகனாகிய அவனையும், உயிர்க் கிறுதி நேர்ந்த காலத்தினுங்கூடத் தீண்டுதல் கற்புநெறி யன்றெனக் கருதியிருந்தாள். அப்பொழுது "இவ்விடத் திற்றானே மணஞ்செய்து செல்மின்" என்று இறைவன் அருளலும், அக் கட்டளையைச் சிரமேற்கொண்டு, "அண் ணலே! சுற்றத்தார் யாருமில்லாத இவ்விடத்தில், நீவிரே அடியேங்கட்குத் தாயுந் தந்தையும் ஒக்கலும் பக்கமும்" என்று வணிகன் பணிந்தனன். மணமுடிந்தது. அப்பால் அவர்கள், இறைவனைப் பன்முறை வணங்கி, விடைகொண்டு, மதுரை சென்று வாழ்ந்து மகப்பேறும் பெற்றனர். அவன் றன் முதல்மனைவிக்கும் மக்களுண்டு. ஓர்நாள் இருவர்மக்க ளும் விளையாடுங் கால், மூத்தாள்மக்கள் தன்மைந்தனை அடிக்கவே, அவர்களை அடக்குவான்கருதி, சற்றுக் கடு கடுத்து இளையாள் அதட்டினாள். அதுகேட்ட மாற்றாள் கனன்று, "அடீ பேதாய்! நீ என் அருமைமக்களை வைதல் சாலுமோ?நீயாவள்?நின் ஊர் யாது?நின் தந்தைதாயர் எவர்? நினக்குமணமுடிந்தது எவர்முன்பு? உற்றார்பெற்றார் இன்றி வறிதேயுழன்ற நீ, என் நாயகன் எழில்கண்டு மயங்கிவந்த காமக்கிழத்தியல்லையோ? என்கணவன் உன்னை வதுவை முறைப்படி கைப்பிடித்தார் என்பதற்குச் சான்றுண்டோ? உண்டேல் காட்டுவாய்; அல்லையாயின் உன் பொல்லாவாயை மூடிஅடங்குவாய்" என்று கொடுமொழி கொட்டினாள். இளையவள் உளம் நொந்து, "சான்றுகள் உள; அவை திருப்புறம்பயத்து வன்னியும் கிணறும் இலிங்கமும் மடைப்பள்ளியும்" என்றாள். "ஆ! ஆ!! அப்படியா! ஏற்ற

சான்றுகள்தான். யான் பிச்சி யல்லள். என்னை உன்னால் ஏமாற்ற வியலாது. நீ சொல்வது மெய்யாயின் அவற்றை இங்கே காட்டு பார்ப்போம்'' என்று மூத்தாள் வீம்பு கூறினள். இளையாள் யாது செய்வாள்! தன்னந்தனியளாகிய எனக்கு இறைவனே துணை யென்று மனங்கவன்று சொக்கலிங்கப் பெருமான் திருமுன் சென்று, கற்புத்தெய்வமே நின்று கரைவதுபோல் உள்ளங்கரைந்து, நாத் தழுதழுப்ப ''எம்பெருமானே! அடியாள் மணத்துக்குச் சான்றாகிய அவை இங்கே தோன்றி என் இன்னல் தீர்த்தாலன்றி உயிர் வாழேன். எளிமையேன், குலையாத கற்புடையேனாகில் அவைஇங்குவர அருள்புரிக''என்று முறையிட்டாள். அப்பொழுது அண்ணலருளால் அவை கோயிலின் ஒருபுறத்தே தோன்றலாயின. உடனே மூத்தாளை அழைத்து வந்து காட்டினாள். ஊராருங்கண்டு புகார் நகரத்தாளைப் புகழ்ந்தனர். அவள் கற்பின் மேம்பாட்டையும் தெய்வ வழிபாட்டையும் வியந்தனர். மூத்தாள் வருந்தினள். கணவனும் அவளைப் பழித்தான். தன் கற்பு நிலை வெளிப்பட்டது அவளாலே யாகலின், இளையாள் அவளைத் தழுவிக்கொண்டாள். அன்று முதல் இருவரும் ஒத்து வாழ்ந்தனர். *

(உ) இந் நகரத்தின் கடற்கரையில் ஒருநாட் பல நங்கைகள் கூடி விளையாடினர். அதில் ஒருத்தியைச் சில

---

* இவ்வரலாறு இங்ஙனமாதலை, செந்தமிழ் தொகுதி—கஉ பகுதி—எ-ல் 'திருவிளையாடற் புராணம் 64-வது படல ஆராய்ச்சி' என்ற தலைப்பின்கீழ், திருப்புறம்பயம் ஸ்ரீமான் T. V. சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் எடுத்துக்காட்டிய திருப்புறம்பய புராணம் 6-வது சருக்கச் செய்யுட்களும் பிறவும் விளக்குகின்றன.

மகளிர் பார்த்து "அடீ பெண்பாவாய்! இதுதான் உனது கணவன்" என்று தாங்கள் புனைந்து விளையாடியதொரு மணற்பாவையைக் கூறினர். அக் கோதில் குணத்தாள் "கல்லென்றாலுங் கணவன்" என்ற முறையில் மெய்யே யென்று நம்பினள். அம் மடக் கொடிக்குக் கொழுநனே தெய்வமென்ற கொள்கை இயற்கையாகவே நிரம்பி யிருந்தமையின் அந்த மணற்பாவை மீது பரிவுகொண்டு தன்னோடு வந்த பெண்களுடன் செல்லாமல், கடல்நீர் கரைத்து விடாதபடி அதனைக் காத்து நின்றாள். இதுபற்றி அவள் சீரிய கற்புடையாளென்று யாவரும்கொண்டாடினர்.

(௩) சோழன் கரிகாலன் மகள் ஆதிமந்தி என்பாள் கல்வி கேள்விகளிற் சிறந்தவள். அப்பெருமாட்டி, தன் கணவன சேரன் ஆட்டனத்தி யொடு கழார் என்னும் ஊரில் காவிரி யாற்றின் துறையில் நீராடுகையில், அவனைக் காவிரி வெள்ளம் கவர்ந்து சென்றது. ஆதிமந்தி காதலனைப் பல பக்கங் களினுந் தேடிக் காணமல், "கல் நவில் தோளாயோ" எனக் கூவிச் சென்று கடற் கரையிற் புலம்பி நின்றாள். கடலானது கற்புத்திறன் மிக்க அப்பெண்மணியின் ஆற்றுமைக்கிரங்கி அவனைக்கரையோரத்திற் கொண்டுவந்துவிடுத்தது. இந் நிகழ்ச்சியை யறிந்த மருதி என்பாள் நீராடிக் கொண்டிருந்தவள், அச்சேரர் கோமானைக் கண்டு அழைத்துவந்து ஆதிமந்தியோடு கூட்டினள். கணவன் உயிர் மீட்ட கற்பரசியாம் ஆதிமந்தி களித்துப் பொன்னங்கொடிபோல அவனைத் தழுவிக் கொண்டு போயினள்.

(௪) இன்னொரு மங்கையின் மணவாளன், வேற்று நாட்டுக்குப் பொருளீட்டற் பொருட்டுக் கப்பலேறிச் சென்

திருந்தான். அவன் மனைவி 'கொழுநன் வருங்காறும் இந்த எழிலுடம்போ டிருப்பேமாயின், நம் கட்டழகைக் கண்டு எவரேனுங் காமுறுதல் கூடும். அங்ஙனம் பிறர் காமுறும் நிலைமையில் நாமிருத்தல் கற்பன்று. பிறர் இச்சிப்பதற்கு உரியதன்று இவ்வுடம்பு ஆகலின் வேற்றுருவங் கொள்ளலே விரும்பத்தக்கது' என்று மனவுறுதி கொண்டு கணவன் வரும் வரையில் அடியாட்குக் கல்லுருவம் வாக்கடவதாக வென்று எண்ணினள். கற்பு மங்கையர்க்கு எதுதான் இயலாதது. அப்போழுதே அவள் நல்லுருவம் நீங்கிக் கல்லுருவம் பெற்றாள். அவ் வுருவோடு, ஒரு மணமலி பூங்கானலிற் கணவன்வருகையை எதிர்பார்த்துநின்றனள். சில நாட்சென்று அவனும் வந்தான். இவளுங் கல்லுருவம் நீங்கினள்.

(ரு) அப் பட்டினத்தில் ஒருவனுக்கு இரு மனைவிகளிருந்தனர். அவ் விருவருக்கும் இரு பிள்ளைகளுண்டு. அதில் ஒருத்தியின் பிள்ளை கிணற்றில் வீழ்ந்து இறந்தது. அதுகண்ட மற்றவள், 'நமது கணவனிடத்தில் நம்மைப் போன்ற சம உரிமை படைத்த மாற்றாள் குழந்தையை இழந்தாளாக, நாம் மட்டுங் குழந்தையொடு குலாவுதல் முறையன்று' என எண்ணித் தன்பிள்ளையையுங் கிணற்றில் தாழ்த்திவிட்டாள். அவளுடைய வீரக் கற்பினாலும், நடுவு நிலைமையாலும், இரு பிள்ளைகளும் உயிருடன் மிதந்து வரலாயின. இருவரும் அம் மக்களை மகிழ்வொடு எடுத்து மருவி வாழ்ந்தனர்.

(சு) இன்னொரு நல்லாள், தன் மணமகன் ஊரிலில்லாத காலத்தில், ஒருவன் தன் முகத்தைக் காமக் குறிப்போடு உற்று உற்று நோக்குவதைக் கண்டாள். 'நாம் அழகிய முகம் படைத்ததாலன்றோ அன்னியன் இப்படிப் பார்த்தனன்! நாம் இனியும் இவ் வண்ணமே யிருக்கின் கற்புக்குத் தாழ்வுண்டாகும். இந்த இழுக்கத்துக் கேதுவான முக அழகு நமது ஆருயிர்க் காதலன் வரும் வரையில் வேண்டாம். ஆதலால், தூங்கு முகம் கொள்ளலே தகுதி; அங்ஙனம் ஆகக்கடவது' என நினைத்தாள். அவள் கற்பின் வன்மைபால் உடனே குரங்கு முகம் வரப்பெற்றாள்; மணமகன் வருமட்டும் அப்படியே யிருந்து அவன் வந்தவுடன் பழைய எழில் முகத்தை யெடுத்தனள்.

(எ) வேறு இரு சிறுமிகள், மணலிற் சிற்றில் கட்டி விளையாடுங்கால், "எனக்கொரு பெண்ணும் உனக்கொரு ஆணும் பிறந்தால், அவ்விருவரையும் மணமக்களாக்குதற்கு உடன்படுகிறாயா?" என்று ஒருத்தி மற்றொருத்தியைக் கேட்க, அவளும் உடன்பட, இருவரும் முடிவு செய்து கொண்டனர். பின்னர், இவ்விருவருக்கும் அவர்கள் பேசிக்கொண்டவாறே பெண்ணும் ஆணும் பிறந்தன. ஆனால், ஆண் குழந்தை முடமாக விருந்தது. அவ்விரு மக்களும் வளர்ந்து மணப்பருவம் எய்தினர். அப்பொழுது, பெண்ணின் தாய் தன் கணவனை நோக்கி, "காதல! நான் இளம்பிராயத்தில் இன்னாளோடு இன்னவாறு சிற்றில்கட்டி விளையாடுகையில் பேசியதுண்டு; பேதைமைப் பெண்புத்தியால் இப்படி அறிவிழந்து பேசிய என் மனம் நம் அரு

மைக்குமரியை முடவனுக்கா கொடுப்பதென்று அவலமுறு கின்றது; யாது செய்வேன்!" என வருந்திக் கூறினள். இவ்வண்ணம் தந்தைக்குத் தாயுரைப்பக்கேட்ட இளங் கொடி, 'இன்னானுக் கென்று நம் தாய் வாக்குச்செய்தபின் ஐயம் ஏன்? அவனுக்கே நாம் உரியோம்' என்று துணிந்தாள்; கோடிப்புடைவையுடுத்தாள்; குழலைவாரிமுடித்தாள்; மணக் கோலம் கொண்டாள்; முடவனைத் தலைவனாகக்கொண்டு வாழ்ந்தாள். இதனால் இந்தக்கட்டிளம் பெண்ணின் நிறை திறம்பாச் செயலை யாவரும் கொண்டாடினர்.

மேற்கூறிய கற்பரசிக ளெல்லாம் காவிரிப்பூம்பட்டி னத்தாரே. இவர் போன்ற எண்ணிறந்த பத்தினிப் பெண் டிரை யுடையது அப்பட்டினம்.

## கோவலன் வாழ்க்கை.

இங்ஙனம் எவ்வாற்றானும் தலைசிறந்த காவிரிப்பூம் பட்டினம், பெரியோர்களாற் பலபடப் பாராட்டிப் புகழப் பட்டது; சோழ மன்னர்களின் பழைய தலை நகராக வயங்கியது. அப் பட்டினத் தில் சோழன் கரிகாலன் தனி முடி கவித்து அரசுபுரிந்த காலத்தில் இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்று மூவகை வணிகர் குலம் இருந்தன. அவற்றுட் பெருங்குடி யர் குலத்திற்பிறந்தோன், குபேரச்செல்வம்படைத்தோன், இல்லாதார்க் கீந்தருளுங் குணநிதி, மாசாத்துவான் என் பான் ஒருவன் இருந்தான். அவன்றன் அருமைப் புதல் வனும், பதினாறாண்டு நிரம்பியவனும்,

திருமணம்.

மண்டேய்த்த புகழினன் மதிமுக மடவார்தம்
பண்டேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டிக்
கண்டேத்துஞ் செவ்வேளென் றிசைபோக்கிக் காதலாற்
கொண்டேத்தும்

பேரழகனும், ஆகிய கோவலன் என்பானுக்கு, அந்த நகரில் அப் பெருங்குடி வணிகர்மரபிற் றோன்றிய மேகம்போலும் ஈகையாளன் மாநாய்கன் மகளும், பன்னீராண்டுப் பருவத்தினளும்,

போதிலார் திருவினாள் புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்றும்
மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக்

கண்ணகி யென்னும் பெண்மணியைப் பல்பெருஞ் சிறப்புடன் மணம் புரிவித்தனர்.

தடமலர்க் கட் கண்ணகியும் காதலனும், அளவுகடந்த அன்புடையராகி, உயர்ந்த மேனிலை மாடத்தின் நடுவே, மயன் என்னும் தெய்வத் தச்சனால் நிருமித்து வைத்தது போன்ற வனப்பு மிக்க அமளிமிசைச் சென்றிருப்பாராயினர். அப்பொழுது, கோவலன் திருமகள்போலும் நலமிக்காளின் மதிமுகம்பார்த்து,

இன்பந் துய்த்தல்.

"மாசறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசறு விரையே! கரும்பே! தேனே!
அரும்பெறற் பாவாய்! ஆருயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே!

நினக்கு உவமை யாது கூறுவேன்! நின் உயர்வை என்னென்று புகழ்வேன்! நினது இன்பச் சுவையை எச்சொற்

களால் வருணிப்பேன்! எனது உயிரினுஞ் சிறந்த அருமைக் காதலி! நின்னை,

மலையிடைப் பிறவா மணியே யென்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே யென்கோ
யாழிடைப் பிறவா இசையே யென்கோ.

அன்னமே! என்னென மொழியினும் என் சொல்லளவில் நின் செவ்வியும் இனிமையும் அமையாது" என்று இங்ஙனம் பல சொல்லிப் பாராட்டி இரதியும் மதனனும் போன்றும், அன்றிலும் அகன்றிலும் போன்றும், உடலும் உயிரும் போன்றும் ஒன்றி வாழ்வாராயினர்.

இவ்வண்ணம் வாழ்ந்துவரும் நாளில் ஓர்நாள் கோவலன் தாயாகிய பெருமனைக்கிழத்தி கண்ணகியுங் கோவலனும் தனிமனை யிருந்து சுற்றந்தழுவல், துறந்தோர்ப் பேணல், வறியோர்க் கீதல், விருந்து புறந்தருதல் ஆகிய அன்பு அருள் இன்சொல் முதலியன விரவிய, உயரிய மனையறத்தை மேன்மைபெற நடத்தலைக் காண விரும்பி, வேறொரு மாளிகையில் இல்வாழ்க்கைக்கு வேண்டிய எல்லாப் பண்டங்களையும் வளம்பட நிரப்பி, பணியாளர்கள் தாதிகள் முதலாயினேரையும் அமைத்து அவ் விருவரையும் குடியேறச் செய்தனள், மனையறத்திற்கேற்ற வாழ்க்கைத் துணைவியாகிய மெல்லியலாளும் அவளது கொழுநனும் வாய்மை முதலிய ஒழுக்கம் வழுக்குதலின்றி மலர்மகளும் மலர்த்துளவத் திருமாலும் ஒப்ப மனவொருமை யுடையோராய் இல்லறத்தைச் செவ்வனே நடத்தி வருவாராயினர். இவ்வாறு சில ஆண்டுகள் கழிந்தன.

தனிமனைப் புகுதல்.

இனி, அவ் வூரில் நாடகக் கணிகையர் குலத்தில் சித்திராபதி யென்பாளின் மகள் மாதவி பன்னீராண்டு நிரம்பிய பருவத்தினள் ஆடல்பாடல் அழகு ஆகிய மூன்றினுங் குறைபாடின்றிச் சிறந்திருந்தாள். மாதவி அவை மூன்றும் நிரப்புதற்குரிய தகுதியுடையவள். எவ்வாற்றாலோவெனின், இந்திரன் அவைக்களத்தே தயாடிய உருப்பசி இந்திர சிறுவனாகிய சயந்தன்மீது கொண்ட விருப்பத்தால் மனமழிந்து, ஆடல் பாடல்களின் வழூவினாள்; அதனைக் குறிப்பாலுணர்ந்த குறுமுனி முனிந்து அவளை 'மண்ணிற் பிறக்க' வெனச் சபித்தனர். உருப்பசி அவ்வாறே பிறந்து, மாதவி யென்னும் பெயர் பெறலாயினள். அந்த மாதவியின் கால்வழியிற் பிறந்தவள் இந்த மாதவி. ஆகலின் எழிலே இசையே நாடகமே என மூன்றும் அவளிடத்துப் பொலிந்திருத்தல் இயல்பே. அப்பால்,

மாதவி நடனம்.

நன்னர் விருப்புடையோள் நற்குணமு மிக்குயர்ந்தோர்
சொன்னகுலத் தாலமைந்த தொன்மையளாய்ப்—பன்னிரண்
[டாண்
டேய்ந்ததற்பின் ஆடலுடன் பாடல்அழ கிம்மூன்றும்
வாய்ந்தஅரங் கேற்றல் வழக்கு.

என்றவாறு, மாதவியைச் சோழன் கரிகாற் பெருவளத்தான் திருமுன் அவனது அவையரங்கத்தே ஆட்டுவித்தற்கு அவளைச் சார்ந்தார் விழைந்தனர். மன்னன் அனுமதியும் பெற்றனர். குறித்த நாளில் மாதவி அரங்கேறி, நாட்டிய நூல்களிற் கூறிய முறைபிறழாமல், ஆடியும் பாடியும் அபிநயித்துங் காட்டினள். இவளது அழகினொடு ஆடலிலும் பாடலிலும் அபிநயத்திலும் ஈடுபட்டு, நெஞ்சம்

அழிந்து, காமக் களிமயக் கெய்தினன் மன்னர் பெருமான். மீண்டும், இவள்பால் எண்ணஞ் செலுத்தின் இகழுண்டா தல் திண்ணமாதல் கண்டு, அறிவைத் தெளிவு செய்து கொண்டு, தலையரங்கேறும் நாடகக் கணிகையர்க்கு ஆயிரத் தெட்டுக் கழஞ்சு பொன் கொடுத்தல் நூல் வழக்காகலின் இவளுக்கும் அவ்வாறே தலைவரிசைகொடுத்து விடுத்தனன்.

மாதவி நட்பு.

மாதவி மன்னவன்பாற் பெற்ற வரிசையினுள்ள பரிச மாலையை, அவளைச் சார்ந்தார், மான்போலுங் கண்ணினை யுடைய கூனி கைக்கொடுத்து நகரின் பெருந்தெருவில் விலை கூறுமாறு நிறுத் தினர். அதைக் கண்டான் கோவலன்; 'பரிசமாலையின் பெறுமதி ஆயிரத்தெண்கழஞ்சு பொன் என்றும், அதைக் கொடுத்து மாலையைப்பெற்று மாதவிக்குச் சூட்டுவோர் அவ ட்கு மணமகனாதல் கூடுமென்றும்' கூனி கூறினள்; உடனே மாலையைவாங்கினன்; அவளொடு மாதவி மனைக்குச் சென் றான்; அவளை மாலைசூட்டி மணந்துகொண்டான்; அவள் தன் அழகில் மயங்கினன்; அறிவு கலங்கினன்; மாதவியாம் காதற் கடலில் மூழ்கிக் கரையேற வொண்ணாது செயலற்று ஆழ்ந்தனன்; அவளையன்றிப் பிறிதொரு பொருளுஞ் சிறந்த தில்லையென்று நம்பினன்; கைப் பொருள் எவற் றையும் நாளும் நாளும் மாதவிக்குக் கொடுத்தான்; மனை வாழ்க்கையை முற்றும் மறந்தான்; கண்ணகியைக் கனவி லும் எண்ணாது துறந்தான்.

இந்நிலையில், அளவற்ற மகிழ்வுடன் கோவலனொடு கூடிவாழப் பெற்றுளாகிய மாதவி, பெண்மக வொன்றை

யும் பெற்றாள். மாதவி சுற்றத்தார், அம் மகவுக்கு என்ன பெயர் இடலாமென்று கோவலனை வினவினர்.

அதற்கு அவன், "கூறுவன் கேளீர்! முன்னொரு காலத்து, எனது குலத்தோன் ஒருவன், மரக்கலம் ஏறிப் பொருளீட்டச் சென்றான்; காற்று மிகுதியால், கப்பல் சிதைய, வேறு வழியின்றி, கடலில் உடைகலத் துண்டொன்றைப் புணையாகக்கொண்டு, சிலநாள் தத்தளித்து நிற்பானாயினன். அன்னோன், முன்னைப் புண்ணியம் உள்ளோனாதலின், ஆங்கோர் தெய்வந் தோன்றி, 'அஞ்சேல்! இதோ வந்தேன்; என்பேர் மணிமேகலை; சில தீவுகளை அரக்கர் பகை நீக்கிக் காக்கும் பொருட்டு, இந்திரன் என்னை ஏவியவாறே பாதுகாத்து வருகின்றேன்; நின் துயர் கண்டு அதனை நீக்குதற்கு ஈண்டு வந்தேன்' என்று உரைத்து அவனைக் கரை யேற்றிற்று. ஆகலின், மணிமேகலா தெய்வம் எமக்குக் குலதேவதை யாகும். அதன் பெயரையே மாதவி மகளுக்கும் இடல் வேண்டும்" என விடை யிறுத்தான். அவ்வாறே பெயரிட்டு மகிழ்ந்தனர்.

கண்ணகியின் பிரிவாற்றாமை.

மற்று, காதலனைப் பிரிந்த கண்ணகியோ பிரிவாற்றாமை யென்னும் பெருங் கடலுள் மூழ்கினாள்; அழகிய சிவந்த சிறிய மலரடிகளில் சிலம்பணியாள்; மேகலை புனையாள்; கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்; காதணி அணியாள்; கழுத்தணி புனையாள்; அயில்பொரு கண்களில் அஞ்சனம் எழுதாள்; திங்கள் போல் நெற்றியில் திலகம் இட்டிடாள்; நெறித்த கூந்தலில் நெய்யும் பூசாள்; 'காதலன் என்று

வருவான், கட்டழகனை என்று பெறுவேன்' என்னுஞ் சிந்தையளாய், கோவலனை ஒரு நொடிப்பொழுதும் மறவாளாய், அவன் கணிகையின் நேசத்திற் கட்டுண்டதற்குச் சிறிதும் சீற்றங் கொள்ளாளாய், அயலில் தூற்றுதல் இல்லாளாய், இல்லற நெறியிற் சிறிதும் பிறழாளாய் ஒழுகி வருகின்றாள்.

இந்திர விழா.

ஆங்கு அவ்வாறாக, முன்னொரு காலத்தில் பூம்புகார் வளம்பெறற் பொருட்டு, தூங்கெயிலெறிந்த தொடித்தோட் செம்பியன் என்பான் சோழ மன்னன், இந்திரனை வேண்டி வரம்பெற்ற வாறே, அவன் காலந்தொட்டு ஆண்டாண்டுதோறும் சித்திராபூரணையில் அந் நகரில் இந்திரவிழாக் கொண்டாடல் மரபாயிற்று. இச் சரித்திர நிகழ்ச்சிச் சித்திரைத் திங்களுந் தோன்றிற்று. வழக்கம்போற் பெரியார் கூடி இந்திர விழாவை நடாத்த நிச்சயித்தனர். விழாவின் நடைமுறையை நகரத்துக்கு அறிவிக்கும் வண்ணம் முரசறைவோனுக்குக் கட்டளை யிட்டனர். அவன், வச்சிரக் கோட்டத்தே யுள்ள மணங்கெழு முரசை யானைப் பிடர்த்தலை யேற்றி, "மன்னவன் செங்கோல் வாழ்க; மாத முமமாரி பொழிக; நகரீர்! இந்திரவிழா இனிது கொண்டாடுவீராக; விழாக் காலத்தில், வானவ ருலகம் வறிதாமாறு தேவரெல்லாம் ஈண்டு வந்தருள்வ ரென்பது ஆன்றோர் துணிபாகலின், வீதிகளை அலங்கரித்திடுமின்; குலை வாழை நாட்டுமின்; கமுகின் குலை கட்டுமின்; கொடித் தொகுதி நாற்றுமின்; மாளிகைகளை வண்ணஞ் செய்ம்மின்; வாயில்களில் தோரணந் தொடுமின்; முத்து மாலையின் கொத்து நாற்றுமின்; மணியணிகளை

மாண்புற வனேமின்; மங்கல விளக் கேற்றுமின்; பூரண கும்பம் வைம்மின்; செழும்பாலிகை சேருமின்; பொற் சுண்ணப் பொடி தூவுமின்; பூவண்ணக்கோலம் போடுமின்; கோயில்களை அலங்கரிமின்; எத்திறத்தும் பகைகொள்ளன் மின்; சினத்தைத்தவிர்மின்'' என்று இன்னன பலவுங்கூறி மருவூர்ப்பாக்கம் பட்டினப்பாக்கம் ஆகிய இரு பகுதியினும் முரசறைந்து அறிவித்தான்.

அவ்வாறே அலங்கரித்த நகரமக்கள், விழாக்குறிப் பிட்ட நாளிலே குழுமினர், நாளங்காடிப் பூதத்தின் பீடிகை யில் பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து பலியூட்டினர். பின்னர், ஐவகை மன்றங்களினும் பூச்சொரிந்து பலியிட்ட தன் மேல், கற்பகத் தரு நிற்தும் கோயிலிற் கொடியேற்றி, அளவிறந்த ஆடம்பரங்களோடு சென்று,

தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறைப்
புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்திக்

கொணர்ந்து, 'உரைசால் மன்னன் கோற்றங்கொள்க' என வாழ்த்தி விண்ணவர் தலைவனை நீராட்டினர். அப்பால்,

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
வால்வளை மேனி வாலியோன் கோயிலும்
நீல மேனி நெடியோன் கோயிலும்

இன்னும் அந் நகரத்துப் பிற கோயில்களும் என்றிவற் றில் விதிமுறை வழாது திருவிழாக் கொண்டாடினர். நகர மக்களின் களிப்புக்கோர் அளவில்லை. மங்கல வாழ்த்

தொலி வானவர் ஏத்தொலி வணக்கங் கூர்தரு மக்கள்வழுத் தொலி முதலிய யாவும் மிகுந்தன.

மாதவியுங் கோவலனுங் கொண்ட மகிழ்வுக்கோ வரம்பில்லை. கணவனைப்பிரிந்த கண்ணகியின் துக்கத்துக்கும் எல்லையில்லை. ஆடவரும் மகளிருங் கூடிக் காணும் ஆனந்தக் காட்சியைக் காணவொண்ணுக் கண்ணகி மனம் புண்பட்டது. கணவற் பிரிந்த கற்பின் மகளிர்க்குக் காட்சியேது! களிப்பேது! கண்ணகி கண்கள் அழுகை நீர் மிகுத்தன, மாதவி கண்கள் உவகைநீர் உகுத்தன. இவ்வண்ணம், சொல்லொணுச் சிறப்புடன் இந்திரவிழா இனிது நிரம்பிற்று.

கோவலன் மாதவியைப் பிரிதல்.

விழா முடிவில், கடலும் காவிரியும் கலக்கும் சங்கமத் துறையில் நீராடுதல் மரபாகலின், நகர மாந்தர் கடலாடப் புக்கனர். மாதவியும் கோவலனும் மலர்த் தாமஞ்சூடி, பொன்னுடை யுடுத்து, விலையுயர்ந்த பொன்னணி மணியணிபுனைந்து, நறுமணம் பூசி, விண்ணிலுள்ளாரோவென்று கண்டார் ஐயுறும்வண்ணம் வனப்புச் செய்து கவின்பெறு நுண்மணற் கடற்கரை யடைந்தனர். ஆண்டுள்ள புன்னைமர நீழலில், தூய புதுமணற்பரப்பில் சித்திரத் திரையாற் சுற்றி வளைத்து மேற்கட்டும் கட்டப்பெற்ற வெண்கால் அமளிமிசைக் கோவலனெடு சேர இருந்தாளாகிய மாதவி, பாங்கி வசந்தமாலை கையிலிருந்த நல் யாழை வாங்கி, நரம்பு முதலியன திருத்தி, மரகதத்தொடு பல மணிபயில் மோதிரம் பூண்ட அழகிய செங்காந்தள் மலர்போலும் மெல்லிய விரல்களால் மீட்டினுள். கோவலன் கையை நீட்டினுன்.

யாழை அவன் கைக்கொடுத்தாள். வாங்கிய கோவலன் பல்வகை அகப்பொருட் சுவை தழுவிய கானல் வரிப்பாடல்களை வாசித்தான். மாதவி, 'ஓ! ஓ! இவன் பிறமாதர்பாற் காதலுடையான் போலும்! அல்லனாயின் அகப்பொருட் சுவைபட வாசியான்!' என்று ஐயங்கொண்டு, மனம்புலந்து, வீணையை அவன் கையினின்றும் பெற்று, தானும் வேறோர் குறிப்புடையாள் போலச் சில கானல்வரிப் பாடல்களைப் பாடினாள். ஆனால் கோவலன் பாட்டிற்கு எதிராக இன்னணம் பாடினாளேயன்றி, குறிப்பு வேறுபட்டாள் அல்லள். எனினும் கோவலன், அவளைப் பிரிதற்கேற்ற ஊழ்வினையும் வந்து கூடினமையின் சினங்கொண்டோனாய்,

"கானல்வரி யான்பாடத் தானொன்றின்மேல் மனம்வைத்து
மாயப்பொய் பலகூட்டும் மாயத்தாள் பாடினாள்"

என்று கூறி அவளைக் கைவிட்டுச் சென்றனன். மாதவி மனங்கலங்கித் துணைவனைத் தணந்த துக்க மீக்கூர்ந்து தனது மனையை அடைந்தாள். அடைந்தவள் மேனிலைமாடத்திருந்து கோவலனை எண்ணி எண்ணி வருந்தினாள். பிரிவென்னும் பெருநெருப்பு அவளை மிகவே கன்றறது.

அதனை அவனுக்கு அறிவித்துச் சினத்தைத்தணித்து அழைத்துவரச்செய்ய உன்னினாள். தன்மாலையில் தொடுத்த தாழைப் பூவின் வெள்ளிய ஏடொன்றில், இதழ் விரியா அரும்பொன்றை எழுது கருவியாகக்கொண்டு, செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து,

"காதல! நின்னைப் பிரிந்த இக் கொஞ்ச நேரத்துள் என் நெஞ்சம் படும் இன்னல் பன்னுந் தரமன்று. காமன்

தன் கைப்பாணத்தால் என் ஆவியை உண்டுவிடுவான் போற்றேன்றுகின்றது. இளவேனிலென்பான் கூடினூர்க்கு இன்பமும் ஊடினூற்குத் துன்பமும் செய்யும் இளவரசன் போலும். ஆதலால், அவன் நன்னெறி இன்னதென அறிகிலன். அந்திப் போதினில் வந்து தோன்றிடும் கலைவளர் திங்களோ பெருஞ்செல்வன். இவன் என்றுங் கோடிய தன்மையாளன். ஆகலின், விரக விதனத்தால் மெலிந்த எளியார்க்குப் பரிவுகாட்டான். அருமைக்கண்ணுள! இக்கொடிய மூவரிடமும் அடியாளைக் காட்டிக்கொடுத்து நீங்கியது முறையன்று. இதனை அறிவீராக. இன்னல்தீர வருவீராக" என்று எழுதினுள். வசந்தமாலைவசம் கொடுத்தாள். "இவ்வோலையில் எழுதிய பொருளுக்குப் பொருந்த வணிகர் கோமானுக்கு எடுத்துச்சொல்லி அழைத்து வருதி" என்று ஏவினுள். வசந்தமாலை வணிகனை நண்ணி நயமொழி நவின்று பரிவொடு ஓலையைக் கொடுத்தனள். அதைப்பெற்ற பெருங்குடிச் செல்வன் அதில் தீட்டிய வேண்டுதலினுங் கருத்துக் கொள்ளாது மறுக்கலாயினன். செயல் பலியாது திரும்பிய வசந்தமாலை, கோவலன் நிலையை மாதவிக்கு ஓத, "இம்மாலை வாராராயினும் நாளைக் காலையிலாவது வரக்காண்குவம்" என மொழிந்து வருந்தியிருந்தனள். இஃதிங்ஙனமாக.

பூம்புகார் நகரில் மாலதி யென்னும் பெயருடையாள் ஒரு பார்ப்பனி, தன் மாற்றாள் பிள்ளைக்குப் பாலூட்டினுள்.

தேவந்தி வாலாறு.

அப்போது பால்விக்கி அக்குழவி உயிர் நீங்கியது. மாலதி மெய் சோர்ந்து,

''அந்தோ! இதனுக்கென்செய்வேன்! பார்ப்பனனும் அவன் மனைவியும் பிள்ளையைக் கொன்றுவிட்டேன் என்று படாப் பழி சுமத்துவரே'' என்று ஏங்கி, அக் குழவியை ஏந்திக் கொண்டு அந்நகரிலுள்ள கோயில்கள் எங்குஞ் சென்று, ''தெய்வங்காள்! அடியாட்கு நேர்ந்த இப் பொல்லாங்கைத் தீர்த்தருளல் வேண்டும்''எனக் குறையிரந்தாள். அங்ஙனம் குறையிரந்தும் குழவி உயிர்த்து எழாதாகவே, பாசண்டச் சாத்தன் கோயில் சென்று, ''எளியாள் கொண்ட இன்னல் தவிர்த்து இம் மகவுக்கு உயிர் தந்தருள வேண்டுமென்று அழுது தொழுது வரங்கிடந்தாள். அந்நாள் இரவில் சுடு காட்டுக் கோட்டத்திலுள்ள இடுபிணந் தின்னும் இடாகினிப் பேய் ஒன்று, அழகிய பெண்ணுருக்கொண்டு, அவள் முன் நின்று, ''ஏ குற்றமற்றவளே!

> செய்தவ மில்லார்க்குத் தேவர் வரங்கொடார்
> பொய்யுரையே யன்று பொருளுரையே.

ஏன் வீணே பழிகிடக்கின்றாய்! நின் கையிலுள்ள பிணத்தைத் தா பார்ப்போம்'' என்று வாங்கி விழுங்கி விட்டது. என் செய்வாள் மாலதி! இடிமுழக்கம் கேட்ட மயில்போல் ஏங்கி அழுதாள்; மண்ணிற் புரண்டு கதறினாள். அன்னாள்முன் சாத்தன் தோன்றி, ''அன்னாய்! என்னோ அரற்றுகின்றனை! அழாதே! நீ கொண்டுவந்த மகவை அதோ தோன்றுகின்ற சோலைக்கீழ்க் காண்பாய்'' என்று வாக்களித்துத் தானே அக்குழந்தையாய் அவ்விடத்திற் புக்குக் கிடந்தான். மாலதி மகிழ்ந்து பிள்ளையை வாரியணைத்து உச்சிமோந்து எடுத்துப்போய்த் தாய் கைக்கொடுத்தனள். அக் குழவியாகிய சாத்தன் வளர்ந்து கல்வித்துறை

யில்வல்லானாகிக் காளைப்பருவம் எய்தின காலையில், தந்தை தாயார் இறந்தனர். அவர்கட்கு நீர்க்கடன் நெருப்புக் கடன்யாவும் முறைப்படிசெய்து, அதன்பின் ஒரு நல்லாளை மணந்து எட்டியாண்டு செல்லுமட்டும் வாழ்ந்தனன். அந் நல்லாளின் பெயரே தேவந்தி என்பது. பின்னர், சாத்தன் அவளைப் பிரியக் கருதினான்; பிரிதற்கு ஏற்றதொரு காரணம் தன் மனையாளுக்குக் காட்டுவான் விழைந்தனன். அங்ஙனம் காட்டற்காயது தன் தெய்வ யாக்கையே. அத் தேவ வடிவை அவள் காணின் பொறுக்கலாற்றாள். ஏனெனில், தேவ யாக்கையை மக்களின் கண்கள் காண்கில் ஆற்றா. ஆகலின், இக்குறை தீர "இவள் கண் எம் மெய்ம்மை யாக்கையைக் கண்டு ஆற்றக் கடவதாக" என்று மனங்கொண்டான்; என்றும் மாறா இளமையும் எழிலும் பொலிந்த வடிவம் தேவந்தி கண்முன் மிளிர்ந்தது; கண்டாள்; வணங்கினாள்; வாழ்த்தினாள்; மெய்ம்மறந்து நின்றாள்; என்றென்றும் இக் கோலத்திற்குத் தொண்டாற்றுதலிற் பிழையாப் பேறு தரல் வேண்டுமென்று குறிப்பித்தாள். அக்குறிப்புக் கண்ட மாசாத்தன், "நீ நித்தலும் எங் கோட்டத்தே வருக" என்று கட்டளையிட்டு உருக்கரந்தனன். பிறர்க்கெல்லாம் "தீர்த்தம் ஆடச் செல்கின்றேன்" எனச் செப்பிப் போயினன். அற்றை நாள் தொட்டு, தீர்த்தத் துறைபடியச் சென்ற என் காதலற்குத் தீங்கு நேராவண்ணம் காத்துத் தருவாயென்று நேர்ந்து கொண்டாள் போன்றொரு கற்பனை செய்துகொண்டு, நாள் தோறும் சாத்தன் கோயிலிற் சென்று வழிபாடு செய்து வருகின்றாள் தேவந்தி.

இவள் இளமை தொட்டுக் கண்ணகியிடம் தோழமை பூண்டவள். பார்ப்பனத் தோழியாகிய இவள்பாலும் காதலன் பிரிந்த வேதனை நிலையைக் கழறாள்

கண்ணகி கனா.

கண்ணகி. தேவந்தியோ, தன்னால் மிகவும் நேசிக்கப்பெற்ற நல்லாள் இல்லான் பிரிவைப்பற்றி யாதுஞ்சொல்லாள் எனினும், அவள்படும் அகத் துன்பத்தை ஓர்ந்து அதைத் தவிர்த்தற்கு எண்ணினாள். சாத்தன் கோயிலை நண்ணினாள். அவற்கு, அறுகு சிறுபூளை நெல் ஆகியவற்றைத் தூவினாள் "கோவலனுங் கண்ணகியும் கூடிவாழ அருள் புரிதி" என வேண்டினாள்; கண்ணகியிடம் சென்றாள்; "நீ இனிக் கணவனொடு கூட்டம் பெறுவாய்" என்று வாழ்த்தினாள்.

வாழ்த்திய தோழியை நோக்கி, "பைந்தொடி! நின் அருமை வாக்கால் இன்னணம் வாழ்த்தினை. ஆகலின், காதலனொடு கூடிவாழும் பேறு பெறுவேன் எனினும் என் நெஞ்சம் ஐயுறுகின்றதுகாண். அங்ஙனம் ஐயுறுதற்கு ஏற்ற நிகழ்ச்சி யொன்றும் உண்டு. அதை நினக்கு விளம்புவேன்.

"மதிநுதால்! நேற்றிரவு ஒரு கனாக் கண்டேன் அஃதியாதோவெனின், கேண்மதி! "யானும் என் கொழுநனும் இந்நகரை விட்டு இன்னொரு பதியை நோக்கிப் போயினோம். போகுங்கால் அவர் என்னை இணை பிரியாது கைகோத்து அழைத்துச் சென்றார். நாங்கள் போய்ச் சேர்ந்த அப்பதியிலுள்ளார் எங்கள்மீது படாப்பழியொன்று ஏற்றி என்னைத் தூற்றினர். கோவலற்கொரு தீங்கு நேர்ந்த

தென்றுஞ் சாற்றினர். இடு தேள் விழப்பெற்றாள் போலப் பதறினேன். அப் பொல்லாங்கைப் பொறுக்க லாற்றாது, செல்லுந் தகுதியில்லா நான் அவ்வூர் அரசன் முன்பு சென்றேன்; வழக்கும் உரைத்தேன். அந்தோ! அவ்வூருக்கு என்னால் ஒரு தீங்கும் உற்றது. தோழீ! அதை என்னென்று இயம்புவேன்! அது தீத்தன்மையதாதலால் நினக்கு விவரித்துரைக்க விரும்பேன். அதை நீ கேட்பாயாயின் நினக்கது சிரிப்பைத் தரும்'' என விளம்பினாள். செவிக்கொண்ட தேவந்தி செப்புகின்றாள், ''பண்மொழி!

கைத்தாயும் அல்லை கணவற் கொருநோன்பு
பொய்த்தாய் பழம்பிறப்பில்; போய்க்கெடுக. உய்த்துக்
கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில்
மடல்அவிழ் நெய்தலங் கானல் தடமுள
சோம குண்டஞ் சூரிய குண்டம் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டம் தொழுதார் கணவனொடு
தாமின் புறுவர் உலகத்து.

[நீ நின் கணவனால் வெறுக்கப்பட்டவளும் அல்லை. கண்டகனவுக்கு வருந்தாதே. முன்னைப் பிறப்பில் நின் கணவற் பொருட்டுச் செய்யலாவதொரு நோன்பைச் செய்யாது தவறினை. அதனால் இத்தகைய தீங்குகள் சூழலாயின. அவை நின்னை வருத்தாமல் ஒழியக் கடவனவாக. ஆயிழாய்! இங்ஙனம் கணவன் காரணமாகப் பிழை புரிந்தோர் வந்து மூழ்கின் அப்பாவத்தைத் தவிர்க்குந் தகைமை வாய்ந்த இரண்டு தடாகங்கள் உள. அவை காவிரி தன் நீரைக் கொண்டுசென்று கடலொடு ஊடிக் கூடி ஆடும் சங்க முகத்துக்கு அயலிலே, மலர்கள் இதழ்களை விரிக்கின்ற

நெய்தலங் கானலிலே யிருக்கின்றன. அவை சோமகுண்டம் சூரியகுண்டம் எனப்பெறும். இவ் விரு தீர்த்தங்களினும் படிந்து காமவேள் கோட்டம் சென்று தொழுதார் கணவன் அன்பு மீதூரப் பெறுவார்; என்றும் மணவாளனைப் பிரியா வாழ்வு பெறுவார்.] இவ்வுலகத்தே இங்ஙனம் இன்புறுதல் அன்றித் தேவருலகத்திலும் பிறந்து நாயகனை நீங்கா நல்வாழ்வு நனியுறுவர். கற்பருங்கலமே! ஒருநாள் நாமும் போய் அவற்றில் ஆடி மன்மதனையும் வணங்கி வருவோம்" என்றாள்.

அவற்றை உளங்கொண்ட கண்ணகி, தேவந்தியை நோக்கி, "அன்பே! நீ என்பாற் கொண்ட ஆர்வத்தால் என் பழவினை தீர்க்கக் கழுவாய் விளம்பினை. அதற்கு மிக மிக நன்றி பாராட்டுகின்றேன். ஆனால், பயன்வேட்டு நீராடுதலும் பிறதெய்வம் தொழுதலும் எமக்கு இயல்பல்ல.

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை.

என்பது தெய்வத் திருமொழி யன்றோ! கணவனை உள்ளன்புடன் தொழுது வாழும் மடவார் கடவுளையும் தொழல் வேண்டுமோ? வேண்டா. கணவனைப் போற்றும் கற்புறு மங்கையர்க்கு ஒல்லாதது ஒன்றுமில்லை" என்று இன்னணம் சொல்லாடிக் கொண்டிருக்கையில், விரைந்து ஓடிவந்த ஓர் பணிப்பெண், "அம்ம! நம் வாயிற்புறத்தே வருகின்றார் நின் நாயகர்" என்றாள்.

> மாலை மணிவிளக்கங் காட்டி யிரவிற்கோர்
> கோலங் கொடியிடையார் தாங்கொள்ள

லாவதாகிய மாலைக்காலத்தில்மனையிற்புகுந்தான் கோவலன்; பள்ளியறையில் செவ்விநிறைந்த சேக்கையில் அமர்ந்தான். காதலனும் காதலியும் அவ்வமயம் அடைந்தநிலை எழுதுந்தரத்ததன்று; இயம்புந்தகையதன்று; "பிரிந்தவர் கூடினால் பேசவேண்டுமோ" என்றார் கவிவேந்தர் கம்பர்; சின்னேரம் ஆங்குப்பேசா நிலை கூடிற்று. தன் இல்லாளின் மேனி வாட்டமும் மன வருத்தமும் கண்டான் வணிகப்பெருந்தகை. தன் தவற்றைத் தானேயுணர்ந்தான். அதனை வெளிவிடாதிருக்க அவனாற் கூடவில்லை. அறிவுடையோர் நேர்மையுடையோர் தாம் செய்ததொரு செயல் நவையேயெனக்காணின் உடனே அதற்கு வருந்துவரன்றோ! எண்ணி யெண்ணித் துக்கிப்பரன்றோ! அங்ஙனமே கோவலனும் வாய்விட்டு, "என் அன்புக்கருங்கலமே! பெண்கள் நாயகமே! ஓவியத்தெழுதொணா உருவப் பாவையே! நின்னைத் தனிமனையிருத்தித் தயங்கச் செய்த இக் கொடியேனை என்னென எண்ணினையோ? இத் தீமை செய்த என்நெஞ்சம் என்னையே சுடுகின்றது; ஆறாத் துயரம் அடைவிக்கின்றது. பொய்ம்மாயப் பரத்தை வீடே தஞ்சமெனப் புக்க பாவியேன் பாடு பன்னற்கு அரியது.

கோவலன் வருகை.

> சலம்புணர் கொள்கைச் சலதியொ டாடிக்
> குலந்தரு வான்பொருட் குன்றம் தொலைந்த
> இலம்பாடு நாணுத் தரும்.

முன்னோர் தேடித்தந்த மலைபோலும் பொருட் குவியலைப் பொய்ந் நட்புக் கணிகைக்கு அளித்து வறியனாகினேன். அக் கூடா ஒழுக்கம் என்னை எளியனாக்கியது. இதனை உன்னுந்தோறும் உன்னுந்தோறும் நாணம் என்னை வாட்டுகின்றது. என்செய்வேன்" என்று வருந்தினான்.

கண்ணகி பார்த்தாள் ஓகோ! மாதவிக்குக் கொடுக்க இனிப் பொருள் இல்லையே என்று கருதிப்போலும் இலம் பாடு நாணுத்தரும் என்றார் என்று நினைத்தாள். இன்னமும் மாதவிக்கு ஈதலிலோ மனங்கொண்டனர் என்று சினந்தாளில்லை. அவ் விலை மகளின் காதலை விட்டொழியாமைக்கு வெறுப்புங் கொண்டிலள். இதுவன்றோ, கொழுநன் சொற் கடவாக் கோதையர் நறுங்குணம்! கணவன் விருப்பத்தை நிறைவேற்றக் கருதினாள். அவளிடம் பொருள் ஒன்றும் இல்லை. நகைகளும் இல்லை யாவும் மாதவிக்குக் கொடுத்துத் தீர்ந்தன. ஆனால், ஓர் இணை சிலப்புமட்டும் உள. இவற்றைக் கொண்டு காதலனைக் களிக்கச் செய்யலாம் என்று அகமலர்ந்தாள்; ஒளி மிகுந்த முகம் நலமிகுந்த புன் முறுவலைப் பூத்து அப்பொழு தலர்ந்த செந்தாமரையினை வென்றது. அம் மலர்முகத்துக் கிளிமொழி காதலன் முகம் பார்த்து, "என் ஆருயிர் அமிழ்தே! நாணற்க; தளரற்க; இன்னும் இரண்டு சிலம்புகள் இருக்கின்றன; தருவேன்; பெறுக" எனச் சாற்றினள்.

"செவியகம் நிறைதரப் பொழிதரும் அமுதெனும் மொழியாளே! நீ சொன்ன சிலம்பை மதுரைக்குக் கொடு போய் விற்று, அவ்விலைத் தொகையை முதலாக வைத்து, அங்கேயே வாணிகஞ்செய்து, நான் இதுகாறும் தொலைத்த செல்வத்தை மீட்டும் ஈட்டத் துணிந்தேன். நாம் இருவரும் இன்று விடியற்காலையில் வெளிப்பட வேண்டும்" என்றான் கோவலன். முன்னைப் பிறப்பின் வினைவந்து கூடினதால் அவன்மனம் இன்னணம் நாடலாயிற்று. மடமகளும் அதற்கு உடன்பட்டாள்.

# வழிச் செலவு.

இருவரும் வான் கண் விழியா வைகறைப் போழ்தில் புறப்பட்டனர்.

புறப்பாடு. ஏழகத் தகரும் எகினக் கவரியும்
தூமயிர் அன்னமும் துணையெனத் திரியும்.

நெடிய பெரிய தெருநிலை சிறந்த மாளிகையைக் கடந்தனர். அழகிய அரவணைமீது அறிதுயில் கொள்ளும் திருமால்கோயிலை வலஞ்சூழ்ந்தர். ஐம்பெருங் கிளைகளையுடைய மாபோதி நிழலிலிருந்து புத்தன் அருளிய ஆகமத்தை, அந்தரசாரிகள் மறைந்திருந்து கூறிப் பொருள் விளக்குவனவும், இந்திரனால் நிருமிக்கப்பட்டனவும் ஆகிய ஏழ விகாரங்களையுந் தொழுதனர். பின்னர், புலாலுணவு விடுத்து பொய்ம்மொழிதல் தவிர்த்து, அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் முதலிய இழுக்குகளை ஒழித்து, நன்னெறி நின்று அறநூல் உணர்ந்த பெரியார் உறைவது ஸ்ரீகோயில்; அதன்கண் பஞ்ச பரமேட்டிகள் எனக் கூறுநின்ற அருகர் சித்தர் உபாத்தியாயர் ஆசிரியர் சாதுக்கள் ஆவார் ஐம்பகுப்பினர் வதியும் தெருக்களின் ஐஞ்சந்தியுஞ் சந்திக்கும் இடத்திலுள்ள மிகப் பெரியதொரு மன்றத்தில், பொன் மலர் பூக்கும் பிண்டிமா நீழலில் சாவகரால் ஆக்கப்பட்ட ஒளி விளங்கும் சிலாதலம் உளது; அதைத் தொழுது வலங்கொண்டனர். அப்பால், மலையிற் பிறந்து என்றென்றும் வற்றுதலின்றி இடையறாது ஒழுகும் பெரிய யாறுபோல்வது உலகிலுள்ளார் போக்குவரத்துப் புரியும் நகரப்புறவாயில்; அதையுங்

கடந்து, அரச காவலரின் காப்பைக்கொண்ட இலவந்திகைச் சோலை மதிலைத் தாண்டி, புனல் வளம் பொலிந்த பொன்னி யின் வடகரைக்கணுள்ள பொழிலையுங் கழிந்து, ஒருகாவத தூரம் போயினர். நெடுந்தூரம் நடந்தறியாப் பசுங்கொடி யின் மலரடிகள் நடக்கலாற்ருமல் மிகவும் வருந்தின; இடை யோ இறுவதுபோல் இனைந்தது. இளமரச்சோலை யொன் றை அடைந்தனர்.

மிகவும் களைத்து மெலிந்த பூங்கொப்பை யன்னுள், அரும்பை நிகர்த்த எயிறு இலங்க, முதிராமழலை மொழி யாலே "மதுரை யென்னும் மூதூர் யாதோ" என வின விஞள். கோவலன் துடியிடையின் துயர் உணர்ந்தான்; உள்ளம் நெக்குருகிஞன்; துன்ப நகை நகைத்தோஞகி "மதுரை இனி அணித்தே யுளது; ஆறைங் காவதங் காண்" என விடை யிறுத்தான். முப்பது காவதத்தை ஐந்தாறு காவதமென்று பொருள்படுமாறு ஆறைங் காவதம் என்றது, அவள் தன் மனத்திட்பம் குன்ருதிருத்தற் பொருட்டே போலும்

இன்னணம் மொழியாடிச் செல்கையில் எதிர்ப்பட்ட தோர் அறப்பள்ளியில் ஆருகத மதத்தினளாகிய கவுந்தியடிக

கவுந்தி யடிகளைக் கண்டடி பணிதல்.

ளைக் கண்டனர்; அடிபணிந்தனர் கவுந்தி யடிகள் அவ்விருவரையும் நோக்கி,

"உருவுங் குலனும் உயர்பே ரொழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர்!

என்னோ நீவிர் தீவினை யாளரேபோல் நுமது நகரை மனை யைச் சுற்றத்தை நீங்கி, வறுமையுற்றோரென வரலாயினிர்? இங்ஙனம் மடக்கொடியுடன் வெளிப்போதல் நும் மரபுக்கு ஏற்றதன்றே! யாது கருதி யீண்டுப் போந்தீர்?" என வினாவினர். "மிகுதவத்தீர்! நாங்கள் இவ்வாறு வெளிப்பட்டது மரபன்றென்று நீவிருரைத்து வினாவியது உறுதியே. அவ்வுரைக்கு ஏற்ற மறுமொழி கொடுத்தற்கு அடியேன் ஆற்றல் பெற்றிலேன். எனினும் முன்னோர் தொகுத்துவைத்த பொருட் குவியலை அறியாமதியால் அழித்த யான், மதுரை சென்று வாணியஞ் செய்து அதனை மீட்டுந் தொகுத்தலில் வேட்கை கொண்டேன். அவ்வேட்கைதான் எம்மை இவ்வாறு வருதற்கு ஏவிற்று" என்று கோவலன் கூறினான். அடிகள் அவனைநோக்கி, "நுங்கருத்து இதுவாயின் இப்பொற்கொடியின் அடிகளோ மிக நுண்ணிய; மதுரை செல்லும் வழியோ கல்லும் முள்ளும் நிறைந்த காட்டை இடையேயுடையது; அக் கல்லினும் முள்ளினும் செல்லல் இவளால் ஒல்லாது; இவள் அதற்கேற்ற தன்மையளல்லள். இனி, ஊழ் என் செய்யுமோ! அவ் வூழ் வலியன்றோ இங்ஙனம் நும்மை யீர்த்து வந்தது! நுங் குடிப்பிறப்பிற்கும் இவளைக் கூட்டிச் செல்லல் நெறியன்று. ஆகலின், இனிச் செல்லுதலை ஒழிமின் என்று யான் கூறினுங் கேளீர். நும்மை இட்டுவந்த விதியே வலியது. அதுகிடக்க. யானோ,

மறவுரை நீத்த மாசறு கேள்வியர்
அறவுரை கேட்டாங்கு அறிவனை யேத்தத்
தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையேன்.

ஆகலின், யானும் உங்களோடு வருவேன்" என்று கருணை யொடு மொழிந்தார். அவரைக் கோவலன் கையாற்றெழு தொழுது, நாவால் வழுத்தி, "அடிகளே! நீவிரே இவ்வாறு அருள் புரிவீராயின் இத் தொடிவளைத் தோளிதன் துயரெலாம் இப்பொழுதே தீர்த்தேன்" என்று பாராட்டினன். மேலும் காவுந்தி ஐயை மொழியும்; "கோவல! நாம் போகக் கடவதாகிய வழியில் இன்னல் விளைவிக்கும் இடையூறுகளோ பலவுண்டு. அவை இன்னன வென்பதை நீ அறியாய். அவற்றை விவரிப்பேன் கேள். கதிரோன் வெயிலொளியைக் கண்ணுற் பார்க்கவும் ஆற்றாத இப்பைங் கொடியைக் கொண்டு பொழிலூடு செல்குவ மெனின், ஆங்குப் பழ மலர்களால் தூர்ந்து அடையாளங் காண வியலாதன வள்ளிக் கிழங்குகளை அகழ்ந்தெடுத்த குழிகள் பல உண்டு. புதிதாகச் செல்வோர் அவற்றை அறியமாட்டாமல் வீழ்ந்து மிக்க வருத்தமுறுவர். அங்ஙனம் வீழ்தலினின்றுந் தப்பும்பொருட்டு நிலநோக்கி நடக்கின், தாழ்ந்த கிளைகளில் முதிர்ந்து தேனொழுகும் பலாக்கனிகள் தலையில் தாக்கினுந் தாக்கும்; வெள்ளிய பலாவிதைகள் இவள் கால்களிற் பருக்கைக் கல்லென உறுத்தவுங் கூடும். சோலைகள் மலிந்த வழியையன்றி வயல்களூடு செல்குவ மெனின், மீன்பிடித்துண்ணப் பாயும் நீர்நாயைக் காணினும், கயற்கெண்டைகள் புரளக் காணினும், வாளைமீன்கள் தாவக் காணினும் இக்காரிகை கலங்குதல் கூடும். நத்தை நண்டு முதலியவற்றை அறியாமல் மிதித்திடின் அதனாலுண்டாந் துன்பமோ தாங்கொணாதது. இவை போன்ற தீங்குகள் இன்னும் பல வுண்டு. ஓ பெருங்குடிச்

செல்வ! நீ நின்னைவிரும்பிய மனைவியொடு செல்லுகையில் அத்தீமை தருவனவற்றைக் குறியறிந்து ஒதுங்கிச் செல்லல்வேண்டும்.'' இவ்வாறு உணர்த்திய கவுந்தியடிகளோடு அவ்விருவரும் புறப்பட்டு வழிக்கொண்டனர்.

மருதநிலக் காட்சி.

அப்பொழுது, என்றும் இடையறாது ஒழுகும் காவிரி நீரொலியேயன்றிக் கிணற்றுநீர் இறைக்கும் ஏற்றம் பூட்டை முதலியவற்றின் ஓசை கேட்கப்பெறாத மருதநிலத்தின்கணுள்ள செந்நெல்லும் செழுங்கரும்பும் செழித்துவளர் கழனிகளின் வனப்பைக் கண்டனர். அவற்றின் மருங்கே பொருந்திய நீர்நிலைகளில், தாமரைக் காடுகளில் வாழும்,

கம்புட் கோழியும் கனைகுரல் நாரையும்
செங்கால் அன்னமும் பைங்காற் கொக்கும்
கானக் கோழியும் நீர்நிறக் காக்கையும்
உள்ளும் ஊரலும் புள்ளும் புதாவும்

முதலான பறவைகளின் ஆரவாரமும்; அறுகையும் செந்நெற் கதிரையும் குவளை மலரையும் கலந்து தொடுத்த மாலையை மேழிகளிற் சூட்டி, பொன்னேர் பூட்டி, நிலத்தைப் பிளப்பார்போன்று உழுவோர் பாடும் ஏர்மங்கலப் பாட்டோதையுஞ்; மெய்ம்மேற் படிந்த சேற்றுக் கோலத்தொடு நாற்றுநடும் பள்ள மாதர்கள் களித்துப் பாடும் குரவை முழக்கமும்; நந்தம் முகம் போன்றதன்றே பங்கயம், கண்போன்றதன்றே கருநெய்தல், வாய் போன்றதன்றே குமுதம் எனப் பரிவுகாட்டாமல் அவை களைக் களைப் புல்லொடு களைந்தெறியும் கடைசியர் கனி

வாயொலியும் தலைமயங்கிய பெரு முழக்கத்தைக் கேட்டனர். இங்ஙனம் காண்டல் கேட்டல்களால் வருத்தந் தோன்றாதாகக் காவிரியாற்றின் கரைவழியே நடக்கலாயினர்.

இடையே, கரிகால் வளவன் வெற்றிகுறித்தும் வானத்தின் வளங்குறித்தும் வளர்க்கும் முத்தீயின் நறுவிய புகை அகங்களெங்கும் போர்த்து மஞ்சுசூழ் மலைபோன்று மாட்சிமைகொடு தோன்றும் வேதியர் இருப்பிடங்களும்;

பரப்புநீர்க் காவிரிப் பாவைதன் புதல்வர்
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர் பழவிறல் ஊர்களும்

(அதாவது, யாசிப்போர்களின் இனத்தையும் உலகு காவலனாகிய வேந்தனின் வெற்றியையும் தங்கள் உழவால் வளர்க்கும் வேளாளர்கள் வாழுகின்ற, பழைய, ஆக்கந் தங்கிய ஊர்களும்) உள்ளிட்ட நாட்டின் பலபகுதிகளையும் பார்த்துக்கொண்டே போயினர்.

இவ்வாறு போவோர், நாளொன்றுக்கு ஒரு காவதத்திற் கதிகமாக நடந்து தொலைக்க மாட்டாராய்ப் பலநாள் நடந்து சீரங்கம் என்னும் திருப்பதியை அண்மினர்.

ஆங்கே, புகார் நகரப் பட்டினப்பக்கத்தில், தேவர்களுறையும் மணமாறு மலர்ச் சோலைக்கண், பிண்டிமர நிழலில் இடப்பட்ட சிலாதலத்திருந்து வாய்மைபிறழா அறநெறியை யாவருங் கேட்கும்வண்ணம் கூறியருளும் சாரணர் இருவர் வந்து

**சாரணர் எதிர்ப்படல்.**

தோன்றினர். அவரைக் கண்ட கவுந்தியடிகள் முதலாயினோர் மூவரும் 'பண்டைத் தொல்வினை பாறுக' என்று எண்ணினராகிச் சாரணர் தாள்களில் தலையுறத் தாழ்ந்தனர். அச்சாரணருள் மூத்தோன் முக்கால வுணர்ச்சியுடையோனாகலின் மனையின் நீங்கிவந்தார் இருவர்தம் பின் நிகழ்ச்சிகளையும் தெரிந்துகொண்டான்; எனினும், அன்னோன் விருப்பு வெறுப்பறுத்த வீரனாதலால் இவரிருவருக்கும் வரக்கடவதாகிய துன்பம் பற்றி அவலங்கொள்ளாது, கவுந்தியடிகளை நோக்கி,

> "கழிபெருஞ் சிறப்பிற் கவுந்தி காணாய்!
> ஒழிகென ஒழியாது ஊட்டும் வல்வினை,
> இட்ட வித்தின் எதிர்ந்து வந்தெய்தி
> ஒட்டுங்காலை ஒழிக்கவும் ஒண்ணா.

அன்றியும், யாக்கையோ நிலையற்றது. அதனை யுடையோர் யாவரும்,

> அறிவன் அறவோன் அறிவுவாம் பிகந்தோன்
> செறிவன் சினேந்திரன் சித்தன் பகவன்
> தரும முதல்வன் தலைவன் தருமன்
> பொருளன் புனிதன் புராணன் புலவன்
> சினவரன் தேவன் சிவகதி நாயகன்
> பரமன் குணவதன் பரத்தில் ஒளியோன்
> தத்துவன் சாதுவன் சாரணன் காரணன்
> சித்தன் பெரியவன் செம்மல் திகழொளி
> யிறைவன் குரவன் இயல்குணன் எங்கோன்
> குறையில் புகழோன் குணப்பெருங் கோமான்
> சங்கரன் ஈசன் சயம்பு சதுமுகன்
> அங்கம் பயந்தோன் அருகன் அருண்முனி

பண்ணவன் எண்குணன் பாத்தில் பழம்பொருள்
விண்ணவன் வேத முதல்வன் விளங்கொளி

ஆகிய இறைவன் அருளிய அருள்நெறி பிழையாது ஒழுகல் வேண்டும். அங்ஙனம் ஒழுகினாலன்றிப் பிறவியாகிய சிறை வீட்டினின்றும் நீங்க வியலாது" என்றின்ன நீதியுரை பகர்ந்தனன்.

இங்ஙனம் சாரணன் அருளிய உண்மை மொழிகளைக் கேட்ட கவுந்தியடிகளும் கையெடுத்துக் கும்பிட்டு,

"ஒருமூன் றவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக் கல்லதென் செவியகந் திறவா.
காமனை வென்றோன் ஆயிரத்தெட்டு
நாம மல்லது நவிலா தென்னா.
ஐவரை வென்றோன் அடியிணை யல்லது
கைவரைக் காணினும் காணா வென்கண்.
அருளறம் பூண்டோன் திருமெய்க் கல்லதென்
பொருளில் யாக்கை பூமியிற் பொருந்தாது.
அருகர றவன் அறிவோர்க் கல்லதென்
இருகையுங் கூடி ஒருவழிக் குவியா.
மலர்மிசை நடந்தோன் மலரடி யல்லதென்
தலைமிசை யுச்சி தானணிப் பொறாது.
இறுதியில் இன்பத்து இறைமொழிக் கல்லது
மறுதர ஓதியென் மனம்புடை பெயராது."

என்று போற்றிப் புகழ்வாராயினர். அப்புகழ்மொழியைச் செவிக்கொண்டெழுந்த சாரணர் "**பவந்தருபாசம் கவுந்தி கெடுக**" என்று கூறி அந்தரத்தே விரைந்து சென்றனர். அவர்தம் உருவம் மறையும் வரையும் அவ

ரை நோக்கித் தொழுது நின்ற மூவரும் மேலும் நடந்து சென்று காவிரியை ஓடத்தாற் கடந்து அதன் தென் கரையை அடைந்து ஆங்கண் போதுகள் மலிந்த குளிர் மரப் பொதும்பரொன்றில் தங்கினர்.

வம்பப்பரத்தையும் வறுமொழியாளனும் நரியாயினமை.

அவ்வழிப் பரத்தைமைத் தொழிலைப் புதிதாய்க் கைக்கொண்டாளொரு பொதுமகளும் பயனில் சொற் பேசுவானொரு பேதை மகனுஞ் சேர்ந்து அந்த மணஞ்செறி சூழலில் வந்து, கண்ணகியையும் கோவலனையுங் குறித்து, 'காமனும் இரதியும் போலுமிவர் யாரெனக் கேட்டு அறிகுவம்' என்று கவுந்திபாற் சென்று "பட்டினி விட்டுணும் தவத்தீர்! இவ்விருவரும் யாவர்?" என வினவ; "இருவரும் நம்போன்ற மானிட யாக்கையரே; நீயிர் எண்ணுமாறு காமனும் இரதியும் அல்லர்; என் மக்களே காணும் இவர்; நெடுந்தூரம் நடந்துவந்த வருத்தத்தால் மிகவும் களைத்திருக்கின்றனர். அவர்பாற் சென்று அவர்க்கு வேதனை கொடாமல் விலகிச் செல்லும்" என்றார் கவுந்தி ஐயை. அதற்கு அவர்கள், "மூதியீர்! நுமது மாற்றம் நன்று! நன்று! இதுபோலும் ஒரு வரலாறு இதுகாறுங் கேட்டிலம். இவ்விருவரும் உம் மக்கள் என்றீர். ஒரு வயிற்றிற்பிறந்தோர் கொழுநனும் மனைவியும் ஆதல் எங்கேனும் உண்டோ? கற்றறிந்த நீர் இன்னணம் விளம்பியது எவ்வாற்றாலோ? இதற்குச் சாற்றுண்டேற் சாற்றும்.', என்று இகழ்ச்சிக் குறிப்புடன் கேட்டனர்.

இவ் விகழ்வுரை கேட்ட கண்ணகி, 'தவமூதாட்டியிடம் வீண் வம்பு பேசிப் பழிதேடிக் கொள்கின்றனரே'

என்று நடுங்கினள். அப்பொழுதே கவுந்தியடிகள் "முட்களையுடைய காட்டில் திரியும் முது நரியாகக்கடவீர்" என அவ்விருவரையும் சபித்தனர். தவவிளைவுள்ளார் வாய்ச்சொல்லாகலின் அச்சாபம் அக்கணமே அவர்களைச் சென்று பற்றியது. உடனே அவர்கள் நரிகளாகி ஊளையிடத் தொடங்கினர். இதையறிந்த கண்ணகியும் அவள் காதலனும் மருண்டு காவுந்தி ஐயையைக் கைதொழுது,

"நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்
அறியா மையென் றறியல் வேண்டும்.
செய்தவத் தீர்நுந் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக்காலம் உரையீரோ?"

என வேண்ட, கவுந்தியடிகள் அவ் வேண்டுதலுக்கு இரங்கி "அறியாமையால் இன்று இழிபிறப்புற்ற இவர் உறையூரின் மதிற்புறக் காட்டில் ஓராண்டு திரிந்து, பின்னர் முன்னுருப் பெறுவாராக" என்று சாபவிடை செய்தனர். அதன்பின் அம் மூவரும் அச் சோலையை நீங்கி, மாலைப்பொழுதில் உறையூர் புக்கு, ஆங்குள்ள அருகப்பள்ளியை அடைந்து அருகக் கடவுளை வணங்கினர். பின்னர், அப்பள்ளியி லுறையும் முனிவர்கட்குத் தாங்கள் வருகையில் சீரங்கத்தே தோன்றிய சாரணருரைத்த தகைசால் நன்மொழியை நலம்படச் சாற்றினர் கவுந்தியடிகள்.

மாங்காட்டு மறையோன் வழித்திறங்கூறல்.

மூவரும் அன்றிரவை அப்பள்ளியிலேயே கழித்து, வைகறைப் போதில் அதைவிட்டுச் சென்றனர். இளஞாயிறு தன் ஆயிரங் கைகளையும் விரித்து இருள் கெடுத்து ஒளி கொடுத்துக் குணதிசைத் தோன்றிற்று. வழிக்கொண்டார் மூவரும் சென்று நீரும் நிழலும் நிறைந்ததோர் இளமரக்காவின்

கணுள்ள மண்டப மொன்றிற் புக்கிருந்தனர். அக்காலை ஆண்டோர் மறையோன்

" வாழ்க எங்கோ: மன்னவர் பெருந்தகை
யூழிதோ றூழிதோ றுலகங் காக்க :"

என்று தென்னவனை வாழ்த்தி வந்திருந்தான். அம் மறையோனை நோக்கிக் கோவலன், "ஐய! நும் ஊர் யாது? ஈண்டு வந்தது எற்றிற்கு?" என வினவினன். மறையோன், "சீரிய! யானோ குடகமலைநாட்டில் **மாங்காடு** என்னும் ஊரின்கணுள்ளேன். திருமால், பொன்மலை மீது நீலமேகம் படிந்தாற்போன்று ஆயிரமுடி அரவப் பாயலில், தேவர் பலருந் தொழச் சீரங்கத்தே கிடந்த வண்ணத்தையும்; அந்நெடுமால் மின்னும் பொன்னுடை யுடுத்து, வில்லேந்தி, ஆழியும் வளையும் கைக்கொண்டு, அருளொழுகு முகமலரச் செந்தாமரைப் போது போலுந் திருக்கண்களொடு திருவேங்கடத்தே நின்ற திருக்கோலத்தையுப்; காண்பான் ஈண்டு வந்தேன். வருநெறியிற் பாண்டிநாட்டின் சிறப்பையும், பாண்டியனது கொடையையும், அளியையும் கண் குளிரக் கண்டுஉவந்தேன். ஆகலின், அவனை மனங்குளிர வாழ்த்துதலைக் கொண்டேன். இது காண் என் வரலாறு" என்றனன்.

அதுகேட்ட வாணிக வள்ளல், 'மாமுது மறையீர்! அந் நிறைகுணப் பாண்டியன் உறைதரு மதுரைக்குச் செல்லும் நல்ல நெறியை எங்கட்குக் கூறுதிர்" என இரந்தான்.

"கோவல! கூறுவன் கேண்மோ. வெங்கதிர் வேந்தன் செஞ்சுடர் வெப்பத்தை நிரம்பப்பெய்து, முல்லை

குறிஞ்சி யென்னும் இருதிணைகளையும் முறைபிறழக் கெடுத்துப் பாலைநிலமாகச் செய்யும் கடுங்கோடைக்காலம் இது. இக்காலத்தே, இப்பஞ்சின் மெல்லடிப்பாவையையும் இட்டு வந்தனை. செல் பாதையோ கற்பாறையும் துறுகல்லும் மிக்க அருநெறி; வெய்யவன் வெம்மையாற் பேய்த்தேர் விஞ்சிய கொடுஞ்சுரம். ஆகலின், இது தொலையாப் பெரு வழியாகும். இதனைத் தொலைத்துப் போதல் வேண்டும். போகுங்கால், கொடும்பாளூர் நெடுங்குளம் என்ற ஊர்கள் இருக்கின்றன. அவ்விரண்டூர்கட்கும் பொதுவாகிய ஏரி யொன்றுண்டு. அதை நீவிர் எய்துவிர். அதன் கரைமீதே சென்றால் பிறைமுடிப் பெருமான் கைச் சூலம் போலும் கவர் வழி மூன்று காணுவிர்.

"அவற்றுள், வலப்பக்கத்து வழியிலோ, விரிந்த தலைகளையுடைய வெண்கடம்பு, வரண்ட கிளைகளையுடைய ஓமை, பொரிந்த தாள்களையுடைய வாகை, உலர்ந்த மூங்கில் முதலான மரங்கள் செறிந்திருக்கும்; பட்டுக்கிடக்கின்ற தாழை மிடைந்திருக்கும்; உண்ண நீர் இன்றி மான் கணம் வேட்கைகொண்டு நாலு பக்கங்களிலும் அலைந்து திரியும். இங்ஙனம் வற்றிச் செத்த வனத்தை இடையே யுடையதாய், வேடர் வாழ் குறிச்சிகளை ஆங்காங்கே கொண்ட இவ்வழி, கடத்தற்கு அரியது. இதனைக் கடந்துசென்றால், மலைச்சாரலின்கண், விளைந்த நெற் பயிரும், வளர்ந்த கரும்பும், முதிர்ந்த தினையுப், வளவிய வரகும், உள்ளியும், மஞ்சளும், மலைவாழையும், மாவும், பலாவும், தெங்கும், கமுகும் ஆகிய பலவும் நிறைந்து சுற்றும் முற்றும் பச்செனும் பான்மைப் பசுமைக் காட்சி தோன்றும். அதுதான் தென்ன

வனது சிறுமலை. அங்ஙனம் வயங்கிக் காணும் மலையை வலத்தே தள்ளி இடப்பக்கத்து நெறியிற் செல்குவிராயின் மதுரை புகுவீர்.

"இனி, மேற்குறித்த முக்கவர் வழிகளுள் இடப்பக்கத்து வழித் திறனுங் கூறுதும். அந்நெறியில், அஞ்சிறை வண்டுகள் யாழெனை இசைக்கும் தடங்களும் வயல்களும் தண்பூங்காவும் செறிந்திருக்கும். இடையிடையே பாலை நிலமும் காடுகளும் உண்டு. இவற்றையெல்லாங் கடந்தால் திருமால்குன்றம் (அழகர்மலை) தோன்றும். அக் குன்றில் மிக்க மயக்கந் தருவதோர் பிலத்துவழி உளது. அப் பிலத்தினுள் புண்ணியசரவணம், பவகாரணி, இட்டசித்தி எனப் பெயரிய மூன்று பொய்கைகளுள. அவை தேவ ராலும் போற்றப்படுவன; மற்றேவராலும் வியக்கத்தகு வன; எங்கும் பரந்த சீர்மையை யுடையன; ஒன்றை யொன்று அடுத்திருப்பன. அவற்றுள், புண்ணியசரவணப் பொய்கையில் ஆடிடின் இந்திரன் இயற்றிய ஐந்திர வியா கரணம் என்னும் நூலை உணர்வீர். பவகாரணியிற் படிகுவி ராயின் இப்பிறப்பிற்குக் காரணமாகிய முற்பிறப்பின் வர லாற்றை அறிவீர். இட்டசித்தியில் இனிது மூழ்கிடின் இட்டசித்திகள் யாவும் எய்துவிர். அப் பிலத்துக்கட் புகுதலை விரும்புவோர், அம்மலையில் வீற்றிருந்தருளும் அழகர் திருவடிகளை மனத்தால் நினைந்து, கையாற் றொழுது, வாக்காற் றுதித்து, மும்முறை வலஞ்செயல் வேண்டும். அங்ஙனம் வலஞ் செய்கையில் எதிர்வது ஒரு யாறு. அதற் குச் சிலம்பாறு என்பது பெயர். அதன்கரையி லோர் கோங்குமரம் நிற்கும். அதன் அடியில், பொன்னின்

கொம்பு போலவும் மின்னின் கொடி போலவும் ஒரு தொடி வளைத் தோளி தோன்றுவாள். தோன்றி, 'யான் இம்மலைத் தாழ்வரையில் வசிப்பேன். என்பெயர் வரோத்தமை. இப் பிறப்பிற்கு இன்பமாவது யாது? மறுபிறப்பிற்கு இன்ப மாவது யாது? என்றும் அழியாநிலை வாய்ந்த இன்பம் எது? இம் மூன்றிற்கும் தக்க விடை தருவீராயின் இப்பிலத்தின் கதவைத் திறந்திடுவேன்' என்று சாற்றுவாள். ஏற்ற விடைகொடுத்தால் கதவந் திறந்து வழிகாட்டுவாள். அவ் வழியில் இன்னும் பல வாயில்கள் உள. அவற்றை யெல்லாங் கடந்து செல்கையில் இரட்டைக் கதவுள்ள வா யில் ஒன்றும் இருக்கின்றது. அதன் பக்கலில் வட்டிகைப் பூங்கோடி போல்வாள் ஒருத்தி வெளிப்பட்டு ஈறில்லாத இன்பம் யாது? அதை மொழிகுவிராயின் நீவிர் எதை யடைய விரும்பி வருகின்றீரோ அதை யடைவீர். மொழியீ ரெனினும் அதற்காக நும்மை வருத்துதல் செய்யேன்.' என்று பகர்வாள். அதற்கும் விடையிறுத்தால், மேற்கூறிய முப் பொய்கைகட்கும் அழைத்துச்சென்று அவற்றைக் காட்டி மீளுவாள். அம் மூன்றனுள் நீவிர் ஆடவிழையும் பொய்கை யொன்றில் ஆடி, அதனாற் பெறத்தகும் பயனைப் பெறுவீராக. அங்ஙனம் ஆடுங்கால் திரு எட்டெழுத்தையும் திரு ஐந்தெழுத்தையும் ஒருமனப்பட்டு நினைந்து துதித்தல் வேண்டும். அங்ஙனம் துதித்து மூழ்குவார் பெறும்பயன் தவத்தின் மிக்காராலும் பெறற்பாலதன்று.

"அவ்வண்ணம் நீவிர் பொய்கையாட விரும்பீரெனின், மேற்கூறிய அழகர்மலையைக் கண்டவுடன் அம் மலைக் கட வுளாம் அழகரின் அடித்தாமரையை நினைமின். நினைத்துச்

செல்கையில் அப் பெருமானுடைய கருடக் கொடிமரம் நிற்கும் இடத்தைக் காணலாகும். அப்பால் அழகர் திருமுன்பு சென்று உள்ளங் குழையத் துதித்துப் பணிமின். அக்கடவுள் திருவடிப் பேற்றால் பிறவித்தொல்லை தீர்ந்து இன்பம் எய்துவிர். இவ்வாறு தரிசித்து அம் மலையைக் கடந்து நடப்பீராயின், அண்மையிலுள்ள மதுரையை அடையலாகும்.

“மற்று, நடுவிலுள்ள நெறியைப் பற்றியும் விவரிப்பேன். அவ்வழி மற்றிரண்டு வழிகளினும் செம்மையானது. அதிற் செல்லுகையிலும் நாடுங் காடும் எதிர்ப்படும். அவற்றைக் கடந்து போகுங்கால் ஓர் தெய்வம் தோன்றி மயங்கத்தக்க செயல்களைச் செய்யா நிற்கும். அம் மயக்கின் வயப்பட்டாரை மிக்க துன்பஞ் செய்வது அதன் தொழில். ஆனால், அது முதலில் எவ்வித இடுக்கணுஞ் செய்வதில்லை. நயத்தினால் வஞ்சித்து வழிச் செல்வோரைச் செல்லவிடாமல் மாயஞ் செய்து தடுப்பதுதான் அதன் செயல். அதன் மயக்கினுக் குடன்படாமல் மேற் சென்றால் இனிதே மதுரையை எய்தலாகும்.

“இம் மூவழிகளினும் எது நும்மால் விரும்பப்படுவதோ அதன்மேற் சென்று சேருவீராக. யானும் அரவணைச் செல்வன் அடிபேணச் செல்வேன்” எனக் கிளந்தான். இங்ஙனம் கிளந்தமை கேட்ட கவுந்தியடிகள்,

“நலம்புரி கொள்கை நான்மறை யாள!
பிலம்புக வேண்டும் பெற்றியீங் கில்லை.
கப்பத் திந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட் டியற்கையின் விளங்கக் காணாய்.

இறந்த பிறப்பின் எய்திய வெல்லாம்
பிறந்த பிறப்பிற் காணுயோ நீ
வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ எய்தா அரும்பொருள் ?

யாங்கள் நீ கூறிய முப் பொய்கையினும் படிந்தாடிப் பெற லாவதான பயனை அவற்றிற் படியாமலே பெறுவோம். ஆகலின், பிலத்து வழிப் புகுதலை விரும்பேம். உன் னுல் விரும்பப்பட்ட தெய்வத்தைப் பணிதற்கு நீ போக. நாங்களும் மதுரைப் பெருவழியே நடக்கின்றோம்" என் றிசைத்துக் கண்ணகியும் கோவலனும் பின்தொடரச் சென்று ஒருநல்ல பதியை நண்ணி அன்று ஆங்குத் தங்கினர்.

வன தெய்வம்.

மற்றைநாள், அப் பதியிற் பெயர்ந்து வனவழியே புக்கு மறையோ னுரைத்த கொடும்பாளூர் நெடுங்குளத்து ஏரி கரையை அடுத்துச் சூலக் கவர்வழியின் நடுநெறியே போவாராயினர். சிறிது தூரம் சென்றபின் கவுந்தியடிகட்கும் கண்ணகிக்கும் வழி நடை வருத்தமும் நீர்வேட்கையும் மிகுந்தமையால் நடை யோய்ந்து ஓரிடத்தே தங்கினாராக, கோவலன் அயலே யுள்ளதோர் தடாகத்தை அடுத்து அதன் பெரிய துறை யிடத்தே நின்றான். மாதவியின் சிலதி வசந்தமாலையைப் போல வடிவுகொண்ட வனதெய்வம் ஒன்று, காற்றால் நடுங் கிய கொடியே போல் நடந்துவந்து அவன் காலிணையிற் றாழ்ந்து, கண்ணீர் உகுத்து, "வள்ளால்! நும்பொருட்டாக யான் இக்கானகவழியே தனிவரலாயினேன். நீவிர் கொண்ட பிணக்கைத் தவிர்ப்பான் கருதிய மாதவி, அன்று மாலையில்

எழுதித் தந்த பாசுரத்தினாலும் உமது வரவைப் பெருளா யினளன்றே! ஆகலின், 'யானெழுதிய பாசுரத்தில் யாதுந் தவறில்லை, நீ என் காதலன்பாற் கூறிய மாற்றந் தவறு டைத்துப் போலும். அதனாலன்றோ இறைப்பொழுதும் பிரியலாற்றா அவர் ஊடல் தணிந்து என்பால் வந்திலர். அதனாலன்றோ காதலனை நீத்த வேதனை தீர்ந்திலன்' என்று என்மேற் பழியேற்றிப் புலம்பினள். மனமுடைந்து மயங்கி வீழ்ந்து மிகவுந் துயருற்றாள். மேலும்,

'மேலோ ராயினும் நூலோ ராயினும்
பால்வகை தெரிந்த பகுதியோ ராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட் டொழியுங்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்'

என்று பிரலாபித்துக் கண்ணீர் சொரிந்தாள். யானே தவ றிழைத்தேனென வுறுதி கொண்டாளாதலின் என்மீது வெறுப்புற்று என்முன் நில்லாதே யெனக் கடிந்து என்னைத் துறந்தனள். அதனால், உம்மைத்தேடி நீவிர் கண்ணகி யொடு மதுரை நோக்கிச் சென்றமை வழியில் எதிர்ப்பட் டாரால் அறிந்து தனியே மிகத் துயருழந்து வாணிகஞ் செய்வோர் கூட்டத்திற் கலந்து இங்கு வரலாயினேன். பண் புடையீர்! இங்ஙனம் துயருழந்த எளியேனுக்கு ஏதேனும் நன்மாற்றங் கூறி யருளுவீர்" என்று வருந்தி நின்றது.

பார்த்தான் கோவலன்; 'ஓகோ! அன்று இவ்வனத்தி லொரு மயக்குந் தெய்வம் உண்டென மறையோன் மொழிந் தனனே. அத்தெய்வம் இதுதானோ? அன்றி வசந்தமாலை யேயோ?' என்றையுற்றான். உண்மை யறிய வுன்னினான். அந்தரி மந்திரம் அறிவானாதலால் அதை உருவேற்றினான்.

வசந்தமாலை வடிவொடுவந்த அவ்வனதேவதை அம்மந்திரத்துக்கு அஞ்சிற்று. மாதவத்தாட்டியாம் கவுந்தி யறிந்தால் என்ன நேருமோ வென்று மலங்கிற்று. கற்பின் மிக்க கண்ணகி தெரிந்தால் யாது சூழுமோ வென்று கலங்கிற்று. கற்பின் மகிமையை எத்தெய்வந்தான் மதியா திருத்தல் கூடும்! தவத்தின் ஆற்றலை எதிர்த்து நிற்க வனத்துச் சூர்க்கோ வல்லமையுண்டு! உடனே அத்தெய்வம் நடுக்கத்துடன் கோவலனை நோக்கி, "அண்ணால்! உண்மை கூறுகின்றேன். யானோ இவ்வனத்தில் வாழும் இயக்கி. உன் மீது விருப்புற்று இவ்வேடம்பூண்டு மயக்கலானேன். நினது ஆற்றல் அறியாமல் இயற்றிய இப்பெருப்பிழையை மன்னித்துக் கவுந்தி யடிகட்கும் கண்ணகிக்கும் இதை விளம்பாமற் செல்லக் கடவை" என வேண்டிப் போயிற்று.

கோவலனும் தாக விடாய் தணித்து மற்றிருவருக்கும் தாமரை யிலையில் நீர் கொண்டுபோய்க் கொடுத்தான். அவரும் அக்குளிர்ந்த நீரை யுண்டு வேட்கை தணிந்திருந்தனர்.

மேற்செல்லவேண்டிய பாட்டையோ அருஞ் சுரம் வெயிலோன் வெப்பமோ வெகுகொடுமை. கண்ணகியோ மெய்சோர்ந்து விட்டாள். அவள் பாதங்களோ சிவந்து கொப்புளங் கொண்டு நடக்கவொண்ணமல் நையலாயின. வாட்டமுற்ற இவளைக் கொண்டு இக்கொடுஞ்சுரத்தே தொடர்ந்தேகுதல் அரிதென்று கண்டார் அருந்தவக் கவுந்தியடிகள். மருங்கே குரவமும் கடம்பும் கோங்கும் வேங்கையும் முதலான பல மரங்கள் விரவிக் கவின்கொண் டிலங்கும் பொழிலொன்றில்,

ஐயை கோட்டம்

விழிநுதற் குமரி விண்ணோர் பாவை
மையறு சிறப்பின் வான நாடி

ஆகிய ஐயையைகோயிலைக் கண்டார். அவ்விடத்திற்கு இருவரையும் அழைத்துச் சென்றார். அற்றைநாள் அக்கோட்டத்தின் ஒருபுறத்தே மூவரும் வதிந்திருப்பாராயினர்.

அஃதங்ஙனமாக, ஐயைக்கு அடித் தொண்டாற்றும் வேட்டுவத் தொல்குடியிற் பிறந்த சாலினி யென்பாளொரு தேவராட்டி சன்னதங்கொண்டு மெய்ம் மயிர் சிலிர்ப்ப உடல் நடுக்குற்றுக் கைகளை யுயர்த்திக் குரவை யிட்டுக் கொக்கரித்து ஊரின் நடுமன்றில் நின்று எயினர் குழாம் வியப்பெய்தத் தாளத்தினுக்கு ஒப்பஆடி, "ஏ! வில்லேந்து வேடர்காள்! நீங்கள் இந்தக் கலையூர்திக்குப் பலியூட்டி எத்துணைக் காலம் ஆயிற்று! அவளை மறந்தமையாலன்றோ நீங்கள் வில்வன்மை கெட்டீர்கள்; அதனாலன்றோ வழிப்போக்கரை அடித்துப் பறித்துண்ணும் உங்கள் ஊர் வளங்குன்றிப் போயிற்று; நும் பகைவரூர்கள் செழித்தன; மறக்குடி மக்களாகிய நீவிர் அறக்குடி மக்கள்போற் சினங்குன்றிச் செருக்கொழிந்தீர். இன்னுங் காலம் கடத்துதிரேல் எவ்வாற்றானும் நலம் பெறீர். உடனே பலிக்கடன் கொடுமின்; இல்லையாயின் தாழ்ந்தீர்." என வாக்குரைத்தாள்.

அப்பொழுதே எயினர்களெல்லாங்கூடி ஐயைக்குச் சிறப்புச் செய்வதெனப் பேசி முடித்தனர். உடனே, வழக்கம்போல் தங்கள் குலத்தாளொரு குமரியை ஒப்பனை செய்வான் தொடங்கி, அவளின் நெளிந்த கூந்தலைச் சடையாகப் பின்னி அதனைப் பாம்பின் குட்டிபோற் பொன்னாற் செய்த கயிறுகொண்டு கட்டினர். அச்சடைமுடியிற் பன்றியின்

சிங்கப்பல்லை மூன்றும் பிறையெனச் சாத்தினர். புலிப் பற்க ளை ஒழுங்குபெறக் கோத்துத் தாலியாகச் சூட்டினர். அதன் தோலை மேகலையாக அணிந்தனர். வலிய சிலையை வளைத் துக் கையிற் கொடுத்தனர். கலைமான்மீது எழச்செய்தனர். அன்றியும், பாவையும் மயிலும் பைஞ்சிறைக் கிள்ளையும் காணிக்கையாக எடுத்தனர். பந்துங் கழங்கும் கொடுத் தனர். இத்துணைச் சிறப்புகளோடு,

> ஆறெறி பறையும் சூறைச் சின்னமும்
> கோடுங் குழலும் பீடுகெழு மணியும்

முதலான பல்லியங்கள் முழங்க, எயிற்றியர் எடுத்து வந்த வண்ணமும் சுண்ணமும் தண்ணறுஞ் சாந்தமும் பூவும் புகையும் எள்ளுருண்டையும் நிணச்சோறும் ஆதிய பலவும் ஐயை திருமுன்பு படைக்கப்பட்டன. யாவரும் அடிதொ ழுதனராகி அம்மையின் சந்நிதியில் நின்று,

> ஆனைத்தோல் போர்த்துப் புலியின் உரியுடுத்துக்
> கானத்து எருமைக் கருந்தலைமேல் நின்றாயால்,
> வானோர் வணங்க மறைமேல் மறையாகி
> ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றி யேநிற்பாய்.
>
> வரிவளைக்கை வாளேந்தி மாமயிடற் செற்று
> கரிய திரிகோட்டுக் கலைமிசைமேல் நின்றாயால்,
> அரிஅரன் பூமேலோன் அகமலர்மேல் மன்னும்
> விரிகதிர் அஞ்சோதி விளக்காகி யேநிற்பாய்.
>
> சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்திச்
> செங்கண் அரிமான் சினவிடைமேல் நின்றாயால்,
> கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன் பாகத்து
> மங்கை யுருவாய் மறையேத்த வேநிற்பாய்."

என்று இன்னன வியப்பி ஏத்தினர். அப்பால்,

"வம்பலர் பல்கி வழியும் வளம்பட
வம்புடை வல்வில் எயின்கடன் உண்குவாய்,
சங்கரி அந்தரி நீலி சடாமுடிச்
செங்கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்.

துண்ணென் துடியொடு துஞ்சூ ரெறிதரு
கண்ணில் எயினர் இடுகடன் உண்குவாய்,
விண்ணோர் அமுதுண்டும் சாவ ஒருவரும்
உண்ணாத நஞ்சுண் டிருந்தருள் செய்குவாய்.

பொருள்கொண்டு புண்செயின் அல்லதை யார்க்கும்
அருளில் எயினர் இடுகடன் உண்குவாய்,
மருதில் நடந்துநின் மாமன்செய் வஞ்ச
உருளுஞ் சகடம் உதைத்தருள் செய்குவாய்."

என்று வேண்டினராகித் தொழுதனர்.

பின்னர், தேவி மகிழ்ந்தாளாய்த் தேவராட்டிமேற் பொருந்தினாள். அங்ஙனம் பொருந்தி ஆடிவருவாள் கணவனோடிருந்த கண்ணகியைச் சுட்டி,

"இவளோ!
கொங்கச் செல்வி! குடமலை யாட்டி!
தென்றமிழ்ப் பாவை செய்தவக் கொழுந்து!
ஒருமா மணியா யுலகுக் கோங்கிய
திருமாமணி!"

என்று கூறியருளினள்.

இனித் தனக்கு வரக்கடவதாகிய தெய்விகப் பெருநிலையை ஐயை அருளினளென்றுணராக் கண்ணகி "சாலினி தெய்வமால் கொண்டு சாற்றினள்" என்றெண்ணி அவள் தன் மதிமயக்கத்தைப் பரிகசிப்பாள் போலக் குறு

நகையாடினாள். அவள் கூறிய விஞ்சிய புகழுரைக்கு நாணித் தன் மணவாளனது பிற்புறத்தே ஒதுங்கினாள். அஃதவ்வாறாக, கொற்றவை வேடர்கட்கு வேண்டிய வரம் அருள அவர்கள் அகமலர்ந்து களிமிகுந்து சென்றனர்

அப்பால், கோவலன் கவுந்தியடிகளைப் போற்றி, புண்ணிய முதல்வீ! நாம் செல்லும் இவ்வழி காடும் நாடும் கலந்ததாயினும், முதலை, பாம்பு முதலியனவுந் தொல்லை செய்யா! கரடி புலி யாதிய காட்டு விலங்குகளும் அல்லல் செய்யா! மலைவாழ் சூரும் வருத்தஞ் செய்யா! இதனாலன்றே தென்னவர் ஆணை சிறந்ததென்று எங்கும் இசை பொங்குகின்றது மதிகுல வழுதியர் ஆட்சி நன்று! நன்று! ஆனாலொன்று: கதிரோன் கொடுமை கணக்கிறந்தது. அக்கொடுமையைத் தாங்கலாற்றாது கண்ணகியின் தளிர்போலு மேனி ஒளி மழுங்கிற்று. பருக்கைக்கற்களில் நடந்தறியா அவள் தன் சீறடிகள் நொந்தன. ஆகலின், பகலில் வழிநடத்தல் இனி இயலாது. திங்களொளியிற் செல்லுதலால் ஏதம் ஏதும் இலதே!" என்று விண்ணப்பித்தான். கவுந்தி யடிகளும் உடன்பட்டனர்.

மாதவி ஏவிய கோசிகற் காண்டல்.

கொடுங்கோல் மன்னன் குடைக்கீழ் வாழுங் குடிகள், அவன் என்று தொலைவான் செங்கோல் வேந்தன் என்று வருவான் எனப் பார்த்திருப்பதேபோலத் திங்கட்செல்வன் வருகைக்குக் காத்திருந்தார் கவுந்தியடிகள் முதலாயினர். வெண்கதிரோனுந் தண்கதிர் பரப்பி வெளிவந்தான்.

இவர்களும் வெளிப்போந்தனர். ஆறிடை வருந்திய ஆரணங்கை வணிகப்பெருந்தகை நண்ணி, "காதலீ! இவ் விரவில் நாம் செல்லும்வழியில் சிலவேளை புலிகுறுக்கிடும்; போந்தை சூழலும்; காடி இடிக்கும்; இவற்றிற்குத் திடுக் கிடாது வருவாயாக" என்று திடங்கூறித் துயில்மயக்கங் கொண்டாளாகிய அவள் தன் கையைத் தன் தோளிற் சேர்த்தி இணைபிரியாமல் ஏகினான். மாதவக் கவுந்தியடி களும் பல மெய்யுரைகளை நவின்று நடந்தார். குளிர்நிலா வழிநடக்கும் இவர்கட்கு மகிழூட்டியது. தவமூதாட்டி யின் அறவுரைகளை இனிது கேட்டுநடத்தலால் கண்ண கிக்கு அயர்வு தோன்றவில்லை; பொழுது புலருங்காறும் நடந்தனர். பின்னர், வழியிடையே யுள்ளதொரு பார்ப்பனச் சேரியை நண்ணி, ஆங்குள்ள நூலணி மார்பினர் நான்மறை நவிலாது வரிப்பாட்டிசைக்கும் இழுக்குடையரா யிருத்தல் கண்டு, அவ்வூருக்கு அயலேயுள்ள கோயிலின் புறத்தே கண்ணகியையும் கவுந்தியடிகளையும் இருக்கச்செய்து, காலைக்கடன் கழிப்பான் நீ ணெறிக்க ணுள்ளதோர் குளத்தை யடைந்தான் கோவலன்.

"மாலைவாரா ராயினும் நாளைக் காலைக் காண்குவம்" என்று தேறியிருந்த மாதவி, கோவலன் கண்ணகியொடு வேற்றூர் புக்க செய்தி கேட்டு, அடங்காத் துயர்கொண்டா ளாய் எழுதிக்கொடுத்த ஓலைகொண்டு, கோவலனை நேடி, யா ண்டும் அலைந்துவந்த கௌசிகன் என்பான் ஓர் அந்தணன், கோவலன் புக்க தடாகத்தருகே நிற்பானாயினான். காதலி யொடு கொடுங் கானகவழி நடக்க நேர்ந்தமையாலும், அங் ஙனம் நேர்ந்த விதியை எண்ணியெண்ணித் துக்கித்து

உள்ளங் கலங்கினமையாலும், உடலம்வாடிய கோவலனைச் சற்றுத் தூரத்தே நின்றுபார்த்த அவ் அந்தணன் அடையாளங் காணமாட்டானாய் ஐயுற்றான். பின்னர், சற்று நிதானித்து இவன் கோவலனே என்று கருதிய அந்தணற்கு, அவன்றன் வண்ணங்குன்றிய பான்மையால் மீண்டும் ஐயம் உளதாக, அதனைத் தெளிதற்கு எண்ணி, அடுத்துப் படர்ந்திருந்த குருக்கத்தி நீழலிற் சென்று நின்றான். குருக்கத்திக்கு மாதவியென்ற பெயரும் உண்மையால் அதனை நோக்கி,

"கோவலன் பிரியக் கொடுந்துயர் எய்திய
மாமலர் நெடுங்கண் மாதவி போன்று, இவ்
அருந்திறல் வேனிற்கு அலர்களைந்து உடனே
வருந்தினை போலுநீ மாதவி!"

என்று மொழிந்தனன். அம்மொழிகேட்ட கோவலன் அந்தணனை அடுத்து, "ஐய! நீவிர் உரைத்த மாற்றத்தின் பொருள்யாது?" என வினவினான்.

அந்தணன் ஐயந்தீர்ந்து, 'கோவலனைக் கண்டேன்!' என்று உளம்பூத்து அவனை நோக்கி, "செல்வர்ச் செல்வ! நின்னைக் காணலாயினமையால் என்மனம் பெரிதும் அவலம் நீங்கிற்று. உம்மை யிழந்த பூம்புகார்நகரம் படும்பாடு பகருந்தன்மையதன்று. வணிகப்பெருந்தகாய்! நீ நின் தேவியுடன் நகரை நீங்கியதறிந்து, நின் தந்தைதாயர் மணியிழந்த நாகம்போல ஒளிமழுங்கி யொடுங்கினர்; நின் சுற்றத்தார் உயிரை யிழந்தார் போற் செயலற்றுச் சாம்பினர்; நகரம், சீதையுடன் இராமன் வனநண்ணிய காலத்துக் கலங்கிய அயோத்தியே போன்று கலங்கி மயங்கியது. பெருங்

குடிப் பிறந்தோய்! அன்று வசந்தமாலையிடங் கொடுத்தனுப்பிய மாலைத்திருமுகத்தை நீ மறுத்தமைகேட்டுத் தணத்தல் நோயைத் தாங்கமாட்டாது இரவுஅரவிந்தமெனச் சோர்ந்து பாயலில் வீழ்ந்து கிடந்த மாதவி, நின் நகர் நீக்கத்தையுங் கேட்டுப் பேரிடும்பை யெய்தினள். யான் அப்போழ்து அவள்பாற் சென்றேன். அவள் என்னை வணங்கி 'எனக்கு நேர்ந்த இன்னலைத் தவிர்த்தி' யென மன்றாடினாள். இந்த ஓலையைத் தன்கையாலெழுதி என்கையிற் றந்தாள். 'இதனை என் கண்ணின்கருமணி போல்வானுக்குக் காட்டுதி' என்று ஏத்தினாள். அதுகொண்டு, நின்னைத் தேடிப் பலதேயங் களினுஞ் சென்றலைந்தேன். பின்னர், இவ் அருநெறி நண்ணி அழுங்கலுற்றேன்'' என்று சொல்லிக்கொண்டே ஓலையைக் கொடுத்தான். அதில்,

அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;
குரவர்பணி யன்றியுங் குலப்பிறப் பாட்டியோ
டிரவிடைக் கழிதற்கு என்பிழைப்பு? அறியாது
கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்;
பொய்தீர் காட்சிப் புரையோய்! போற்றி!

(அஃதாவது: ''தேவரீர்! நுங் திருவடிகட்கு வணக்கம்; இவ் ஓலைக்கண் அடியேன் குறிக்குஞ் செய்தியைத் திருவுளத்திற் கொண்டருள்வீராக: தந்தை தாய்க் கியற்றும் பணிவிடைகளையும் விட்டுக் குலத்திற் பிறந்த கற்புடையாட்டியையும் உடன்கொண்டு இரவில் நகரைத்துறந்து போதற்கு யாதுபிழை நேர்ந்ததென் றறியமாட்டாது அடியேன் கவலைகொண்டு அவலிக்கின்றேன். அப் பிழை என்னதேயெனினும், பொய்யற்ற தன்மையீர்! உம்மைப் போற்று

கின்றேன்; நீவிர் அதனைப் பொறுத்தருளல் வேண்டும்") என்று எழுதியிருப்பதை யோர்ந்த கோவலன், சிறிது சிந்தித்து, 'மாதவி தீதிலள்! யானே மாறாக வெண்ணினேன்! இஃதென் வினைப்பயனே!' எனத் தெளிந்து அவள்மேற் கொண்ட வன்மம் நீங்கினன்.

அதன்பின், மாதவி விடுத்த பாசுரமே தன்னை யீன்றோர்க்குத் தான்விண்ணப்பிக்க வேண்டியவற்றையும் அடக்கிக்கொண் டிருப்பதை யுட்கொண்டு, கோசிகனை நோக்கி, "ஐய! இதனை ஏற்றுச்சென்று என்னை யீன்றோரிடங் கொடுத்து அவர்தந்திருவடிகளைத் திக்குநோக்கி வணங்கினேன் என்று செப்பும்; அவர்கள்கொண்ட தளர்ச்சியைத் தீர்ப்பது உமது கடன்; விரைந்து செல்லக் கடவீர்; அடியேன் நும்மொடு வாராமைக்கு வருந்தாதீர்" எனப்பல குளிர்மொழி கூறி யனுப்பினன்.

இப்பால், வணிக வள்ளல், மாசில் கற்பின் மனைவியும் மாதவக் கவுந்தியடிகளும் இருக்கு மிடத்தைச் சார்ந்து,

வையை கடந்து மதிற்புறஞ் சார்தல்.

அவர்களோடும் அவ்விடத்தை விட்டுப் போயினன். போம்வழியில், கொற்றவையின் வெற்றிபாடும் பாணரைக் கண்டு அவரோடு அளவளாவி "மதுரை எத்துணைத் தூரத்துள்ளது?" என்று கேட்டான். அதற்கவர், "நண்ப! சங்கப் புலவர்தம் பாடல்மணத்தோடு ஏனைப்பல நறுமணமுங் கமழும் பாண்டியன் மூதூர் சேயதன்று; அணிமைத்தே" என அறைந்தனர். அன்று அப் பாணர்தம் ஊரில் தங்கியிருந்து இரவில் நிலாவெழுந்தபின் வெளிப்பட்டு வழிக்கொண்டு சென்றனர் கோவலன் முதலியோர் மூவரும். செல்லச் செல்ல, மதுரையம் பதியிற் கடலென முழங்கும்,

காலை முரசக் கனைகுரல் ஓதையும்
நான்மறை யந்தணர் நவின்ற ஓதையும்
மாதவ ரோதி மலிந்த ஓதையும்
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோ ரெடுத்த நாளணி முழவமும்
போரிற் கொண்ட பொருகரி முழக்கமும்
வாரிக் கொண்ட வயக்கரி முழக்கமும்
பணைநிலைப் புரவி ஆலும் ஓதையும்

கலந்த பெரு முழக்கம் அவர்தம் செவிப்புலத் தெய்தியது. வாரீர்! வாரீர்! எனக்கூடலம்பதி முழங்குமா போன்ற அப் பேரொலியைக் கேட்ட அவர் மேலும் நடந்து,

குரவமும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
அரவமும் நாகமும் திலகமு மருதமும்
சேடலும் செருந்தியும் செண்பக ஓங்கலும்
பாடலந் தன்னொடு பன்மலர் விரிந்து
குருகுந் தளவமும் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெண்கூ தாளமும்
குடசமும் வெதிரமும் கொழுங்கொடிப் பகன்றையும்
பிடவமும் மயிலையும்

அடர்ந்து படர்ந்த வையை யாற்றின் கரைமேலே நடந்து அதன் மதுரைத் துறையை அடையலாயினர்.

புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடியாம் வையை, பல மலர்களையுந் தன்மேற் பூண்டு போதலால் "புனல் யாறன்றிது பூம்புனல் யாறு" என்று அதனைப் பாராட்டித் தொழுதனர். தொழுத மூவரும், புணை யேறி நதியைக் கடந்து நகரின் கீழ்த்திசை வாயிலின் பக்கத்தே அமைந்த அருகமுனிவர் இருக்கையை அடைந்து அதில் வதிய லாயினர்.

# மதுரைச் செய்தி.

—:o:—

நகரக் காட்சி.

மதுரை மா நகரம், நுதல் விழிப்பெருமானுகிய சோக்கேசர் கோயிலும் முருகர் கோயிலும் திருமால் கோயிலும் கலப்பை கைக்கொண்ட பலதேவர் கோயிலும் அறவோர் பள்ளியும் அரச மாளிகையும் ஆங்காங்கு விளங்கப்பெற்றது. நகரின் புறமெங்கும் வைகைநீர் பாய்தலால் பலவகை மலர்தரு தருக்களும் தென்னை கமுகு வாழை ஆதிய பலன்றரு மரங்களும் செடிகளும் கொடிகளும் செழித்திருக்கும்; ஏரியும் வயல்களும் பொலிந்திருக்கும்; தென்மலைச் சாந்தத் தென்றல் வீசுதலாற் கோடைக்காலமும் குளிர்ந்திருக்கும்; ஆழ்ந்தகன்ற அகழி சூழ்ந்திருக்கும்; பகையைத் துகளாக்கும் சிறந்த விசைப்பொறிகள் அமைக்கப்பெற்று வெற்றிக்கொடிகள் நாட்டப்பெற்ற மதில் வானை அளாவி வயங்கி நிற்கும்; மதில் வாயில்களை யவனர் காவல் செய்து நிற்பர். நகரினுள், பல்வேறு குலத்தவர் பல்வேறு வீதிகளில் வதிந்துவாழ்வர்; எங்கும் செல்வம் மல்கியிருக்கும்; விலையுயர்ந்த மாணிக்கமுதலிய இரத்தினக் கடைகளும் பொற்கடைகளும் புடைவைக் கடைகளும் கூலக்கடைகளும் மிளிர்ந்து சிறந்திருக்கும்; அழகு சுமந்த மகளிரும் ஆண்மை மிகுந்த ஆடவரும் தேவநாடரோவெனத் திகழ்ந்திருப்பர்! கண்டார் வியக்கும் கைத்தொழிலாளர் களித்திருப்பர். சுருங்கக்கூறின் எல்லா நலமும் வாய்ந்த கூடலம்பதியானது இந்திரன் தனது அருங்கலப் பேழையைத் திறந்துவைத்தாற் போன்றது. சங்கம் மரு

விய அத் தொன்னகர் பாண்டியமன்னர்கள் பன்னெடுங்கா லம் வைகி அரசுபுரிந்து வந்த சீர்மைத்து. இக் கதை நிகழ் காலத்திற் பாண்டியன் நெடுஞ்செழியன் என்பான் செங்கோலோச்சி யிருந்தனன்.

கோவலன் நகர் கண்டு மீளல்.

அஃதங்ஙனமாக. அறவுரைகேட்டு அறிவனை யேத்தற் பொருட்டு மதுரைப் புறஞ்சேரியில் முனிவரிருக்கையிற் றங்கிய கவுந்தியடிகளைக் கோவலன் கை தொழுது "செய்தவத்தீர்! நற்குடிப்பி றந்தார், நாணம் உயிரினுஞ் சிறந்ததெனப் போற்றும் மகளி ரொடு தனிவழியேகுதல் சால்பன்றாகவும், பெருங்குடிவ ணிகனாகிய யான் ஒழுக்கம் நீங்கிய இழுக்குடை மக்கள் போல், இந் நறுமலர் மேனியாள் நடுக்கமுந் துயரமுங்கொ ள்ளும் வண்ணம், காட்டினும் மலையினும் கல்லினும் முள்ளி னும் அவளை அழைத்துவந்த கொடுமை ஆற்றொணாதது. அருநெறியில் அறியாத் தேயத்தில் நாங்கள் அலைந்து திரி யுங் காலம் வருமென்று கனவினுங் கண்டிலேன். இப்பெரி ய அரும்பாடுபட முற்பவத்தில் எப் பாவம் செய்தேனோ? யாது குறையோ? அறிகிலேன். பெரியீர்! நாங்கள் தங்க ளை முதன்முதலாகக் கண்டஞான்று 'யானும் மதுரை வருவேன்' என்று தாங்கள் நவின்ற மாத்திரத்தே கண் ணகி நும் பாதமாகிய காவலைப் பெற்றாள் என அவலம்நீங்கி னேன். இஞ்ஞான்று அடியேன் இந்நகர்வாழ் வணிகரைக் கண்டு அவர்பால் எனது வரன்முறையை விண்டு வரவிரும் பினேன். தேவரீர் திருவுளப்பாங்கு எவ்வாறோ?" என மனநைந்து விண்ணப்பித்தான்.

அவ் விண்ணப்பஞ் செவிக்கொண்ட தவமூதாட்டியார், கோவலனைக் கடைக்கணித்து "ஏ திருவாள! வருந்தற்க. தாந்தாம் முற்செய்தவினை தாமே யனுபவிப்பர் என்னுந் திருமொழியை அறியாயோ? நீ நினது முன்னைப் பிறப்பின் முற்பகுதியில் நல்வினை யாற்றிப் பிற்பகுதியில் தீவினையும் செய்தனை. அதனால், இவ்வாறு அன்னை தந்தைகளைச் சுற்றத்தைச் செல்வத்தைச் சுகத்தை நீத்து அல்லலுழந்தாய்.

மறத்துறை நீங்குமின் வல்வினை யூட்டுமென்று
அறத்துறை மாக்கள் திறத்திற் சாற்றி
நாக்கடிப்பாக வாய்ப்பறை யறையினும்
யாப்பறை மாக்கள் இயல்பிற் கொள்ளார்
தீதுடை வெவ்வினை யுருத்த காலைப்
பேதமை கந்தாப் பெரும்பே துறுவர்

(அஃதாவது, எவ்வுயிர்க்கும் தீங்குசெய்யுந் தன்மையினின்றும் நீங்குமின்; நீங்கிராயின் அந்தீவினை விளைவு நும்மைத் துன்பம் நுகரச்செய்யும்; என்று அறங்கூறும் பெரியோர்கள் தமது நாவைக் கோலாகவும் வாயைப்பறையாகவுங்கொண்டு யாண்டுஞ் சாற்றினும், புண்ணியத்தின் உறுதியற்றோர் அந்நல்லுரையைக் கடைப்பிடியார்; பின்னர்த் தீவினையால் பொல்லாங்கு சூழ்ந்து வருத்துங்காலத்து அதனை ஆற்றாராய்த் தமதுபேதைமையையே ஆதாரமாகக்கொண்டு அழுங்குவர்.) ஆனால்,

ஒய்யா வினைப்பயன் உண்ணுங் காலைக்
கையாறு கொள்ளார் கற்றறி மாக்கள்;
பிரிதற் றுன்பமும் புணர்தற் றுன்பமும்
உருவி லாளன் ஒறுக்குந் துன்பமும்

புரிகுழல் மாதர்ப் புணர்ந்தோர்க் கல்லது
ஒருதனி வாழ்க்கை யுரவோர்க் கில்லை.

அறம் பொருள் இன்பம் என்னும் மூன்றனுள் பொருளும் இன்பமும் சிறுபான்மை இன்பம் பயந்து பெரும்பான்மை துன்பம் விளைவியா நிற்கும், அறமோ சிறுபான்மை துன்பமும் பெரும்பான்மை இன்பமும் விளைவிக்கும். இவற்றை, ஒன்றை மற்றொன்றாக மாறியெண்ணி அல்லலுழப்பார் மிகப்பலர். கோவல! "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை" என்ற பெருமொழியைக் கடைப்பிடித்து மனைவியோடு அயோத்தியை விட்டுக் கடுங்கானுற்றைந்து மனைவியை மாற்றான் கொள்ளச் சாற்றொணு வேதனையுற்ற இராமன், வேதனை யீன்ற திருமால் என்பதை அறியாயோ? அதுவேயுமன்றிச் சூதாட்டத்தால் நாடிழந்து நகரிழந்து மனைவியொடு வனம் நண்ணிக் காதலியைக் காரிருளிற் கானகத்தே கைவிட்ட நளன் கதை தெரியாயோ? அங்ஙனம் அவன் இடையாமத்தே தமயந்தியை விட்டுப்பிரிந்தது அவன்றன் பிழையோ? அன்றித் தமயந்திசெய் பிழையேயோ? இவையெல்லாம் அம்மை வல்வினையான் விளைந்தவன்றோ?

"நம்பி! எதுக்கு மனங்கலங்கினை? இராமனைப்போல் நளனைப்போல் காதலியைப் பிரிந்தா யல்லையே! பிரியா வாழ்க்கை பெற்ற நீ இவ்வண்ணம் கலங்குதல் வேண்டா. வருத்தம் விண்டு மதுரையுட் சென்று விருந்தெதிர் கொள்வாரைக் கண்டு வரக்கடவாய்" என்று ஆறுதல் கூறி அனுப்பினர். இப் பொருளுரையால் உள்ளந்தேறிய செல்லாச் செல்வன் அவரை வணங்கி மதுரைத் திருநகரை நோக்கிச் சென்றான். மங்குல் தங்கிய மதிலைக்கடந்து உட்புக்கஅவன்,

எண்ணெண் கலையோர் இருபெரு வீதியும்;
வகைதெரி வறியா வளந்தலை மயங்கிய
அரசுவிழை திருவின் அங்காடி வீதியும்;
நூலினு மயிரினும் நுழைநூற் பட்டினும்
பால்வகை தெரியாப் பன்னூறு அடுக்கத்து
நறுமடி செறிந்த அறுவை வீதியும்;
கூலம் குவித்த கூல வீதியும்;
பால்வேறு தெரிந்த நால்வேறு வீதியும்;

பல்வேறு தரத்தினவாகிய இரத்தினங்கள் பொன் முதலியன கொண்டு விற்கும் ஆவண வீதியும்; நாற்சந்தி கூடும் இடங்களும்; முச்சந்தி கூடும் இடங்களும்; குறுந்தெரு நெடுந்தெரு முதலிய எங்குஞ் சென்று ஆங்காங்குள்ள கண்கொளாக் காட்சிகளைக் கண்ணுற்று இறும்பூதெய்தி, வந்த காரியத்தை மறந்து, தவமூதாட்டியார் உறைவிடஞ் சென்று, அவரிடம் மதுரைப் பெருவளனையும் வழுதிதன் வண்மையையும் எடுத்துக்கூறி இன்புற்றிருந்தனன்.

அவ்வமயத்தில், காவிரிப்பூம் பட்டினத்திற்குத் தென்மேற்கில் நான்கு நாழிகை வழித்தூரத்திலுள்ள **தலைச்செங்காடு** என்னும் ஊரினின்றும் அகத்திய முனிவர் இருந்தருளும் பொதியின் மலைக்கட் சென்று, அம்மலையை வலங்கொண்டு,— குமரியாடி மீண்டு, தன் ஊராகிய தலைச்செங்காட்டை அடையவருகின்ற **மாடலன்** என்பான் வேதியர் தலைவன், வழிவந்த வருத்தந் தீர்தற் பொருட்டு, கவுந்தியடிகளிருந்த அருகப்பள்ளியில் வந்து இருப்பானாயினன். கோவலன், அந்தணர் முதல்வனை முன்னரே நன்கறிந்தோன் ஆகலின், அவன்முன் சென்று சேவடிபணிந்தான்.

அக்கால், வள்ளலைக்கண்டு மனமிகக் குழைந்த மறை யோன் அவனை நோக்கி "செம்மால்! நின் காதற்கணி கைக்கு மகள் பிறந்தாளாக, அக்குழவிக்கு நின் ஆணையின் வண்ணம் அணிமேகலையார் ஆயிரங் கணிகையர் மணிமேகலை எனப் பெயரிட்டு மங்கலங் கொண்டாடிய ஞான்று, வனப்பு நனிமிக்க மாதவியும் நீயும் ஆதுலர்க்குச் செம்பொன் னை அள்ளியள்ளி அளித்தபோழ்து, மூப்பால்முதுகு வளைந்து தளர்நடைகொண்டு தண்டூன்றித் தள்ளாடித்தள்ளாடித் தா னம்பெற வருவோன் ஒரு முதுமறையோன் எதிர்வந்த மத யானைகையில் சிக்கினனாக, நீ அதுகண்டு, கழிபேரிரக்கங் கொண்டு ஓடிச்சென்று யானையை அதட்டி அதன் துதிக் கையிற்பட்ட மறையோனை விடுவித்து அக் கையிற் புகுந்து வெள்ளிய கொம்பின் வழியாக அதன் பிடரில் ஏறி அம் மதயானையைச் சினம் அடக்கிய கருணைவீரன் அல்லையோ!

"அதுவேயுமன்றி, பூம்புகார்ப் பதியிலுள்ள பார்ப் பனி ஒருத்தி, தன் பிள்ளையையும் தான் வளர்த்த கீரியையுந் தனிவைத்து வெளிச்சென்றாள். அக்காலை ஆங்கோர் பாம்பு அணுக, கீரி அதனைத்துணித்து இரத்தந்தோய்ந்த வாயுடன் எதிர் நோக்கியிருந்து அவளைக்கண்டதும் அவள்முன்சென் றது. அது தன்பிள்ளையைக் கடித்துக் குருதியாடி வந்ததெ னக் கருதி மனங் கொதித்துக் கையிலிருந்த மணையினால் அதனை அடித்துக்கொன்றாள். அத் தீய செயலைப் பொ றுக்கலாற்றாத அவள் கணவன் 'இப்பழியிழைத்த நின்னொ டுவாழும் வாழ்க்கை இனித் தகுவதன்று; யான் கங்கை யாடச் செல்கின்றேன்.' என்று வெளியேறிச் செல்வோ னைப் பார்ப்பனி பின்தொடர்ந்து பரிபவப்பட்டாளாக; உட

னே ஓலையொன்றெழுதி அவள் கைக்கொடுத்து, 'வட மொழி வாசகம் வரைந்த இவ்வோலையை வாசித்துப் பொருளுணர்வார் மாட்டுக் கொடுப்பாய்; பொறையற்ற நினக்கும் எனக்கும் இனித் தொடர்பிருத்தல் செல்லாது; யான் செல்கின்றேன்' என மொழிந்து போயினன். அப்பால், பார்ப்பனி அவ் வோலைகைக்கொண்டு கடை வீதிகளினும் பிறமறுகுகளினுஞ் சென்று, 'இவ்வேட்டைவாங்கிப் பாவந்தொலைத்துப் பயன்கொள்வீரோ' என்று கூறிச் சென்றாள். செல்வதைக்கண்ட நீ அவளை யழைத்து, 'ஓ அருமறையாட்டி! நீ உற்றதுயர் யாது? கூறுவது என்?' எனக்கேட்க; அம்மாது நடந்தவற்றை நவின்று ஓலையை நீட்ட, அதைப் படித்துணர்ந்த நீ 'அம்ம! அஞ்சற்க; கவலற்க; யானே நின்துயர் தொலைப்பேன்' என்று ஆறுதல்கூறி அவள் ஈட்டிய கொலைப்பாவம் கழிதற்கேற்ற தானங்களை நூலோர் நுவன்றவகையே செய்து, அம்மட்டோடு நில்லாது, சினந்துசென்ற அவள் கணவனையும் மீட்டுக்கொணர்வித்து, அவ் விருவரையும் ஒன்றி வாழச் செய்து, அவர்தம் பிற்கால வாழ்க்கைக்கு வேண்டும் பெருஞ் செல்வமும் நனிநல்கி நல்வழிப்படுத்திய செல்லாச் செல்வன் அல்லையோ!

"அல்லாமலும், பத்தினியொருத்தியைப் படிற்றொழுக்கப் பட்டாள்என அவள்கணவனிடம் ஒருவறுமையாளன் பொய்க்கற்பனை கட்டிவிடவே, அங்ஙனம் கட்டிவிட்ட பழிமொழிக்குத் தண்டனையாகச் சதுக்கப்பூதத்தின் கைப்பாசம் அவனைக் கட்டியிழுத்துச் செல்ல, அவன் தாய் தன்ஒரு மகனை இழத்தற்கு ஆற்றாளாகி அலறி அரற்றித் துயருற்

றனள். அவள் துயர்கண் டிரங்கிய நீ, அவ் வறிஞோனைக் கட்டிய பாசத்துள் நுழைந்து, 'ஆ பூதநாதனே! அடியேன் உயிரைக்கொண்டு இந்த எளியோன் உயிரைக் காத்தருளுதி' எனவேண்டியும், அதைப் பொருட்படுத்தாத அப்பூதம்,

'நரகன் உயிர்க்கு நல்லுயிர் கொண்டு
பரகதி யிழக்கும் பான்மை யீங்கில்லை;

ஆதலால் நின்கருத்து ஏலாது' எனமறுத்து உன்கண் முன்னே அவனை அறைந்து விழுங்கிவிட, அதனால் சொல்லொணு இடர்கொண்ட அவன்றன் அன்னையைத் தேற்றி அழைத்துச்சென்று அவட்கும் அவள்தன் சுற்றத்தார்க்கும் அவன்சாவால் நேர்ந்த அல்லலைநீக்கி ஆக்கம்நல்கி அன்புமீக்கூர்ந்து பல்யாண்டு பசிப்பிணி தீர்த்துக் காத்த இல்லோர்செம்மல் அல்லையோ!

"ஏ விருத்தகோபால! நீ இம்மையில் இன்னபல நல்வினை யியற்றக் கண்டதன்றி யாதாமொரு தீவினை யிழைத்ததைக் கண்டறியேன். இங்ஙனமாகவும், இத் திருத்தகு மாமணியாம் தளிரனையாளோடு இவ்வண்ணம் போந்து உழலுதற்காய அருவினை அம்மையிற் புரிந்ததே யோ!" என்றான்.

இம் மொழிகளைச் செவியேற்ற கோவலன், "ஐய! அடியேன் விடியற்காலத்தே யோர் தீக்கனவு கண்டேன்; அதனைத் தங்கட்குக் கூறுதிருக்க வியலவில்லை; ஆதலாற் கூறுவேன். நம் கண்ணகி நடுங்கு துயர் எய்த யான் உடுத்திருந்த ஆடை பிறரால் கவரப்பட்டது; அப்பால், பன்றியின்மீது ஏறலா

கோவலன் கனு.

னேன்; பின்னர் நானும் கண்ணகியும் பாசக்கட்டை யறுத்த அருளுடையோர் பெறும்பேற்றைப் பெற்ரேம்; மாதவி மணிமேகலையைப் புத்தருக்கு அளித்தாள்; இதுதான் அக்கனு.

விடியற்காலக் கனு உடனே பலிக்கும் எனப் பல்லோரும் பகருவர். ஆதலால், ஏதோ ஒருதீங்கு என்னைச் சூழப் போகின்றது" என்று மனம் உளைந்து உரைக்கலாயினன்.

இம்மாற்றங்கேட்ட மாடலமறையோனும் கவுந்தியடிகளும் அவனைப் பார்த்து, "இவ் அறப்பள்ளி யிருக்கை துறவிகட் கல்லது மற்றையோர்க்குப் பொருந்தாது; ஆகலின், நீ நின்மனையாளொடும் போதுபடுமுன் நகருட் போதுவாயாக; ஆண்டுள்ள வணிகர்பெருமக்கள் நின்னை மாசாத்துவான் மகனென அறிந்தக்கால் எதிரேற்றுப் போற்றுவார்கள்" எனப் புகலுகையில், மாதரி யென்பாள், ஆயர்குலத்து அரிவை, ஆரியாங்கனை யென்னும் இயக்கிக்குப் பாற்சோறு படைத்து வழிபட்டு வருபவள், அறப்பள்ளிக்கண் இருந்த கழிபெருஞ் சிறப்பின் காவுந்தியையைக் கண்டு அடிதொழுதனள்.

அடைக்கலம் அருளல்.

தொழுத முதியாளுக்கு ஆசிகூறிய அடிகள், 'பசுக்களைக்காத்து அதனால்வரும் பயனைப் பலர்க்கும் பகிர்ந்தளிக்கும் ஆயர்தம் வாழ்க்கை தீங்கற்றது; மாதரி மனத்தூய்மை யுடையவள்; வாய்மை மிகுந்தவள்; நாலுவிதத்தும் நனி நல்லள்; ஆகலின், இவளோடு கண்ணகியை இருக்கச் செய்வதில் ஏதம் யாதும் எய்தாது' என்று எண்ணி, அவட்குக் கோவலனைக் காட்டி, "மாதரீ! கேட்பாயாக. இவன் இம்

மயிலியல்தன் மணமகனுவான். இவன்பெயர் கோவலன் என்பது. இவர்கள் காவிரிப்பூம்பட்டினத்தினின்றும் போந் தவர்கள். இவன் தந்தை மாசாத்துவான் என்பான் காவிரிப் பூம்பட்டினத்தின் திரண்டசெல்வன். இவனை இன்னுன் மகனென்று மதுரைப்பெருவணிகர் அறிவாராகுல், பெறற் கரிய பெரும்பொருள் பெற்றூர்போல இவனையும் இவன் துணைவியையும் எதிரேற்றுக்கொண்டுபோய் இல்லின்கண் வைத்துப் போற்றுவர். அங்ஙனம் இவரை இவ்வூர் வணி கச்செல்வர் அறியுமட்டும் இக் குலமகளை நினக்கு அடைக் கலமாகத் தந்தேன். இட்டுச் சென்று, இம்

மங்கல மடந்தையை நன்னீர் ஆட்டிச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனந் தீட்டித்
தேமென் கூந்தல் சின்மலர் பெய்து
தூமடி யுடீஇத் தொல்லோர் சிறப்பின்
ஆயமும் காவலும் ஆயிழை தனக்குத்
தாயும் நீயே யாகித் தாங்கு''

என்று பணித்து மேலுங் கூறுவார்.

''நல்லோய்! இம் மடமகளோ அடர்வனத்தில் நடை யான்மெலிந்து இடருழந்தாள். யாண்டும் நிலமகள்காணுப் பஞ்சின்மெல்லிய இவள்சீறடி பாறையும் பருக்கையும் விஞ் சிய சுரநெறியில் அருங்கோடையில் பட்டபாடு பன்னத் தரமா! ஆ மாதரி! அங்ஙனமாகவும் தன்துயர் கருதாது, கனல்பரப்பிடு கதிர்வெம்மையிற் காதலன் இங்ஙனம் வாட லாயினனே என்று நடுங்குதுயர் எய்தி நாப்புலர வாடின வண்ணமாக வந்தாள் இப் பூங்கொடி. இதனுல் இவளது கற்பின்மேம்பாடு எத்துணைச் சிறந்ததென்பதை உய்த் துணருவாயாக. ஆனதால்,

கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது
பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!
வானம் பொய்யாது வளம்பிழைப்பு அறியாது
நீள்நில வேந்தர் கொற்றஞ் சிதையாது
பத்தினிப் பெண்டிர் இருந்தநாடு'

என்று உலகோர் உரைக்கும் அந்தச் சால்புமிக்க நன்மொழியை நீ அறியாதவளோ! அன்றியும்,

தவத்தோ ரடைக்கலம் தான்சிறி தாயினும்
மிகப்பே ரின்பம் தருவது!

அதைப்பற்றிக் கூறத்தகுந்ததும் முன்னொரு காலத்தில் நடந்ததும் ஆகிய கதையொன்றுண்டு. அதையும் நினக்கு விளம்புவன் கேட்டி.

குரங்குக்கை வானவன்.

"காவிரிப்பூம் பட்டினத்துப் பிண்டிமர நீழலிலே தருமம் சாற்றியிருந்த சாரணர் எதிரே வானவில்போல ஒளிவிட்டுப் பூமாலை மணிமாலை புனைந்து பொன்னணி அணிந்து அழகுநனி மிகுந்த ஆகத்தனாகிய ஒரு வானவன் தோன்றினான். அவன் கைகளிலொன்று குரங்கின் கையாக விருந்தது. ஆங்கிருந்து அறங்கேட்டார் சாவகர் யாவரும் அதுகண்டு வியப்புற்றெழுந்து சாரணரைத் தொழுது 'இஃதென் வரலாறு' என வினவினர். அதற்குச் சாரணன் 'அவையீர்! வணிகருட் சிறந்தார்க்கு அரசனால் அளிக்கப்பெறும் எட்டி யென்னும் பட்டம் பெற்றானொரு வணிகவள்ளல் இப் பட்டினத்தில் இருந்தான். அவன் பெயர் சாயலன் என்பது. அவனுடைய மனையாள் ஒருநாள், தவத்தின் மிக்கான் ஒரு முத

ல்வனைத் தனது செய்மைகருதி எதிர்கொண்டு வரவேற்று உண்பித்தாள். அவ்வமயத்தில் ஊரரால் துரத்தப்பட்டு உணவுங்கொள்ளாது ஆக்கங்கெட்டு வந்த கருங்குரங்கொன்று, அம் மனையை நண்ணி அஞ்சிப்புகுந்து மாதவன் பாதம் வணங்கி அவன் உண்டு எஞ்சிய மிச்சிலையும் கைகழுவியநீரையும் அருந்தி, கடும்பசி தணிந்து, அவ் அறநெறியாளற்குத் தனது நல்குரவைக் குறிப்பித்து இரங்குமாபோல அவன்றன் அருள்முகம் பார்த்து இருந்தது. அதன்பாற் பேரிரக்கங்கொண்ட மாதவன், தன்னை உண்பித்த அறக்கிழத்தியை நோக்கி "அன்னாய்! இதனை உன்பிள்ளைகளோடு ஒப்பக்கொண்டு காப்பாற்றுவாய்" என்று அடைக்கலமாக விடுக்கலாயினன். அம் மாதவன் உரையைப் பொன்னேபோல் பாராட்டிய அவள், குரங்கை அன்புகனியப் பாராட்டினாள். அதற்குத்தன் குடும்பப் பொருள் பண்டங்களில் தன் மக்களுக்கொப்பப் பாகமும் பிரித்து வைக்கச் செய்தாள். இங்ஙனம் சீராட்டி வளர்க்கப்பெற்ற குரங்கு சின்னாளிருந்து இறந்துவிடவே, அதற்கென ஒதுக்கப்பட்டிருந்த செல்வங்களையெல்லாம் அக் குரங்கின் இழிபிறப்பு ஒழிகவெனத் தானஞ் செய்தாள் அவ்வறச்செல்வி. அத் தானப்பயனால் அக்குரங்கு, மத்திபதேசத்திலே வாரணவாசி என்னும் நகரத்திலே உத்தரகௌத்தன் என்னும் அரசனுக்கு ஓர் அருமை மகனாய்ப் பிறந்து, உருவினாலும் திருவினாலும் உணர்வினாலும் பிறவாற்றாலும் மேம்பட்டு, பலவகைப்பட்ட தானங்களை மேலும் மேலும் புரிந்து, முப்பத்திரண்டு யாண்டு செழு முடிகவித்துச் செங்கோலோச்சி, யாக்கை நீத்து, பின்னர் இத் தேவயாக்கை பெற்றது. அதுதான் இத்தேவகுமாரன்! இவன் பழம் பிறப்பிலே தன்னைக்காத்த சாய

லன் மனைவியின் தானப் பெரும் பயனால் இங்ஙனம் தேவ யாக்கை பெற்றதை உலகறியக் காட்டவும், அங்ங னம் காட்டுமாற்றால் அவள்பால் தான்கொண்ட நன்றியை வெளிப்படுத்தவுங்கருதி வானின் நீங்கி வானரக்கையையும் ஒருபாற்கொண்டு இன்னணம் வந்தான். தானப் பெரும் பயனால் இழிந்த குரங்கொன்று எப்பதவி பெற்றதென இத னால் கண்டீரோ! அடைக்கலங்காத்த எட்டிசாயலனும் மனைவியும் விட்டுலகத்தே இன்பந் திளைக்கின்றார்காண்!' எனக் கிளந்து முடித்தான்.

"கண்டாயோ மாதரி! 'தவத்தோர் அடைக்கலம் தான் சிறிதாயினும் மிகப் பேரின்பம் தருவது' என்றதை வலியுறுத் த வேறு சான்றும் வேண்டுமோ? நேரமாகின்றது. பொ ழுதுபடுமுன் இந்த மட்டார் குழலியையும் இட்டுச்செல்" என்று சொற்பெருக்கிட்டார் கவுந்தியடிகள்.

அந் நன்மொழிகளை மனத்துக்கொண்ட மாதரி, அடி களைத் தொழுது நங்கையையும் நம்பியையும் உடன் கொண் டு செல்வாளாயினள். வழியில் பசுநிரை காத்தும் பால் சுமந்தும் வந்தாராகிய ஆயர் ஆய்ச்சியர், கண்ணகியின் கட்டழகைக் கண்டு வியந்து புறஞ்சூழ்ந்துவர பொருநரைப் போராற்றிப் புறங்காட்டு விக்கும் பொறிகள்மிக்க மதில்வாயிலைக் கடந்துசென்று த னது மனையைச் சேர்ந்தாள் மாதரி. கண்ணகியைக் காதல னொடு, தனது இல்லத்தின் பக்கத்தே யுள்ளதும், நாற்புற மும் கட்டுவேலி சூழ்ந்ததும், குளிர்தரு காவணம் புனைந்த தும், செம்மண் பூசியதுமான அழகிய புதிய சிறுவீட்டில் அமரச் செய்தாள். அதன்பின் தன் குலமங்கையர் சிலரும்

மாதரி மனை.

புடைசூழ நின்று கண்ணகியை நீராட்டிய மாதரி அவட்கு "இயற்கை எழில் மிக்கீர்! உமக்கு உறுதுணையின்றே என்று எண்ணுதீர். இவள்தான் என் மகள் ஐயை என்பவள். இவளை நீர் உம்முடைய பணிவிடைக்காரியாக ஏற்றுக்கொள்ளும். நீர் ஒன்றிற்கும் கவலைவேண்டா, நாங்கள் உம்மைப் பொன்போற் போற்றுவோம்" என்று தேறுதல் கூறி சமையலுக்கு வேண்டிய புதுப்பாண்டங்களோடு,

கோளிப் பாகற் கொழுங்கனித் திரள்காய்
வாள்வரிக் கொடுங்காய் மாதுளம் பசுங்காய்
மாவின் கனியொடு வாழைத் தீங்கனி
சாலியரிசி

முதலானவைகளும் பாலும் தயிரும் நெய்யும் பிறவும் கொடுப்பாளாயினள்.

அவற்றை யேற்ற கண்ணகி, ஐயை வைக்கோலால் எரிமூட்டி உதவ, அட்டில்புக்கு அடிசில் சமைத்தாள். பின்பு மட்கல நீரால் மணவாளன் மலரடிகளைக் கழுவி வணங்கிப் பனையோலைத் தடுக்கில் இருக்கச்செய்து, தரையில் நீர் தெளித்து, தலைவாழை இலையிட்டு அமுதுபடைத்தாள். கோவலன் உண்ணலாயினன். அப்போழ்து புறம்பே நின்ற ஐயையும் அவள்தன் அன்னையும் "அந்த வடமதுரைக் கண்ணே

ஆயர் பாடியில் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ
நல்லமுது உண்ணும் நம்பி ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம்குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமந் தீர்த்த விளக்குக் கொல்!"

என்றும், "நமது இல்லின்கண் எழுந்தருளிய இவர்தம் எழிற்காட்சி கண்கொளாக் காட்சிகாண்" என்றும் உவகை பொங்கப் புகழ்பேசினர்,

இப்பால், உண்டு வாய் பூசியிருந்த கோவலன், வெற்றிலைச் சுருள் மடித்துக் கொடுத்துநின்ற கண்ணகியை அருகழைத்துப் "பெண்ணே! வேட்டுவர் வழிப்பறி செய்யும் கடுங்கானகத்தில் இவ் வேனிற்காலத்தில் கல்லினும் முள்ளினும் நாம் எப்பாடு பட்டோமோவென்று நம் பெற்றோர்கள் பெருந்துயரெய்தி யிருப்பரே! கண்மணீ! இதனை உள்ளுந்தோறும் உள்ளுந்தோறும் உள்ளம் உடைகின்றது. நாம் இங்ஙனம் உழந்தது கனவோ நனவோ! நனவாயின் இத்தகைய பேரிடும்பை யெய்துதற்கு நாம் இழைத்த தீவினைதான் யாதோ! ஒன்றுந்தோன்றவில்லை. கண்ணகி! நானோ முன்னம், பயனில்சொற் பாராட்டுவோரையும் பரத்தையின்பம் நுகரும் காமுகரையும் நட்பாளராகக் கொண்டேன்; அவரோடு புன்மொழி புகலுவதும் பெருநகை புரிவதும் இனியவெனக் கொண்டேன்; பெரியோரின் உண்மை உரைகளை வெறுத்தேன். இங்ஙனம் ஒழுக்கங் கெட்டமையால் மூப்படைந்த பெற்றோருக்குப் பணி யியற்றும் அரும்பேற்றையும் இழந்தேன்! கொஞ்சவயதில் விஞ்சிய அறிவு படைத்த உன்னையும் இவ்வாறு சிறுமையடையச் செய்தேன்.

"இன்னபல கொடுமையிழைத்த யானும் நற்கதி யெய்தப் பெறுவேனோ! வாழ்க்கைத் துணைவீ! இங்ஙனம் பிழைபட்டயான் 'என்னோடு மதுரைக்கு எழுக' என்று கூறின அளவில் நலங்கெட்ட இவனொடுபோதல் நன்றன்றென

மறுக்காமல் உடன்பட்டு வந்தனையே. பாவாய்! அந்தோ! யாதுகாரியஞ் செய்தனை!" என்று இரங்கினான்.

கண்ணகியும், "உமது வேறுபட்ட நடையால்

அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்

துறந்த யான், உமது கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்குங் கடப்பாடுடையேன். ஆதலால் உம்மொடு வருதற்கு உடன் பட்டேன்" என்று இசைத்தனள்.

அப்பால், கோவலன் காதலியை நண்ணி "தாயர் தந்தையராதிய சுற்றத்தாரையும் ஏவலாளரையும் சேடியர் செவிலியரையும் நீங்கி,

நாணமு மடனும் நல்லோர் ஏத்தும்
பேணிய கற்பும் பெருந்துணை யாக,
என்னொடு போந்து,ஈங்கு என்துயர் களைந்த
பொன்னே! கொடியே! புனைபூங் கோதாய்!
நாணின் பாவாய்! நீணில விளக்கே!
கற்பின் கொழுந்தே! பொற்பின் செல்வீ!

தனிமைக்கு வருந்ாதிருப்பாய். யான்உன் பாதச் சிலம்பு களில் ஒன்றைக் கொண்டுபோய் விற்று வருவேன்" என் றுரைத்து அவளைக் கட்டித்தழுவினான்; இங்ஙனம் தனி வைத்துப் பிரியலாயினமைக்கு உள்ளம்வெதும்பிக் கண் கலங்கினான்; காதலி தன்கண்ணீர் கண்டால் மனந்தளர்வா ளென்று அதனைமறைத்துச் சிலம்பை யெடுத்துப் புறப் பட்டான்.

மனம் கண்ணகியை நோக்கிப் பின்இழுத்தது. கோவலன் நெஞ்சத்தின் நெகிழ்ச்சியால் மாட்டாநடையுடன் முன்சென்றான். செல்லுங்கால் ஓர்எருது அவனை எதிர்த்துப் பாயவந்தது. அது தீயநிமித்தம் என்று அறியாமையால் மேலுஞ் சென்று தாமெருமன்றத்தைத் தாண்டி மாதர் வீதியூடே நடந்து கடைத்தெருவிற் போயினான்.

சிலம்புவிலை பகர்தல்.

எதிரே, பொற்பணி செய்வதிற் கைதேர்ந்த தட்டார் நூற்றுவர் பின்தொடர்ந்துவர அரசனால் வரிசையாக அளிக்கப்பெற்ற சட்டைபூண்டு, கையிற் குறடுபிடித்து, மேன் மக்களைக் காணுந்தோறும் ஒதுங்கிஒதுங்கி வந்தான் ஒரு பொற்கொல்லன். அவனைக் கண்ட கோவலன், இவன் பாண்டியன்பால் பட்டமும் பரிசும் பெற்ற தலைமைத் தட்டான் எனமதித்து, அவனருகிற்சென்று "மன்னவன்தேவி மாண்புற அணிதற்கேற்ற காலணியொன்று என்மாட்டுளது; நீ அதை விலைமதிப்பையோ?" எனக் கேட்டான்.

அதற்கு கூற்றின் தூதுவனாகவந்த பொற்கொல்லன்

"அடியேன் அறியேன் ஆயினும், வேந்தர்
முடிமுதற் கலன்கள் சமைப்பேன் யான்"

என்று விடைகூறிக் கைதொழுதனன். கோவலன் உடனே முடிப்பை அவிழ்த்துச் சிலம்பையெடுத்துக் கொடுத்தான். வாங்கிப்பார்த்த பொற்கொல்லன் சிலம்பின் சிறந்த வேலைப்பாடுகளையெல்லாம் உற்றுநோக்கி, தான் வஞ்சித்த அரண்மனைச்சிலம்பை இஃதொக்குமென்று கருதி வணிகனை நோக்கி, "ஐய! இச் சிலம்பு எங்கள் அரசி அணிதற்கேற்

றது; அவரையன்றி வேறுயாரும் வாங்குவாரும் அல்லர்; இதனை வேந்தர்பெருமானுக்குக் காட்டி மீளுவேன். அது காறும் எனது சிறுகுடிலுக்கு அயலதான இவ்விடத்தில் இரும்" என்று உரைத்துப் போயினன். அவன் காட்டிய அக்கசாலைப் பள்ளியுட் கோவலன் புக்கிருந்தான். தட்டான், 'எனக்கிது நல்லகாலம். யான்கவர்ந்த அரண்மனைச்சிலம்பு என்னிடத்ததேயென்று வெளிப்படுமுன் இந்தச்சிலம்பு எனக்குக் கிட்டியது. இதை அரசனிடம்காட்டி இதை விற்கவந்திருக்கும் அயலூரான்மீது களவுக்குற்றம் ஏற்று வேன். தப்பினேன்! தப்பினேன்!' என்று எண்ணி இறு மாந்து நடக்கலாயினன்.

இப்பால்,

கூடல் மகளிர் ஆடற் றோற்றமும்
பாடற் பகுதியும் பண்ணின் பயன்களும்

நம் மன்னன் மனத்தைக் கொள்ளைகொண்டன. அந் நாடக மகளிர்தம் பண்பில் ஈடுபட்டுவிட்டான் நம் தலைவன் என்று ஊடல்கொண்டாள் கோப்பெருந்தேவி. அவ் ஊடலைத் தணிப்பான் விழைந்த பாண்டியன் நெடுஞ்செழியன், அமைச்சர் குழாத்தினின் றும் பிரிந்து, தோழியர்கூட்டம் சூழ்ந்துவரத் தேவியின் மாளிகையைநோக்கிச் செல்கின்றான். அங்ஙனம் செல் வானை மாளிகைவாயிலிற் கண்ட பொற்கொல்லன், நிலத்தில் வீழ்ந்து, தொழுதுகிடந்து, "காவலரேறே வணக்கம், கரு ணைமாகடலே போற்றி" எனப் பன்முறை ஏத்தி, "அடி யேன் முறையீட்டைத் திருவுளங் கொண்டருள்க. அண் ணலே!

அரசன் ஆணை

கன்னகம் இன்றியும் கவைக்கோல் இன்றியும்
துன்னிய மந்திரம் துணையெனக் கொண்டு
வாயி லாளரை மயக்குதுயில் உறுத்து

நமது அரண்மனைச்சிலம்பைக் கொள்ளைகொண்ட பெருங் கள்வன், காவலர் கண்ணிற்படாமல் க்ரந்துவந்து அடியேனது சிறுகுடிற்புறத்தே யிருக்கின்றான்" என்று விண்ணப்பித்தான். அரசன், காய்சினங்கொண்டானாய், "ஆ ஆ! நன்று! நன்று!! அச்சமின்றி அரண்மனை புகுந்து என் தாழ்பூங்கோதை தன்காற்சிலம்பை வெளவியகள்வன் வந்திருக்கின்றானா! அங்ஙனமாயின், காவலர்காள்! இங்கு வாருங்கள். இப் பொற்கொல்லனோடுபோய் அவன் காட்டும் கள்வனிடம் நமது கோயிற்சிலம்பைக் காண்பீரானால் அவனைக் கொன்று அச் சிலம்பைக் கொண்டுவாருங்கள்" என்று ஆணையளித் தனுப்பினான்.

ஆனால் பாண்டியன் நினைத்தது "அவனைக் கொல்லுதற்கு அச் சிலம்பொடு கொண்டுவாருங்கள்" என்பது. பண்டைத் தொல்வினைவந்து மூண்டமையாலும், அந்தப்புரத்தில் அறிவைப்போக்கிய பான்மையாலும், தேவியின் ஊடல் தீர்த்தற்கு இதுவும் ஓர் உதவியாம் என்ற கருத்தினாலும் தடுமாற்றங்கொண்டு 'அவனைக்கொல்ல' என்னாது 'கொன்று' என்று சாற்றினன்.

மேல், பொல்லாப் பொற்கொல்லன் தனது எண்ணம் பலித்ததென்று களிகொண்டு காவல்வீரரை அழைத்துச் சென்று. வினைவலையிற் சிக்குண்டிருந்த கோவலனை அணுகி, "ஐயனே! இவர்தான் மன்னவன் கட்டளையாற் சிலம்புகாண வந்தவர்" என்று

கள்வுத்திறன்.

காவலரைக்காட்டிச் சிலம்பின்வேலைநயங்களையும் விலைமதிப்பையும் அவர்கட்குக் கூறுவான்போலப் பாவனைபண்ணி, காவலரைத் தனித்தழைத்து, "அரண்மனைச்சிலம்பு இதுவே; கள்வன் இவனே" என்று பழியஞ்சான் பெரும்பொய்யன் சொல்லிக்காட்டினன்.

காவல்வீரர், அவன்சொல்லியதைக் கேட்டுக் கோவலனது களங்கமற்ற மெய்க்காட்சியையும் பெருந்தன்மையையும் பொற்கொல்லனுக்கு எடுத்துச்சொல்லி "இவன் எவராலுங் கள்வனென்று சொல்லப்படுவானும் அல்லன்; கொல்லப்படுவானும் அல்லன்" என்று விளம்பினர். அவர்களைப்பார்த்து இகழ்நகை யாடிய பொற்கொல்லன், "வீரர்காள்! கள்வர்களின் திறமையை நீவிர் நன்கு அறியீர். யான் அவர்களது களவுநூற்றிறனை உமக்கு இயம்புகின்றேன். கேளும்.

வன்னெஞ்சம் படைத்த அவர்கள்,

மந்திரம் தெய்வம் மருந்தே நிமித்தம்
தந்திரம் இடனே காலம் கருவி

என்று கூறலாகும் எட்டுவகைகளையும் ஆதாரமாகக்கொண்டு பிறர்பொருளைக் கொள்ளையிட்டுப் பிழைப்பவர்கள். இங்குவந்திருக்கும் கள்வனுடைய,

மருந்திற் பட்டீ ராயின் யாவரும்
பெரும்பெயர் மன்னனிற் பெருநவைப் பட்டீர்.

உம்மைப் பொருத்தமட்டில் பாரும் (இவனை அரசன் ஆணைப்படி செய்யாமல் இவனுடைய மருந்தில் அகப்பட்டீராயின் நீவிர் அரச தண்டனைக்கு ஆளாவீரன்றோ?) இப்

படியே மற்ற மாயக்கள்வரும் ஏமாற்றுவரென்பதை அறியுங்கள். மேலும் அவர்கள்,

மந்திரம் நாவிடை வழுத்துவ ராயின்
இந்திர குமரரின் யாங்காண் குவமோ.
தெய்வத் தோற்றம் தெளிகுவ ராயின்
கையகத்து உறுபொருள் காட்டியும் பெயர்குவர்.
மருந்தின் நம்கண் மயக்குவ ராயின்
இருந்தோம் பெயரும் இடனுமா ருண்டோ,
நிமித்தம் வாய்த்திடின் அல்ல தியாவதும்
புகற்கிலர் அரும்பொருள் வந்துகைப் புகுதினும்.
தந்திர கரணம் எண்ணுவ ராயின்
இந்திரன் மார்பத்து ஆரமும் எய்துவர்.
இவ்விடம் இப்பொருள் கோடற்கு இடமெனின்
அவ்விடத்து அவரை யார்காண் கிற்பார்.
காலங் கருதி அவர்பொருள் கையுறின்
மேலோ ராயினும் விலக்கலும் உண்டோ.
கருவி கொண்டவர் அரும்பொருள் கையுறின்
இருநில மருங்கின் யார்காண் கிற்பார்.
இரவே பகலே என்றிரண் டில்லை
காவிடங் கேட்பின்ஓர் புகலிட மில்லை.

"வீரர்காள்! மேற்கூறிய களவுநூலின் பொருள் விளங்கிற்றா? நன்கு விவரிப்பேன் கேளுங்கள். கள்வர், தாங்கள் பயின்ற மந்திரத்தை ஓதுவராயின் தேவமக்களே போல நமது கண்ணிற் படாமல் மாயமாய் மறைந்து விடுவர்; தாங்கள் வழிபடும் தெய்வங்களை மனதில் நினைப்பாராஞல் அவருடைய கையிலகப்பட்ட பொருளை நமக்குக் காட்டியும் தப்பிப்போவர்; மருந்திஞலே மயக்குவராஞல் நாம் இருந்தவிடத்தினின்று பெயரவும் இயலுமோ? அரும்

பொருள்கள் கைக்குள்வந்து புகுவதாயிருப்பினும் நல்நிமித்தம் உண்டானாலன்றித் திருடப்போகார்; களவுநூற்றிறனை மட்டும் நன்கறிந்து செய்வாரானால் இந்திரன் மார்பகத்து ஆரத்தையும் வானகஞ்சென்று வெளவி வருவர்; இதுதான் இப்பொருளைக்கொள்ளையிடற்குஏற்றவிடமென்று துணிவாரானால், அவ்விடத்தில் அவர்களை எவரும் காண ஒண்ணது; தக்ககாலம் இதுதானென்று ஒருபொருளைக் கைப்பற்றி விட்டாரானால் மேலோராலும் அதைத்தடுத்தல் செல்லாது; கருவிகளைக்கொண்டு பெறற்கரிய பொருள்களைப் பெற்றுவிடுவரானால் இந் நிலவுலகர் எவரும் அதனைக் காணுவாரல்லர்; அவர்கட்கு இரவென்றுமில்லை; பகலென்றுமில்லை. எவரும் அவர்கள் கண்ணிற்படாமல் தப்பிவாழ்வதற்கு இடமில்லை. எங்கு மக்கள்உண்டோ அங்கெல்லாம் அவரும் உண்டு.

"அன்றியும், முன்னொருகால் நடந்த களவொன்றை உங்கட்கு நினைப்பூட்டுகின்றேன். நம் மன்னர்பெருமான் நெடுஞ்செழியரின் தம்பி இரவில் துயில் கொண்டார். தூதர் கோலத்துடன் முதனாள் அரண்மனையுட் சென்றிருந்த கள்வன்ஒருவன், இரவில் பெண்ணுருக்கொண்டு பள்ளியறைக்குள் அஞ்சாதுநுழைந்து விளக்குநிழலிற்பதுங்கி இளவரசர் தரித்திருந்த வயிரமணிக்கோவையைக் கைப்பற்றினன். வேந்தர்விழித்து உடைவாளை உருவினர். அதன் உறையைக் கள்வன்எடுத்து அரசர் குத்துந்தோறும்குத்துந்தோறும் அவ் உறையுள் வாள்புகும்படி ஏற்றான். அதைப்பொருத அரசர் மற்போர் தொடங்கினர். ஆங்குள்ள தூணொன்றைத் தானாகக்காட்டித் தனது களவுநூற்கல்வியால் அக் கள்வன் தப்பினன். இது நீவிரும் அறிந்ததொன்றே.

"அங்ஙனம் தப்பிய கள்வனை இதுவரை கண்டாருண்டோ? உண்டாயின் கூறும் பார்ப்போம். இதுகாறும் யான் மொழிந்துவருமாற்றால் இவர்க்குஇவரே நிகராவதன்றிப் பிறரைநிகராகச்சொல்ல இயலாதென்பது நன்கு விளங்கும். வீரர்காள்! இனிக் காலங்கடத்தாதீர்." என்றான்.

தீமையே உருவாகவந்த வஞ்சகப் பொற்கொல்லன் இவ்வாறு மொழிந்த மாற்றத்தைக் கேட்ட வீரருள் இளையோன் ஒருவன் "முன்பு, மழைக்காலத்தில் நள்ளிரவில் கண்மயங்கும் இருளில் நிலத்தைத்தோண்டும் உளியைக் கையிற்கொண்டு, நீலஉடை உடுத்து, கையிற்பற்றிய பொருளை விடாததன்மையால் கொடும்பசியிற் கவ்விய ஊனை விடாத புலியேபோல் ஒருகள்வன் வந்துதோன்றினான். காவல்செய்திருந்த யான் அவனைநெருங்கி வாளை உறைகழித்தேன். அவன் அவ்வாளைப் பறித்தான். இன்னமும் என் வாளையும் அவனையும் எவ்விடத்துங் கண்டிலேன். கள்வர்களின் மாயம் யாராலுங் கண்டுபிடிக்க வியலாது. ஆகலின், நம் பத்தர் கூற்றுத்தகும். இவனைநாம் கைதவறவிட்டால் அரசரால் ஒறுக்கப்படுவோம் என்பதில் ஐயமில்லை. இனி என்னசெய்வதென்பதைக் கூறுமின்" என்று மற்றக் காவல் வீரரை உசாவினான்.

அந்தோ! அந்தோ! பின் நடந்ததை என்னென்று கூறுவல்! மெய்ந் நடுங்குகின்றது! மனந் தடுமாறுகின்றது!

**கோவலன் இறுதி.** இவ்வளவில், அவ்வீரர்களுள் கற்றறிவில்லா மூடன் ஒருவன் கொலைக்கஞ்சாக் களிமகன், தன் கைவாளாலே வணிகப் பெருந்தகையை

வெட்டினன். அவ் வெட்டுக் குறுக்கே ஊடறுத்தது. செங்குருதி கொப்பளித்து எங்கும் பரவியது. நிலமடந்தை பெருந்துயர்கூர, காவலன் செங்கோல் வளைய, பண்டை யூழ்வினை முதிர்ச்சியால் வெட்டுண்டு வீழ்ந்தான் கோவலன்.

அடிகள் கூற்று.

“ நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே
கண்ணகி தன்கேள்வன் காரணத்தால்—மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே பண்டை
விளைவாகி வந்த வினை. ”

இனி, அன்றுவிடியற்காலையில் அரசமாளிகையில்காலை முரசம் ஒலித்தது. அதைக்கேட்ட மாதரி, நாம்இன்று அரண்மனைக்கு நெய்யளக்கும்முறையென்று, கடைகயிறும் மோர்சிலுப்பியுங் கொண்டு தயிர்த்தாழிகள் இருக்குமிடத்தே போய்ப் பார்த்துவிட்டு, ஐயையை அழைத்து “மகளே! நாம் பிரையிட்ட தாளிகளிற் பால்உறையவில்லை. உருகவைத்த வெண்ணெயும் உருகவில்லை. நமது தொழுவத்திலுள்ள காளைகளின் கண்கள் நீரைச் சொரிகின்றன. பசுக்கள் உடல் நடுக்கத்துடன் அலறுகின்றன. ஆட்டுக்குட்டிகளும் துள்ளிவிளையாடாமல் குழைந்து கிடக்கின்றன. பசுக்களின் கழுத்திற் கட்டிய பெருமணிகளும் கட்டறுந்து வீழ்ந்து கிடக்கின்றன. ஆகவின் நமக்கு வருவதோர் தீங்குண்டு. அஃது எதுவோ! என்னவோ! அறியேம். ஆயினும், மகளே! அஞ்சவேண்டாம். எவற்றிற்கும் கண்ணபிரான் இருக்கின்றார். அவர் முன்பு ஆயர்பாடியில் தாதெரு மன்றத்தில் தமையன் பலராமரோடு ஆடிய விளையாடல்கள் பலவுள. அவற்றுள்,

ஆய்ச்சியர் ஆட்டம்.

பின்னைப் பிராட்டியொடும் பலராமரோடும் ஆடிய தூவைக் கூத்தை மங்கையர்க்கு அணிகலனாகிய கண்ணகியுங்காண ஆடுவோம். இந்த ஆட்டம் அத்தொல்லைகளை யெல்லாம் தொலைக்குந் தன்மையது. அதனால் கன்றுகளும் கறவைகளும் பிணிநீங்கும்" என்று இசைத்தாள்.

அதன்மேல் ஆய்ச்சியர் கூடினர். மாதரி, அவர்கட்கு முன்னைக்காலத்தில் பின்னைப்பிராட்டியின் தோழியரான ஏழு கன்னிப்பெண்கள் ஏழ்வகை எருதுகளை வளர்த்ததும், அவற்றின் வன்மை தொலைத்து அவைகளின்மீது ஏறிச்செலுத்தினவனே பின்னையை மணக்கத்தக்கான் என்று அப்பெண்கள் கருதினதும் விவரித்துக் கூறினாள். "அவர்கள் அந்நாளில் ஆடியதுபோல, நாம் நம்முள் எழுவரைத் தெரிந்தெடுத்து, ஆடவேண்டிய முறையில் நிறுத்திக் கொல்லைப் புனத்துக் குருந்தொசித்தான் றன்னை முல்லைப்பண்ணாற்பாடி யாடுவோம்" என்றும் உரைத்தாள்.

அதுபோல, மாதரியால் தெரிந்தெடுத்து அமைக்கப்பட்ட ஏழு பெண்மக்களும் ஆடத்தொடங்கினர். அவ்வாட்டத்தில்,

கன்று குணிலாக் கனியுதிர்த்த மாயவன்
இன்றுநம் மானுள் வருமேல் அவன்வாயிற்
கொன்றையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

பாம்பு கயிறாக் கடல்கடைந்த மாயவன்
ஈங்குநம் மானுள் வருமேல் அவன்வாயில்
ஆம்பலந் தீங்குழல் கேளாமோ தோழீ!

கொல்லையஞ் சாரற் குருந்தொசித்த மாயவன்
எல்லைநம் மானுள் வருமேல் அவன்வாயின்
முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழீ!

என்னும் பாடல்களையும் இன்னும் சில பாடல்களையும் பாடினர். பண்டைய இவ்வாட்டத்தை மாதரி சால்புடைத்து என்று வியந்தாள்.

பின்னர்,

எல்லா நாம்
புள்ளூர் கடவுளைப் போற்றுதும் போற்றுதும்
உள்வரிப் பாணியொன் றுற்று.

என்று பாடத் தொடங்கி,

கோவா மலையாரம் கோத்த கடலாரம்
தேவர்கோன் பூணாரம் தென்னர்கோன் மார்பினவே
தேவர்கோன் பூணாரம் பூண்டான் செழுந்துவரைக்
கோகுல மேய்த்துக் குருந்தொசித்தான் என்பரால்

என்பது முதலிய பாடல்களும்பாடி வாழ்த்தினர்.
அதன்பின்,

வடவரையை மத்தாக்கி வாசுகியை நாணாக்கிக்
கடல்வண்ணன் பண்டொருநாட் கடல்வயிறு கலக்கினையே
கலக்கியகை யசோதையார் கடைகயிற்றால் கட்டுண்கை
மலர்க்கமல வுந்தியாய் மாயமோ மருட்கைத்தே

அறுபொருள் இவனென்றே யமரர்கணந் தொழுதேத்த
உறுபசியொன் றின்றின்றியே உலகடைய உண்டனையே
உண்டவாய் களவினான் உறிவெண்ணெ யுண்டவாய்
வண்டுழாய் மாலையாய் மாயமோ மருட்கைத்தே

திரண்டமரர் தொழுதேத்துந் திருமால்நின் செங்கமல
விரண்டடியால் மூவுலகும் இருள்தீர நடந்தனையே
நடந்தஅடி பஞ்சவர்க்குத் தூதாக நடந்தஅடி
மடங்கலாய் மாறட்டாய் மாயமோ மருட்கைத்தே

என்று முன்னிலைப் பரவல் பாடினர். பிறகு,

மூவுலகும் ஈரடியான் முறைதிறம்பா வகைமுடியத்
தாவியசே வடிசேப்பத் தம்பியொடுங் கான்போந்து
சோவரணும் போர்மடியத் தொல்இலங்கை கட்டழித்த
சேவகன்சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால்சீர் கேளாத செவியென்ன செவியே.

பெரியவனை மாயவனைப் பேருலக மெல்லாம்
விரிகமல வுந்தியுடை விண்ணவனைக் கண்ணும்
திருவடியும் கையும் திருவாயும் செய்ய
கரியவனைக் காணாத கண்ணென்ன கண்ணே
கண்ணிமைத்துக் காண்பார்தங் கண்ணென்ன கண்ணே.

மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்தா ரணமுழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை யேத்தாத நாவென்ன நாவே
நாராயணா வென்னா நாவென்ன நாவே.

என இவை கூறிப்பரவினர். ஈற்றில், "நாம் ஏத்திய தெய்வம் நம் பசுக்களிடத்துத் தலைப்பட்ட பிணிகளைத் தீர்ப்பதாக; தென்னவன் முரசம் எந்நாளும் மாற்றாரை வென்று முழங்குவதாக" எனவேண்டி ஆட்டத்தை முடித்தனர்.

முடித்ததும், மாதரி திருமாலின் அடித்தாமரையைச் சாந்தம்பூசிப் புகையிட்டுப் பூத்தூவிப் பூசித்தற்கு நீராட வையை சென்றாள். அப்பொழுது மதுரை உள்நகரிலிருந்து கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்துவந்த ஆய்ச்சியொருத்தி, விரைந்தோடிவந்து கண்ணகிக்கு அதனைச்சொல்ல மனமின்றி, நீராடிவந்த ஆயர்மகளிடம் தனித்

துச்சொல்லி அவர்களோடு தானும் நெஞ்சம் அழிந்து விம்முதலுற்று நின்றாள். கண்ணகி அவளை அணுகி "தோழீ! நீ கூறியது யாது? நகருட்சென்ற என் காதலனை இன்னும் வரக்காணேன். காணாமையால் என் மனம் கலங்குகின்றது. கொல்லன் உலைக்களத்துத் துருத்தியையுந் தோற்கடிக்கும்படி அழல்மூச்சு எழுகின்றது. அவர்சென்றதுமுதலே அவரை எப்போதுகாண்போம் எப்போது காண்போம்என்று நெஞ்சம் அலமருகின்றது. குறிப்பால் நீயும்இம்மாதரும்என்னை நோக்கிப் பேசிக்கொள்வது என்னவோ தோழி? அதை விரைவிற் சொல்லுவாய்" என்று கரைந்தனள்.

கொடுந்துயர் பூண்டாள் கோவலற் காண்டல்.

அதற்கவள் "ஐயோ அம்ம! அரசியின் சிலம்பைக் களவாடிய கள்வனென்று காவலாளரால் உன்கணவன் வெட்டுண்டார்" என்றுசொல்லி வாய் மூடுமுன், கண்ணகி துடிதுடித்து நிலத்தில் வீழ்ந்தாள். மூர்ச்சித்துக் கிடந்தாள். பொங்கி எழுந்தாள். ஓவென்று அலறினாள். மறுபடியும் வீழ்ந்தாள். கண்கள் சிவப்பக் கையால் முகத்தில் அறைந்துகொண்டு,

இன்புறு தங்கணவர் இடரெரி யகமூழ்கத்
துன்புறு வனநோற்றுத் துயருறு மகளிரைப்போல்
மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யான் அவலங்கொண் டழிவலோ

நறைமலி வியன்மார்பின் நண்பனை யிழந்தேங்கித்
துறைபல திறமூழ்கித் துயருறு மகளிரைப்போல்
மறனொடு திரியுங்கோல் மன்னவன் தவறிழைப்ப
அறனெனு மடவோயான் அவலங்கொண் டழிவலோ

தம்முறு பெருங்கணவன் தழலெரி யகமூழ்கக்
கைம்மைகூர் துயர்மூழ்கும் கவலைய மகளிரைப்போல்
செம்மையின் இகந்தகோல் தென்னவன் தவறிழைப்ப
இம்மையும் இசையொரீஇ யினைந்தேங்கி யழிவலோ

என்று அழுதுபுலம்பினாள். ஆற்றினாள். ஏங்கினாள். அருகில்நின்ற மகளிரைநோக்கி "அந்தோ மாதர்காள்! நீவிரெல்லாங்கேண்மின்" என்று சொல்லிவிட்டுச் சூரியனைப் பார்த்து "ஆ காய்கதிர்ச்செல்வனே! கள்வனோ என்கணவன்?" என்றுகேட்டாள். உடனே வானிலிருந்து "ஏ மாதராய்! உன்கணவன் கள்வனல்லன்; அவனை இவ்வாறுசெய்த இவ்வூரை எரியுண்ணும்" என்றொரு குரல்எழுந்தது.

இங்ஙனம் வெய்யவன் கூறியதைக் கேட்ட கற்பரசி, கணவன் கொண்டுபோன சிலம்புபோக மற்றச்சிலம்பைக் கையிலெடுத்துக்கொண்டு நகருட்சென்றாள். சென்றவள், நகருள் எதிர்ப்பட்ட மகளிரைநோக்கி, "ஓ ஓ!

முறையில் அரசன்றன் ஊரிருந்து வாழும்
நிறையுடைப் பத்தினிப் பெண்டிர்காள்!

யானொரு வணிகன்மனைவி; என்கணவன் கள்வனல்லன்; அவர் என் சிலம்பைவிற்க வந்தார்; அதனைக் கவர்ந்துகொள்வதற்காக அவரைக் கள்வனென்று பெயரிட்டு இவ்வூரார் கொன்றுவிட்டனர். அந்தோ! அநியாயம்அநியாயம்! மடவீர்காள்! என்கையிலிருக்கின்ற இதுதான் அதன் இணையாகிய மற்றைச்சிலம்பு. யான் படாதபாடும் பட்டேன். உறாததுயரும் உற்றேன். என்போன்ற மங்கையர்காள்! நீங்கள் உங்கள்கணவரை எப்படிக் காதலிக்கின்றீர்களோ அதுபோலக் காதலிக்கின்றநான் என்கண்முன்னே என்

கண்ணுளர் வரக்காண்பேனே! அவர்பேசும் இனிய சொற்களைக் கேட்பேனே! நான் அவர் வெட்டுண்டு கிடக்கும்இடத்திற்குப் போகின்றேன். அவர் என் அல்லலைக் கண்டு எழுந்து ஒருவார்த்தையாயினுஞ் சொல்லக் கேளாதொழிவேனுகில், நிறையுடைப்பத்தினிப் பெண்டிர்காள் என்று நும்மைஅழைத்த என்னைக் கள்வன் மனைவியென்றிகழுமின்'' என்றுசொல்லி அல்லலுற்று ஆற்றாது அழுதாள்.

அங்ஙனம் அழுகின்றவளை, ஆற்றுதற்கு ஒருவழியுங் காணுத மதுரையார், தாமும்வருந்தியழுது ''இறக்கும் வரைக்கும் நீங்காததுன்பத்தை இம் மடமங்கைக்கு உண்டாக்கியதால், என்றும்கோடாத பாண்டியன்செங்கோல் கோடியது; குளிர்ந்த குடையையும் வெய்யவாளையும் உடைய தென்னவன் கொற்றஞ் சிதைந்தது. அந்தோ! ஒருபொற்சிலம்பைக் கையிலேந்திய இத்தெய்வக்கற்பினுள், ஈண்டு இவ்வாறு அலமருகின்றுள்; வாய்விட்டு அரற்றுகின்றுள்; சன்னதங் கொண்டாள்போல் மருளுகின்றுள்; சுழலுகின்றுள். இதனுல் என்ன நேருமோ! யாது சூழுமோ!'' என்று இரங்கினர். பின்னும் அவர்கள் ''ஐயோ, இப்படியும் அரசன் நெறிபிழறலாமா! ஒரு சிலம்பின் பொருட்டா இங்ஙனம் முறைதிறம்பினுன், என்மன்னவன் மதி இன்னணமாயிற்று.'' என்று பல சொல்லிப் பழிதூற்றினர். நகரத்தின் நாலுபக்கங்களிலும் இந்தப் பேச்சொலியே கல்லென்று ஒலித்தது.

இவ்வாறு ஆரவாரித்துக் கூடிய மக்கள், அந்த மாலைக் காலத்திலே கோவலன் வெட்டுண்டுகிடந்த விடத்தை அவ

ளுக்குக் காட்டினர். கண்டாள் கண்ணகி; பதைபதைத் தாள்; இரத்தந்தோய்ந்துகிடக்கின்ற காதலன்மீது வீழ்ந் தாள்; உருண்டாள்; புரண்டாள்; கட்டிக்கொண்டாள்; முட்டிக்கொண்டாள். "என் ஆருயிர்க்காதலரே இனி உம்மை என்று காண்பேன். என் அருமைத் தெய்வமே இனி உம்மை என்று தொழுவேன். 'காதலி! தனிமைக்கு வருந்தாதே; சிலம்பைவிற்று வருகின்றேன்' என்று இந் தப் பேதையைக் கட்டித்தழுவிக் கனிமொழி புகன் று வந்தீரே! என் கண்ணனைய தலைவரே! உம்மை எப்பொ ழுது காண்போம் எப்பொழுது காண்போம் என்று வழிபா ர்த்திருந்த யான் இந்தக் கோலத்தையா காணவிருந்தேன்! என் அருமைத்துணைவ! நாம் இதற்காகவா நாட்டைவிட்டு வீட்டைவிட்டு இங்குவந்தோம்! ஆ என்செல்வமே! பூவிற் புதைந்து கிடக்கும் உமது மார்பு இப்படிப் புழுதிபடிந்து கிடக்கின்றதே! பாண்டியனன்றோ இத்தீங்கிழைத்தான். திக் கற்ற இவ்வெளியாளுக்குத் தேறுதலொன்றும் சொல்கின்றீ ரில்லையே! உமது அருமைவாய் திறவீரா? ஆ கண்ணாளா! ஆ ஆ என்செய்வேன். யாது புரிகுவேன் ஐயகோ! இந்ந கரில்,

பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்

சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉஞ்
சான்றோரும் உண்டுகொல் சான்றோரும் உண்டுகொல்

தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்
வைவாளிற் றப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல் தெய்வமும் உண்டுகொல்

என்று குய்யோ முறையோ வென்று அழுதாற்றினள்; துணைவனை மார்பொடு மார்பு பொருந்த இறுகக் கட்டித்தழுவிக்கொண்டு கதறினள். அம்மட்டில் கோவலன் உயிர்பெற்று எழுந்துநின்று "ஐயோ காதலி! உன்மதி முகம் வாடியதே" என்றுசொல்லித் தன் கையால் அவள் கண்ணீரை மாற்றினன். உடனே கண்ணகி ஏங்கியழுது தரையில் வீழ்ந்து அவன் பாதங்களை இருகைகளாலும் பற்றிக்கொண்டாள். இவ் வினையுடம்பை நீத்துத் துறக்கம்புக எழுந்த கோவலன் "கண்ணகி! நீ இரு" என்று சொல்லிப் போயினன்.

வழக்குரைத்தல்.

"ஆ! இஃதென்னமாயம்! இங்கெழுந்துநின்று என் மனத்தை மருட்டியது யாதோ! தெய்வந்தானோ! வேறென்னவோ! ஒன்றுந் தெளிகில்லேன் யாதாயினும் ஆகுக. யான் எங்குஞ் சென்று ஆராய்ந்து என் தலைவனைச் சாருவேன். அஃதெனக்கு மிக எளிதே. என்றாலும், ஆ! ஆ! இப்போது கடுஞ்சீற்றத்தின் கைப்பட்டிருக்கின்றேன். இச்சீற்றந் தணிந்தன்றி என்மனுளனை நாடேன். அதுதணிதற்கு இக்கொடியபாண்டியனை நான்போய்க்கண்டு, என் ஆருயிர்த்தலைவனை ஏன்கொன்றாயென்று கேட்பேன். சும்மாவிடேன்" என்று எண்ணியெழுந்தாள் கண்ணகி. தான் ஊரிற்கண்ட கனவைச் சற்று நினைந்து நின்றாள். கயல்விழியாற் சொரியும் நீரைத்துடைத்துக்கொண்டாள். புறப்பட்டாள். பாண்டியன் மாளிகைக்குப் போகின்றாள்.

அத்தருணத்தில், **கோப்பெருந்தேவி** தன் சிலதியை நோக்கி "தோழீ! நான் இரவு பலதீக்கனவுகள் கண்டேன்

அவற்றை உனக்குக் கூறுவேன். அதில் ஒன்று, நம் செங்கோலும் வெண்குடையும் சாயக்கண்டது. மற்றவை, அரண்மனைவாயிலின் ஆராய்ச்சிமணி ஆரவாரிக்கவும், எண்திசைகளும் அதிர்ந்திடவும், செங்கதிர் ஞாயிற்றை இருள் விழுங்கவும், இரவில் இந்திரவில் தோன்றவும், பகலில்விண்மீன்விழவும் கண்டவைதாம். இந்தக் கனுக்களால் ஏதோ கேடுசூழப் போகின்றதென்று தெரிகின்றது. இதனை மன்னனுக்கு அறிவிப்போம்" என்று எழுந்தாள். அவளுடன்,

ஆடியேந்தினர் கலனேந்தினர்
அவிர்ந்துவிளங்கு மணியிழையினர்
கோடியேந்தினர் பட்டேந்தினர்
கொழுந்திரையலின் செப்பேந்தினர்
வண்ணமேந்தினர் சுண்ணமேந்தினர்
மான்மதத்தின் சாந்தேந்தினர்
கண்ணியேந்தினர் பிணையலேந்தினர்
கவரியேந்தினர் தூபமேந்தினர்

ஆகிய மடமங்கையர் பலர் சூழ்ந்துவந்தனர். 'பாண்டியன் பெருந்தேவி வாழ்க' வென்று பலமாதர் வாழ்த்திவந்தனர். ஆயமகளிரும் காவல்மகளிரும் அடியீடுபரசிவந்தனர். இன்னணஞ்சென்ற கோப்பெருந்தேவி, அரசனையடைந்து தான் கண்ட கனுக்களை விண்டுகொண் டிருக்கின்றாள். அச்செய்தியைச் செவியேற்று அரியணையில் அமர்ந்திருக்கின்றான் பாண்டியன் நெடுஞ்செழியன்.

அப்பொழுது கண்ணகி, மாளிகை வாயிலை அடைந்து வாயில் காப்போனை அணுகி,

"வாயி லோயே! வாயி லோயே!
அறிவுஅறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பொன்று ஏந்திய கையள்
கணவனை யிழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே"

என்று அறையலாயினள். காவலன், மாநிலங் காவலன்முன் சென்று வணங்கி, "மன்னர்பெருமானே! வாழி; நம் அரண்மனை வாசலிலே ஓர் ஆரணங்கு வந்திருக்கின்றாள்; அவள் மயிடன் தலையைப் பீடமாக்கொண்ட கொற்றவையும் அல்லள்; மாதொருபாகனை ஆடல்கண்டருளிய பத்திர காளியும் அல்லள்; ஆனால், மாற்றங் கொண்டாள்போலும் சீற்றங்கொண்டாள் போலும் காணப்படுகின்றாள்; பொற் சிலம்பொன்றைக் கையிற்கொண்டிருக்கின்றாள். கணவனை இழந்தவளாம்" என்று விண்ணப்பித்தான்.

"காவல! அங்ஙனமாயின் அவள் இங்கு வரட்டும்" என்று அரசர்பெருமான் ஆணைகொடுத்தான். வாயிற்காவலன் நீர்வார்ந்த கண்ணளாகிய கண்ணகியை அரசன் திருமுன்பு செல்லவிட்டான். அவள் அரசனை அணுகினாள். அவ்வளவில் அரசன் கண்ணகியைநோக்கி,

"நீர்வார் கண்ணை என்முன் வந்தோ
யாரையோ நீ மடக்கொடியோய்?"

என்று கேட்டலும், "தெளியா அரசே! செப்புவேன் கேண்மோ. யான், ஒரு புறவின் உயிரைக் காத்தற்பொருட்டுத் தன் உடற்சதையை அரிந்துகொடுத்த சிபிச்சக்ரவர்த்தியின் நாட்டிலுள்ளவள். அன்றியும்,

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி யுகுநீர் நெஞ்சுசுடத்
தான் தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்

யாரோ அந்த மனுநெறிச்சோழன் நாட்டிலுள்ளவள்; ஏசாச்சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி மாசாத்துவான் என்னும் பெருவணிகன் மருகி; எனது காற்சிலம்பை விற்கவேண்டி நினது நகரியிற்புகுந்து உனது நெறிதப்பிய ஆணையால் கொலையுண்ட கோவலன் மனைவி; என்பெயர் கண்ணகி" என்று கழறினள். அரசன்கேட்டு "மாதே! நீ விளம்பியவை மெய்தான். ஆனால் நெறிதப்பிய செய்கை யென்றனை. இதுவா நெறிதப்பிய செய்கை? கள்வனைக் கொல்லல் கடுங்கோ லாகுமா?" என்றான். "வேந்தே! தீரவிசாரியாமல் தண்டிப்பதும் நெறிதானோ? எந்த நீதிநூல் அப்படிக் கூறுகின்றது? எந்த வேந்தர்கள் அமைச்சர்கள் அறிவாளர்கள் அதை ஆதரிக்கின்றார்கள்? நீ செய்தது பிழையென்று கண்டால் என் துணைவன் உயிரை மீட்டுத்தர உன்னால் இயலுமோ? என் கணவனிடமிருந்து உன் காவலர் கவர்ந்துவந்த எனது சிலம்பின் உள்அரி மாணிக்கம். உன் அரண்மனைச் சிலம்பின் உள்அரியாது? அதைச் சோதித்துப்பார். அதன்மேல் உன் அறநெறி வெளிப்படும்" என்றாள்.

"அம்ம! உன் கூற்றுச் சாலவுந் தகுவதே. எங்கள் சிலம்பின் உள்அரி முத்து" என்று சொல்லி, தன் ஏவலாளரை, "கோவலனிடமிருந்து கொண்டுவந்த சிலம்பை இங்கே தாரும்" என்று கேட்டுவாங்கித் தன்னெதிரில்வை

த்தான். கண்ணகி அதனை உடைத்தாள். அச் சிலம்பு வாய்விண்டு மாணிக்கஅரி சிதறிற்று, கண்டான் அரசன். "ஆ கெட்டேன்! சற்றும் ஆய்ந்தோய்ந்து பாராமையாலன்றோ இம்மாபெருந் தீங்கிழைத்தேன்; வஞ்சகப் பொற்கொல்லன் சொல்லை நம்பியன்றோ இங்ஙனம் அறம்பிழைத்தேன். அருளொழித்தேன். பாண்டியர் மரபுக்குப் பழிதேடிவைத்தேன். ஐயோ இந்தக் கொடும்பாதகன் இனி உயிரோடிருத்தல் இழிவன்றோ! என்னால் இந்தச் செங்கோல் தளர்ந்ததே! செழுங்குடை தாழ்ந்ததே! அந்தோ,

"பொன்செய் கொல்லன் றன்சொல் கேட்ட
யானோ அரசன் யானே கள்வன்
மன்பதை காக்குந் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது கெடுகஎன் ஆயுள்"

என்று புலம்பினான். மயங்கி அரியணையினின்றும் நிலத்தில் வீழ்ந்தான்.

மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்
கையிற் றனிச்சிலம்புங் கண்ணீரும்—வையைக்கோன்
கண்டளவே தோற்றான்அக் காரிகைதன் சொல்செவி
உண்டளவே தோற்றான் உயிர்

[யில்

உடனே, கோப்பெருந்தேவி மெய்ந்நடுங்கி விதிர்விதிர்த்து ஆடைகுலைய அணிகுலைய அலறி எழுந்து "தாயை இழந்தால் தந்தையை இழந்தால் மக்களை இழந்தால் மற்றோரை இழந்தால் அவர்களின் முறைகூறிப் பிறரைக் காட்டலாம். கணவனை இழந்தார்க்கு வேறுகதியில்லையே!" என்று கண்ணகியின் இணையடியில் தொழுதுவிழுந்தாள்.

வீரமொழி

அதற்குக் கண்ணகி, "ஓ கோப்பெருந்தேவி! கொடு வினையேன் யாதொன்றும் அறியேன் என்றாலும்,

முற்பகல் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றியகாண்.

அன்றியும், அல்லவை செய்தார்க்கு அறங்கூற்றம் என்ற மெய்ம்மொழி பொய்க்குமா? என் உடல் பதறுகின்றது. உள்ளந் துடிக்கின்றது. ஆ! சீற்றம் பொங்குகின்றது. யான் இம் மதுரையைச் சும்மாவிடேன். என்னை நீ எத்தலத்தாளென்று அறிவையோ?

வன்னி மரமு மடைப்பளியுஞ் சான்றாக
முன்னிறுத்திக் காட்டிய மொய்குழலாள்; பொன்னிக்
கரையின் மணற்பாவை நின்கணவ னாமென்று
உரைசெய்த மாதரொடும் போகார் திரைவந்து
அழியாது சூழ்போக ஆங்குந்தி நின்ற
வரியார் அகலல்குல்; மாதர் உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவில் தோளாயோ வென்னக் கடல்வந்து
முன்னிறுத்திக் காட்ட அவனைத் தழீஇக்கொண்டு
பொன்னங் கொடிபோலப் போதந்தாள்; மன்னி
மணன்மலி பூங்கானல் வருகலன்கள் நோக்கிக்
கணவன்வரக் கல்லுருவம் நீத்தாள்; இணையாய
மாற்றாள் குழவிவிழத் தன்குழவி யுங்கிணற்று
வீழ்த்தேற்றுக் கொண்டெடுத்த வேற்கண்ணாள் வேற
நீணோக்கங்கண்டு நிறைமதி வாண்முகத்தை [ஒருவன்
தானோர் குரக்குமுகம் ஆகென்று போன
கொழுநன் வரவே குரக்குமுகம் நீத்த
பழுமணி யல்குற்பூம் பாவை; விழுமிய

பெண்ணறி வென்பது பேதைமைத்தே யென்றுரைத்த
நுண்ணறிவி னோர்நோக்க நோக்காதே எண்ணிலேன்
வண்ட லயர்விடத் தியானோர் மகட்பெற்றால்
ஒண்டொடி நீயோர் மகற்பெறிற் கொண்ட
கொழுநன் அவளுக்கென் றியானுரைத்த மாற்றங்
கெழுமி யவளுரைப்பக் கேட்ட விழுமத்தாற்
சிந்தைநோய் கூருந் திருவிலேற் கென்றெடுத்துத்
தந்தைக்குத் தாயுரைப்பக் கேட்டாளாய் முந்தியோர்
கோடிக் கலிங்கம் உடுத்துக் குழல்கட்டி
நாடித் தலையை வணங்கித் தலைசுமந்த
ஆடகப்பூம் பாவை;

முதலான பத்தினிப் பெண்டிர்கள் பிறந்த காவிரிப்பூம் பட்டினத்திற் பிறந்தவள்.

"ஏ அரசி! நானும் ஒரு பத்தினியே யாமாகில் இந்த அரசனை ஒழித்ததோடு நில்லாமல் இம்மதுரையையும் அழிப்பேன். என் ஒழுக்கத்தின் ஆற்றலை நீ இன்னும் பார்" என்று வீரமொழிபுகன்று அவள் முன்பு தன்கையிலிருந்த ஒற்றைச் சிலம்பையும் எறிந்துவிட்டு வீராவேசத்துடன் அரண்மனையைவிட்டு வெளிப்பட்டாள். இவையெல்லாம் கண்ணகி சொல்லி முடிக்குமுன்னே கோப்பெருந்தேவி அரசனொடு வீழ்ந்து உயிர்துறந்தனள்.

மதுரை தீப்படல்.

இனி, அரண்மனையைவிட்டு வெளிப்பட்ட கண்ணகி மறுகிற்சென்று "நான்மாடக்கூடலின் மாதர்காள்! மைந்தர்காள்! தெய்வங்காள்! மாதவர்காள்! எல்லோரும் கேளுங்கள்; நான் யாதொரு குற்றமும் அற்றவள்; என் காதலனைக் கள்வனென்று கொ

ன்ற இந்த நகரின்மீது சீற்றங்கொண்டேன்" என்று சொல்லி மும்முறை சுழன்று வலது கையால் இடது கொங்கை முகத்தைத் திருகி வீசினாள். உடனே அங்கியங் கடவுள், நீலநிறமும் செஞ்சடையும் வெண்பல்லும் வாய்ந்த பார்ப்பனக் கோலத்துடன் தோன்றி "ஓ மாபத்தினி! நான் அக்கினிதேவன். பண்டைக்காலத்தில் ஓர் ஏவல் பெற்றுள்ளேன். அது, 'நினக்குப் பிழையிழைத்த நாளில் இம் மதுரைப்பதியை எரியூட்டுக' என்பது. இந்நகரில் யாரும் பிழைக்கத் தக்கார் உண்டோ?" என்று கேட்டனன். அதற்கு வீர பத்தினியார்,

> "பார்ப்பார் அறவோர் பசுப்பத் தினிப்பெண்டிர்
> மூத்தோர் குழவி யெனுமிவரைக் கைவிட்டுத்
> தீத்திறத்தார் பக்கமே சேர்க"

என்று ஏவினார். அப்பொழுதே அழல்மண்டி எரியத்தொடங்கிற்று.

நகரிகாவற் றெய்வமாகிய வருணப்பூதங்கள் நான்கும் மன்னவன் நெறிபிழைக்குநாளில் மதுரையைத் தீயுண்ணும் என்பதை முன்னரே அறிந்திருந்தனவாகலின் அவைகள் நகரைக் காவல்புரியாது விட்டுநீங்கின. அரசுகட்டிலில் வேந்தனும் தேவியும் உயிர்பிரிந்ததைத் தாங்கள் அறிவுமயங்கியதால் அறியாத அமைச்சர் அந்தணர்ஆதிய அவையினரும், மாளிகையிலுள்ளோர் பிறரும், வாய்திறவாமல் ஓவியக்கூட்டம் போன்றிருந்தனர். பரிக்காரர் தேர்ப்பாகர் வாள்வீரர் முதலானோர், மாளிகைவாயிலில் தீமண்டி எரிவதுகண்டு ஓடிவந்து குழுமினர். கடைவீதியும் தேர்வீதியும் அரசர் அந்தணர் வணிகர் வேளாளர் என்னும் நால்வகை

மரபினர் தெருக்களும், காண்டவவனந் தீப்பட்டகாலத்தை போலக் கலங்கலாயின. அறவோரை அழல் அணுகவில்லை. பசுக்களும் கன்றுகளும் ஓடி ஆயர் இடங்களை அடைந்தன. யானை குதிரை முதலாயின விரைந்தோடி நகரைக்கடந்தன. சேக்கையிலிருந்தார் ஆடவரும் மகளிரும் தியங்கி மயங்கி அலங்கோலமாய் வெளிப்பட்டார்கள். குழந்தைகளொடு நித்திரை புரிந்தோர் அவர்களை எழுப்பிக்கொண்டு அலமந் தோடினர். மனையறத்திற் குறைபாடின்றியும் வருவிருந் தோம்பியும் வாழும் பெருமனைக் கிழத்தியர்,

" இலங்குபூண் மார்பிற் கணவனை யிழந்து
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று "

என்று சொல்லிச் செழுந்தீக் கடவுளைத் தொழலாயினர். ஆடரங்கில் நாடகம்புரிந்தோர் கணிகைமாதர்கள், பாடகர், தண்ணுமைகாரர் முதலாயினோர் அரங்கத்தை நீக்கி,

" எந்நாட் டாள்கொல் ! யார்மகள் கொல்லோ !
இந்நாட்டு இவ்வூர் இறைவனை யிழந்து
தேரா மன்னனைச் சிலம்பின் வென்று இவ்
வூர்தீ மூட்டிய ஒருமகள் ! "

என்று வியந்து வியந்து பேசினர். நகரிமுழுதும் மாலைவி ழாக்கள் நின்றன ; வேதஓசை ஓய்ந்தது ; தீவேட்டலும் தெய்வம் பரவலும் விளக்கேற்றலும் இல்லையாயின ; முரசு களின் முழக்கம் அடங்கிற்று. மதுரை அல்லோல கல்லோ லப்பட்டு அலங்கோலமாயிற்று.

கண்ணகியார், கொல்லன் உலைக்களத்துத் துருத்தி மூக்கைப்போலத் தீயெழும்ப மூச்சுவிட்டு, நெடுந்தெருக்க

ளிலும் குறுந்தெருக்களிலும் சின்னேரம் நடப்பதும் சின்னேரம் மயங்கி நிற்பதுமாக நிலைகுலைந்து துயரே உருக்கொண்டதெனச் சுற்றிச் சுழன்று திரிகின்ருள்.

இங்ஙனம் அல்லலுழக்கும் வீரபத்தினி முன் மதுராபுரித்தெய்வம் வந்து தோன்றி, ஆங்கு அலமருகின்ற அந்த மாபத்தினி முன்னே நில்லாமல் பின் தொடர்ந்து, "நங்காய்! யாது குறை?", என்றது. வீரபத்தினியார் வலதுபக்கமாகத் திரும்பி "என்பின்வருகின்ற நீ யாவள்? எனது துன்பத்தை அறிவையோ?" என்ருர். அதற்கு அத் தெய்வம் "ஆம் அறிவேன். யானும் உன் கணவன் பொருட்டு விஞ்சிய கவலையுடையேன். இந்நான்மாடக்கூடலின் அதிதேவதை நான்தான், என்பெயர் மதுராபுரி என்பது. ஊழ்வினையால் இப்படியெல்லாம் ஆயிற்று. பெருந்தகைப் பெண்மணீ! அவ் வினைவந்த வரலாற்றை உனக்கு எடுத்துக் கூற விரும்புகின்றேன். சற்று செவிசாய்ப்பாயாக.

மதுராபுரித் தெய்வம் வரன் முறை கிளத்தல்.

"நான் இதுகாறும் இந் நகரில் மறையோரசையையன்றி மாளிகை வாசலின் மணியோசையைக் கேட்டிலேன். தன்னை அடிதொழுது போற்ருத பகை அரசர் தூற்றுவதன்றிக் குடிகள் பழிதூற்றுங் கொடுங்கோலன் அல்லன் இப் பாண்டியன். எக்காலத்தும் வழுதியர் ஒழுக்கம் வழுவார். அவர்தம் நெறிமுறைபற்றிய மெய்ச்சான்றுகள் பலவுள. அவற்றுள் ஒன்று கூறுகின்றேன்.

"முன்பு, இந்த நகரத்திலேயிருந்த கீரந்தை என்னும் பெயருடைய அந்தணன் தன்மனைவியைத் தனிமனைவைத்

துக் காசியாத்திரை போய்த் திரும்பிவந்த அன்றிரவு, யாத்திரைபோய்வந்ததுபற்றி மனையாளோடு அளாவளாவிப் பேசியிருந்தான். அதையறியா அரசன், நகர்சோதனை செய்து வருங்கால் இதென்ன அந்தணனில்லா வீட்டில் ஆளரவங் கேட்கின்றதே என்று கதவைத் தட்டின அளவில், அந்தணன் ஐயமுற்று அஞ்சினான். அஃதறிந்த அவன் மனைவி "ஐயரே! ஏதுக்கு ஐயுறுகின்றீர்? யாத்திரைபோனநாளில் என்னிடம் கூறியதை மறந்தீரோ? நீவிர்,

> அரைச வேலி யல்லதை யாவதும்
> புரைதீர் வேலி யில்என மொழிந்து
> மன்றத்து இருத்திச் சென்றீர்.

அன்று நீர் சொன்ன அந்த அரசகாவல் இன்று இல்லையாய் விடுமோ? அஞ்சாதீர்" என்று இயம்பினள். இதுகேட்ட **குலசேகர பாண்டியன்,** ஐயரின் ஐயந்தவிர்த்தற் பொருட்டு அண்டைவீட்டுக் கதவுகளையுந் தட்டிக்கொண்டே போனதன்றி, மற்றைநாள் 'கீரந்தையின் ஐயத்திற்கும் அச்சத்திற்குங் காரணமாயிருந்தது இக்கையேயன்றோ' என்று அதனைவெட்டி வீசினான். அங்ஙனம் குறைத்த கைக்கு ஈடாகப் பொன்னாற் கைசெய்து பூட்டப்பட்டது. அன்றுமுதல் அவனுக்குப் **பொற்கைப் பாண்டியன்** எனப் பெயர் வழங்கலாயிற்று. இதனால் வழுதியர் தொல்குலம் இழுக்கற்றதென்று தெரிகின்றதன்றோ?

"இன்னும் சொல்வேன் கேள்! சோழ நன்னாட்டில் **பராசரன்** என்னும் பெயருடைய வலவைப்பார்ப்பான் ஒருவன் இருந்தான். அவன், **மாந்தரஞ் சேரல் இரும்பொறை** என்னும் சேரமன்னனின் கொடைத்திறங்கேட்டு, ஆண்டுச்

சென்று, தன்னோடு தருக்கம் புரிந்தார் பலரையும் நாவன்மையால் தோற்கடித்து, வெற்றிமாலை வேய்ந்து, மிக்க வரிசைகளும் பெற்றுத் திரும்பிவருகையில், பாண்டியனுட்டிலுள்ள திருத்தங்கால் என்னும் ஊரில் வந்து, "மாந்தரஞ்சேரல் வாழ்க" என்றுசொல்லித் தனதுமூட்டையை இறக்கிவைத்து இருக்கலாயினன். அக்கால், வேதியச்சிறுர் பலர் அவன் பக்கலில்வந்து குழுமினர். பாராசான் அவர்களைநோக்கி, "பிள்ளைகாள்! நான் உங்களைக் கேட்கும் வேதத்தைச் சந்தம் தவருமல் உங்களுள்யார் ஒப்பிப்பாரோ அவர் என்னுடைய மூட்டையைப் பெறுவர்" என்று மொழிந்தனன். அப்பொழுது வார்த்திகன் என்னும் வேதியன்மகன் தட்சிணுமூர்த்தி என்பவன் பராசரன் வியக்க ஓதினதால், அச்சிறுவனுக்குத் தான்பெற்ற முத்துப் பூணூல் கடகம் முதலான புனைகலன்களையும் பிறவற்றையும் பராசரன் அளித்துப் போயினன். இன்னணம் தட்சிணுமூர்த்தி பெற்ற பரிசைக்கண்டு மனம்பொருத சிலர், அவன் தந்தை வார்த்திகனைக் களவுப்பொருள் கவர்ந்தானென்று அரசசேவகர்களைக்கொண்டு குற்றஞ்சாட்டிச் சிறையிடச்செய்தனர். அதுபொருத வார்த்திகன் மனைவி கார்த்திகை என்பாள் மண்ணில் வீழ்ந்து புரண்டழலாயினள். அரசசேவகர்கள் நன்காராயாமற் சிறைப்படுத்தியதால் அன்று மதுரையில் கொற்றவை கோயிற்கதவு திறவாதாயிற்று. இதையறிந்த பாண்டியன் மனமறுகி "நமது நாட்டில் கொடுங்கோன்மை யாதாயினும் நிகழ்ந்ததோ? கொற்றவைக்கு உற்றகுறை யாதோ? தீரவிசாரியுங்கள்" என்று அமைச்சர் ஆதியர்க்குக் கட்டளையிட்டனன். அதன்மேல் சேவகர்கள்

வார்த்திகனைப் பாண்டியன் திருமுன்பு கொண்டுவந்து நடந்ததை நவின்றனர். அரசன் வார்த்திகனை நோக்கி "ஐயரே! நும்மை எம் வேலையாளர்கள் இங்ஙனம் நன்காராயாமற் செய்தது பெரும்பிழை. அறிவிலிகள் செய்த அதனைப் பொறுப்பீர்" என்று நல்லுரைபுகன்றதுடன் நீர்வளம்மிக்க திருத்தங்காலையும் வயலூரையும் முற்றூட்டாகக் கொடுத்து விடுத்தனன். உடனே கொற்றவைகோயில் தானே திறந்தது.

அப்பொழுது இப் பாண்டியன்,

"சிறைப்படு கோட்டம் சீமின் யாவதும்
கறைப்படு மாக்கள் கறைவீடு செய்ம்மின்
இடுபொரு ளாயினும் படுபொரு ளாயினும்
உற்றவர்க்கு உறுதி பெற்றவர்க்கு ஆம்"

என்று சொல்லி முரசமுழக்குவித்தான். இங்ஙனம் அறநெறி போற்றிய சீரியன், இப்போது உன் கணவன் பொருட்டு முறை திறம்பிய தகுதியும் சாற்றுவேன் கேள்.

ஆடித் திங்கட் பேரிருட் பக்கத்து
அழல்சேர் குட்டத்து அட்டமி ஞான்று
வெள்ளி வாரத்து ஒள்ளெரி யுண்ண
உரைசால் மதுரையோடரசு கேடுறும்

என்ற உரையொன்றும் உண்டு. அன்றியும்,

"மேனாள், கலிங்கதேசத்தின்கணுள்ள சிங்கபுரத்தில் வசு என்பவனும் கபிலபுரத்தில் குமரன் என்பவனும், அரசாண்டிருந்தனர். இருவரும் தாயாதிகள். அவர்கள் பகைகொண்டவதனால் அத்தேசத்திற் போர்மூண்டது

ஆறுகாவத தூரமுள்ள இடங்கள் அப்போர்வாய்ப் பட்டிருந்தன. ஆதலால், அவ்விடங்களூடே சென்று வாணிகஞ்செய்வோர் எவருமில்லையாயினர். ஆனால், பொருளாசையால் உந்தப்பட்ட சங்கமன் என்னும் வணிகன்ஒருவன் கரந்துறைபவர்போல மனைவியொடு பலவகை அணிகலன்களைக் கொண்டுசென்று, சிங்கபுரத்துக் கடைவீதியிலிருந்து விற்கலாயினன். குற்றமற்ற அவனைப் பரதன் என்னும் பெயருடையான் கோத்தொழில் செய்வோன்ஒருவன், இவன் கபிலபுரத்து ஒற்றன் என்று பிடித்துக்கொண்டுபோய் வேந்தனுக்குக் காட்டி கொன்றுவிட்டனன். இப்பிறப்பில் உனது கணவன் கோவலனாகப் பிறந்தவன் அந்தப் பரதனே. இனி, சங்கமன் மனைவி நீலி என்பாள்,

"அரசர் முறையோ! பரதர் முறையோ!
ஊரீர் முறையோ! சேரியீர் முறையோ!"

என்று ஓலமிட்டுச்சென்று மன்றினும் மறுகினும் பூசலிட்டு அலைந்து திரிந்து பதினான்காநாள் ஓர் மலையுச்சியை அடைந்து உயிர்விட உறுதிகொண்டவள், "எமக்கு இத்துயரம் விளைவித்தோர் வருபிறப்பில் இஃதொத்த துயரை அடையக்கடவர்" என்று மனங்கொதித்துச் சபித்து உயிர்விட்டனள்.

"அந்தச் சாபம் உங்களைத் தொடரலாயிற்று. ஆகலான், நீவிர் இந்த அருந்துன்பத்துக்கு ஆளாயினீர். எவரும் அவரவர் செய்த நல்வினையையும் தீவினையையும் அப்படியப்படியே அனுபவித்தல் வேண்டும். உங்கள் முன்னைப் பிறவியின் தீவினையே உங்களை இங்ஙனமெல்லாம் ஆக்கியது இனிவரலாவதையும் இயம்புவேன். ஏ வீரபத்தினி! நீ

இற்றைக்குப் பதினான்காநாள் வானவர் வடிவில் உன் மணமகனைக் காண்பாய்" என்று இவ்வாறெல்லாம் மதுராபுரித் தெய்வம் விதிமுறைகூறி அழல்வீடு கொண்டது.

அப்பால் வீரபத்தினியார் மதுராபுரித் தெய்வங்கூறிய தேறுதல் மொழியால் ஆறுதலடையாது,

"கருத்துறு கணவற் கண்டபின் அல்லது
இருத்தலும் இல்லேன் நிற்றலும் இலன்"

என்று வீரம் புகன்று கொற்றவை கோயில் வாயிலை அடைந்து, அங்கேதனது சங்க வளையலை உடைத்தெறிந்துவிட்டு "இந்த நகரத்தின் கீழை வாயிலிற் கணவனோடு புகுந்தநான் இப்பொழுது மேலவாயிலால் தனியே போகின்றேன்" என்று உருகி, வையைக்கரைவழியே மேற்றிசைநோக்கி, பள்ளமென்றும் மேடென்றும் இரவென்றும் பகலென்றும் பாராமல், மயக்கங்கொண்டார்போலப் பதறிச் சென்று, மலையாள நாட்டின்கணுள்ள திருச்செங்குன்று என்னும் மலையில் ஏறி, ஆங்குப் பொன்போலப் பூத்ததொரு வேங்கைமர நீழலில் 'ஆ! யான் தீத்தொழிலாட்டியேன்" என்று ஏங்கி நின்றார்.

வீரபத்தினி மேற்றிசைப் போதல்.

# சேர நாட்டில் தெய்வமாதல்.

குருவியோப்பியும் கிளிகடிந்தும்
குன்றத்துச் சென்றுவைகி
அருவியாடியும் சுனைகுடைந்தும்

காதற்கொழுநனைக் கண்டு விண் அடைதல்.

வந்த குன்றக்குறத்தியர், வீரபத்தினியைக் கண்டு, "எங்கள் வள்ளிபோல்வீர்! இந்த மலைவேங்கை நறுநிழலில் மனம் நடுங்கிக் கொங்கையிழந்து வந்துநிற்கும் நீவிர் யாவிரோ!" என்று வினவினர். அதற்கு மாபத்தினியார்,

"மணமதுரையோ டரசு கேடுற
வல்வினைவந் துருத்தகாலைக்
கணவனையங் கிழந்து போந்த
கடுவினையேன் யான்"

என்று கூறினர். கூறினஅளவில் குறத்தியர் வணங்கித் தொழுது கைகுவித்து நின்றார்கள்.

அப்பொழுது, கோவலன் வானவர்சூழ வரலாயினன். வீரபத்தினியார், காதலனை உள்ளங்களிக்க உயிர்களிக்கக் கண்டு வானுலகினின்றும் வந்த வானவூர்தியில் அவனோடும் ஏறித் தேவர்கள் மலர்மாரி பொழிய வானகம் புகுந்தனர்.

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுவாளைத்
தெய்வந் தொழுந்தகைமை திண்ணிதால்—தெய்வமாய்
மண்ணக மாதர்க்கு அணியாய கண்ணகி
விண்ணகமா தர்க்கு விருந்து

அப்பால், வீரபத்தினியார் மணவாளனொடு தேவர்கள் புறஞ்சூழ வானவூர்தியில் விண்ணுலகம் செல்லக்கண்ட குறவர் குறத்தியர், இறும்பூதெய்தின ராய்த் தம் குலத்தவரைக் கூவி, "சிறுகுடியீரே! சிறுகுடியீரே!! யாம் இத்திருமகளினுஞ் சிறந்த தெய்வம் வேறு கண்டிலேம். ஆதலால், இந்தப் பறம்பின் தாழ்வரையில், அத்தேவியார் வந்துநின்ற வேங்கை மரத்தின் நன்னீழலில், அவரை நமது குலதெய்வமாகச் செய்துகொள்வோம் வாருங்கள். இப்பொழுதே எல்லாருங் கூடி நமது மலைவளம் பெருகக் கடவதென்று வேண்டிக் கொண்டு,

குறவர் கூத்து.

> தொண்டகந் தொடுமின் சிறுபறை தொடுமின்
> கோடுவாய் வைம்மின் கொடுமணி யியக்குமின்
> குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின்
> பூப்பலி செய்ம்மின் காப்புக்கடை நிறுமின்
> பாவலும் பரவுமின் விரவுமலர் தூவுமின்"

என்று பேசினர். பின்பு அவ்வாறே செய்து நங்கைக்குப் பூச்சொரிந்து காப்புக்கட்டி திருவிழாப் புரிந்தனர். அவ்விழாவில் ஓர் குரவைக் கூத்தும் கண்ணகியின் பொருட்டு ஆடினர்.

ஆடும்போது, தாங்கள் பண்டு தொட்டுத் தொண்டு பூண்ட குன்றக் குமரனின் வெற்றிவேலைப் புகழ்ந்து,

> சீர்கெழு செந்திலும் செங்கோடும் வெண்குன்றும்
> ஏரகமும் நீங்கா இறைவன்கை வேலன்றே
> பாரிரும் பெளவத்தின் உள்புக்குப் பண்டொருநாள்
> சூர்மா தடிந்த சுடரிலைய வெள்வேலே

அணிமுகங்கள் ஓராறும் ஈராறு கையும்
இணையின்றித் தானுடையான் ஏந்திய வேலன்றே
பிணிமுகமேற் கொண்டவுணர் பீடழியும் வண்ணம்
மணிவிசும்பிற் கோனேத்த மாறட்ட வெள்வேலே

சரவணப்பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திருமுலைப்பால் உண்டான் திருக்கைவே லன்றே
வருதிகிரி கோலவுணன் மார்பம் பிளந்து
குருகு பெயர்க்குன்றம் கொன்ற நெடுவேலே

என்ற பாக்களைப் பாடினர் பின்னர், முருகக்கடவுளை எண்ணி,

மலைமகள் மகனைநின் மதிநுதல் மடவரல்
குலமலை யுறைதரு குறவர்தம் மகளார்
நிலையுயர் கடவுள்நின் இணையடி தொழுதேம்
பலாறி மணமவர் படுகுவர் எனவே.

குறமகள் அவள்எம குலமகள் அவளோ
டறுமுக ஒருவநின் அடியிணை தொழுதேம்
துறைமிசை நினதிரு திருவடி தொடுநர்
பெறுகநன் மணம்விடு பிழைமணம் எனவே

எனவும்,

கடம்பு சூடி யுடம்பிடி யேந்தி
மடந்தை பொருட்டால் வருவ திவ்வூர்
அறுமுக மில்லை அணிமயி லில்லை
குறமக ளில்லை செறிதோ ளில்லை
கடம்பூண் தெய்வ மாக நேரார்
மடவர் மன்றஇச் சிறுகுடி யோரே

எனவும், இன்னும்பலவும் பாடிக்கொண் டாடினர். அப்பால் வீரபத்தினியைக் குறித்து,

பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
பாடுகம் வாவாழி தோழியாம் பாடுகம்
கோமுறை நீங்கக் கொடிமாடக் கூடலைத்
தீமுறை செய்தாளை யேத்தியாம் பாடுங்கால்
மாமலை வெற்பன் மணவணி வேண்டுதுமே

பாடுற்றுப்
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாளோர்
பைத்தர வல்குல்நம் பைம்புனத் துள்ளாளே.
பைத்தர வல்குல் கணவனை வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ வொழியாரே.
வானக வாழ்க்கை யமரர் தொழுதேத்தக்
கான நறுவேங்கைக் கீழாளோர் பத்தினியே
கான நறுவேங்கைக் கீழாள் கணவனொடும்
வானக வாழ்க்கை மறுதரவோ வில்லாளே

மறுதர வில்லாளை யேத்திநாம் பாடப்
பெறுகதில் அம்ம இவ்வூரு மோர்பெற்றி
பெற்றி யுடையதே பெற்றி யுடையதே
பொற்றொடி மாதர் கணவன் மணங்காணப்
பெற்றி யுடையதிவ் வூர்

எனப்பாடி ஆடிக் கூத்தை முடித்தார்.

சேரன் மலைவளங் காணச் சேறல்.

ஆங்கு அவ்வாறாக, அக்காலத்தில் வஞ்சிமாநகரி விருந்து சேரநாட்டை ஒருதனிக் குடைக்கீழ் ஆண்ட முடி சேரன் மன்னன் சேரன்-செங்குட்டுவன் ஆவான். அவனுடைய தம்பியார்தாம் இக்கண்ணகி கோவலன் கதையைச் சிலப்பதிகாரப் பெயரால் என்றென்றும் உலகம் கொண்டாடும்வண்ணம் தேனொழுகித் தித்திக்கும் முத்தமிழால் பாடியருளினவர். இவர்தாம் இளங் கோவடிகள் என்னும் திருப்பெயர் பெற்றவர். இவரும் இவர்

தலைமயன் செங்குட்டுவனும் ஓர்நாள் அரசாள்மன்றத்து அரியணையில் வீற்றிருந்த தந்தை சேரலாதனின் பக்கலில் இருப்பாராயினர். அப்பொழுது, அங்குவந்த நிமித்திக னொருவன் இவ் வரசகுமரர்களிருவரையும் நன்கு நோக்கி "இவருள் இளையோனுக்கு அரசாளுரிமை யுண்டு" என மொழிந்தான். அவ்வளவில், மூத்தோனிருக்க இளையோன் அரசுரிமை கொள்வது முறையன்றென எண்ணித் துறவு பூண்டவர் இளங்கோவடிகள். அரசிளங் குமரராகிய இவர் இளமைப்பருவத்தில் துறவுபூண்ட காரணத்தால் இளங் கோவடிகள் எனும் இப்பெயர் பெற்றனர்.

இங்ஙனம் துறவுபூண்ட இளங்கோவடிகளொடும், மனைவி வேண்மாள் என்பாளொடும் மஞ்சுசூழ் சோலை மலை வளங் காண விரும்பிய செங்குட்டுவன், ஆயக்கூட்டமும் பிறகூட்டங்களும் புடைசூழ வஞ்சியை நீங்கிச் சென்று, பெருமலையின் தாழ்வரையில்

> கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை
> நாகம் திலகம் நறுங்காழ் ஆரம்

முதலான செழுமரங்கள் வண்டினம்பாட பலர்ந்திராநின்ற பேரியாற்றின் கரையில், மணற்பரப்பில் தங்கியிருப்பா னாயினன்.

ஆங்கு, குன்றக்குரவை, கொடிச்சியர்பாடல், வேலன் பாணி, தினைகுத்துவோர் பாடும் வள்ளைப்பாட்டு, புனத்தின் கண் ஒருவரையொருவர் கூப்பிடும் குரல், தேனெடுக்கும் குறவர்களின் பேச்சு, பறைமுழக்கம், அருவியோட்டம், புலியொடு சண்டையிடும்

குன்றவர் கூற்று.

களிறு பிளிறல் முதலியவற்றால் சுற்றுமுற்றும் ஆரவாரங்கள் மிக்கிருந்தன, அவற்றோடு மன்னவன் சேனையொலியும் சேர்ந்து எங்கும் ஒரே முழக்கமாயிருந்தது. இத்தகைய மலையிலுள்ள குறவர்கள் சேரர்கோன் வந்ததையுணர்ந்து அவனைக் கண்டுகோடற்காக,

யானைவெண் கோடும் அகிலின் குப்பையும்
மான்மயிர்க் கவரியும் மதுவின் குடங்களும்
சந்தனக் குறையும் சிந்துரக் கட்டியும்
அஞ்சனத் திரளு மணியரி தாரமும்
ஏல வல்லியும் இருங்கறி வல்லியும்
கூவை நூறும் கொழுங்கொடிக் கவலையும்
தெங்கின் பழனும் தேமாங் கனியும்
பைங்கொடிப் படலையும் பலவின் பழங்களும்
காயமும் கரும்பும் பூமலி கொடியும்
கொழுந்தாட் கமுகின் செழுங்குலைத் தாறும்
பெருங்குலை வாழையின் இருங்கனித் தாறும்
ஆளியின் அணங்கும் அரியின் குருளையும்
வாள்வரிப் பறழும் மதகரிக் களபமும்
குரங்கின் குட்டியும் குடாவடி யுளியமும்
வரையாடு வருடையும் மடமான் மறியும்
காசறைக் கருவும் ஆசறு நகுலமும்
பீலி மஞ்ஞையும் நாவியின் பிள்ளையும்
கானக் கோழியும் தேன்மொழிக் கிள்ளையும்

தலையிற் சுமந்துவந்து அவைகளை வேந்தனுக்குக் காணிக்கையாகக் கொடுத்து, "மன்னவரேறே! வாழ்க நின்கொற்றம். எழுமையும் அடிமைகளாகிய எளியேங்கள் கூறுவனவற்றைச் செவிக்கொண்டருளல் வேண்டும். ஐயனே! இம்மலைமீதுள்ள வேங்கைநீழலில், கொங்கையொன்றிழந்த

நங்கையொருத்தி ஒப்பற்ற துயரெய்தி வந்து நின்றாள். அங்கே வானவர்கள் அவள்தன் கொழுநனொடு வந்து, அவனை அவட்குக் காட்டி, அவளையுங் கூட்டி, விமானத்தே ற்றி விண்ணகஞ் சென்றனர். இந்த அதிசயத்தை அடியேங்கள் காணலாயினேம். ஆனால், அக்காரிகை எந்நாட்டாளோ? யார் மகளோ? நாங்களறியோம்" என்று பணிவொடு கூறினர்.

சாத்தனார் கண்ணகி வரன்முறை சாற்றல்.

அங்கு, அரசனுடன் இருந்த கூலவாணிகன் சாத்தனார் என்னும் தண்டமிழ் ஆசான், சேரன்-செங்குட்டுவனை நோக்கி, "திண்டிறல் வேந்தே! யானறிகுவன் இது நிகழ்ந்தது. அது முற்றும் உமது திருமுன்பு செப்புகின்றேன்" என்றெடுத்து,

ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்ப்
பேராச் சிறப்பிற் புகார்நக ரத்துக்
கோவலன் என்பான்ஓர் வாணிகன், அவ்வூர்
நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையொ
டாடிய கொள்கையின் அரும்பொருள் கேடுறக்
கண்ணகி என்பாள் மனைவி அவள்கால்
பண்அமை சிலம்பு பகர்தல் வேண்டிப்
பாடல்சால் சிறப்பிற் பாண்டியன் பெருஞ்சீர்
மாட மதுரை புகுந்தனன், அதுகொண்டு
மன்பெரும் பீடிகை மறுகிற் செல்வோன்
பொன்செய் கொல்லன் தன்கைக் காட்டக்
கோப்பெருந் தேவிக்கு அல்லதை யிச்சிலம்பு
யாப்புற வில்லையீங்கு இருக்கஎன்று ஏகி,
பண்டுதான் கொண்ட சில்லரிச் சிலம்பினைக்

கண்டனன் பிறன்ஓர் கள்வன் கையென,
வினைவிளை காலம் ஆதலின் யாவதும்
சினையலர் வேம்பன் தேரா னாகிக்
கன்றிய காவலர்க் கூஉய்,அக் கள்வனைக்
கொன்றுஅச் சிலம்பு கொணர்க ஈங்கென,
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களங் காணாள் நெடுங்கண்நீர் உகுத்துப்
பத்தினி யாகலிற் பாண்டியன் கேடுற
நிலைகெழு கூடல் நீள்எரி யூட்டிய
பலர்புகழ் பத்தினி யாகும்

இக்குறவர் கூறிய குயில்மொழி" என்று விளம்பினர்.

இவ் வாலாற்றைச் செவியேற்ற சேரர்கோன் சாத்த னாரைப் பார்த்து "நீர் முன்னை வினைவிளை காலம் என்று விளம்பினீரே. அவ் வினைவிளைவு யாது? அதனை எவ் வாறு கண்டீர்?" என்று கேட்டான்.

"சேரரேறே! கேட்க. யான் மதுரை தீப்பட்ட அன்று, அங்கே கொன்றையஞ் சடைமுடிப் பெருமான் கோயிலில், வெள்ளியம்பலத்தில் நித்திரை கொண்டேன். அக்கால், நிறைந்த இருளில், யான் துயில்கலைந்து இருக் கையில்,

ஆரஞர் உற்ற வீரபத்தினி முன்
மதுரைமா தெய்வம் வந்து தோன்றிக்
கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்!
முதிர்வினை நுங்கட்கு முடிந்தது ஆகலின்
முந்தைப் பிறப்பில் பைந்தொடி கணவனொடு
சிங்கா வண்புகழ்ச் சிங்க புரத்துச்
சங்கமன் என்னும் வாணிகன் மனைவி

யிட்ட சாபம் கட்டியது ஆகலின்
வாரொலி கூந்தல்நின் மணமகன் றன்னை
யீரேழ் நாளகத்து எல்லை நீங்கி
வானோர் தங்கள் வடிவின் அல்லதை
யீனோர் வடிவிற் காண்டல் இல்

என்று கூறிற்று. அந்த வஞ்சம் அற்ற மெய்ம்மொழியை நான் கேட்டேன்" என்று சாத்தனார் சாற்றி, 'வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றம்' என்று வாழ்த்தி யிருந்தனர்.

கல்லுரு நாட்டக் கருதி ஆராய்தல்.

பாண்டியர்கோமான், சிலம்புகாரணமாகத் தேவியுடன் மடிந்ததைச் சாத்தனாரால் அறிந்து வருந்திய சேரர்கோமான், "இந் நிகழ்ச்சி எம்மையொத்த வேந்தர்களின் செவிக்கெட்டுமுன் வினைவசத்தால் வளைந்த செங்கோலைப் பாண்டியன் உயிரைக் கொடுத்து நிமிர்த்தினான். மன்னவர் கடமைகள் சொல்லொணாதன. எல்லாவற்றிற்கும் தாமே பொறுப்பேற்கும் கடப்பாடு உடையவர் அரசர்களே. ஆகலின், அவர்கள் இன்ன துன்பங்கட்கெல்லாம் ஆளாகவேண்டி யிருக்கின்றது. அரசர்களின் இன்பம் எத்துணை மேம்பட்டதெனினும் அவர்களுடைய பொறுப்பை எண்ணுந்தொறுந்தொறும் அவ்வின்பத்தினும் மிக்க துன்பமே அவர்களைச் சூழ்ந்திருப்பது புலனாம். அவர்களுடைய நாட்டில்,

மழைவளங் கரப்பின் வான்பேர் அச்சம்
பிழையுயிர் எய்தில் பெரும்பேர் அச்சம்
குடிபுர வுண்டும் கொடுங்கோல் அஞ்சி
மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது தொழுதகவு இல்"

என்று கண்ணகி துன்பத்தை எடுத்துரைத்த புலவரிடம் சேரர்கோன் செப்பினன். அப்பால், தன் மாபெருந்தேவி யாகிய வேண்மாளை நோக்கி "ஆயிழாய்! புலவர் கூறிய வெல்லாம் நன்கு அறிந்தனை யன்றே? காதலன் இறந்தமை பொறாது அவனொடு மடிந்த கோப்பெருந்தேவி மிக்கவளோ? அன்றிச் சீற்றம்எய்தி நம் தேசம்வந் தடைந்த சேயிழை மிக்கவளோ? இவ்விருவருள் எவளை நீ பாராட்டுகின்றாய்" என்று கேட்டான்.

அதற்குத் தேவி, "அரசே! காதலன் துன்பம் காணப் பொறாது அவனொடு வானகம் நண்ணிய கோப்பெருந்தேவி தேவருலகத்திற் பெருந்திருவெய்தித் திகழட்டும். நமது நாட்டையடைந்த பத்தினிக் கடவுளை நாம் பரவுவோம்" என்றாள்.

அதனை ஏற்ற செங்குட்டுவன் அமைச்சரை நோக்கினான், அவனது மனம்அறிந்த அமைச்சர், "வெற்றி வேந்தே! பத்தினிக் கடவுட்குச் சிலைசெய்து நாட்டிச் சிறப்பித்தல் மிகவும் ஏற்றதே. அச் சிலையைப் பொதியின் மலையி லாயினும் இமய மலையி லாயினும் எடுத்துக் கொணர் தல் தகும் இமயத்தில் எடுக்கும் கல்லைக் கங்கையிலும் பொதியத்தில் எடுக்குங் கல்லைக் காவிரியிலும் நீர்ப்படை செய்தல் வேண்டும்" என்று விண்ணப்பித்தனர்.

அரசன், "அமைச்சரீர்! வீரத்தாற் சிறந்த இச் சேரமான் குடியிற் பிறந்தார்க்குப் பொதியத்திற் கல்லெடுத்துக் காவிரியில் நீர்ப்படைசெய்தல் சிறப்பன்று. ஆகவின், இமயத்திற் கல்லெடுத்துக் கங்கையில் நீர்ப்படை செய்தலையே விரும்புகின்றேன். அங்ஙனம் விரும்பும் கல்லை இமயவாசன்

தாரானெனில், நாம் வஞ்சிமாலை சூடிப் படையெடுத்துச் சென்று அவன்றன் ஆற்றலைக் காண்போம்; நமது வீரத்தை விளக்குவோம்'' என்று கூறினன்.

அவ்வளவில், வில்லவன் கோதை என்னும் பெயர் படைத்த அமைச்சன் எழுந்து, "வேந்தே! பல்யாண்டு வாழ்க நின் கொற்றம். பண்டு,

கொங்கணர் கலிங்கர் கொடுங்கரு நாடர்
பங்களர் கங்கர் பல்வேற் கட்டியர்
வட ஆரியர்

முதலானவர்கள், உனது தமிழ்ப்படை மருவிய செருக்களத்தில் போரிட்டஞான்று, நீ உனது யானையை விட்டுழக்கிய அருஞ்செயல் என்றும் என் கண்ணைவிட்டுப் பிரிவதில்லை.

" அன்றியும், உன்னையொத்த தமிழரசர்களுடன் கொங்கணருடைய செருக்களத்தில் நீ பொருதநாளில், புலிக்கொடியையும் கயற்கொடியையும் சோழபாண்டியர்கள் இழந்து ஓடியசெய்தி திசையானைகளின் செவிகளினும் முழங்கியதன்றோ?

"மேலும், நின் தாயாரைக் கங்கையாற்றில் நீராடச் செய்த காலையில், எதிர்த்த ஆரியமன்னர் ஆயிரவரை வெற்றி கொண்ட நினது ஆண்மையைக் கூற்றுவனும் கண்விழித்துப் பார்த்தனனே!

"இன்னபல விறல் விஞ்சிடு வேந்தனாகிய நீ இப்போது இமயஞ்செல்லக் கருதுவது, ஓர் கற்சிலை காணற்பொருட்டேயாகலின், இதனைக் குறித்து வடபுலமன்னர்

கட்குத் தமிழ்நன்னாட்டு வில்லும் கயலும் புலியும் பொறித்த முத்திரையிட்டு, நினது ஓலை போக்குதல் சால்புடைத்தாம்'' என்று சாற்றினன்.

அதன்பின், அழும்பில்வேள் என்னும் குறுநிலமன்னன் எழுந்து, "பன்னாட்டு ஒற்றரும் நமது தலைநகரில் இருக்கின்றாராகலின் இச்செய்தியை ஆனைமேல் முரசேற்றி அறைதலே சாலும்; அதனைப் பகைவரின் ஒற்றர்கள் தத்தம் அரசர்க்கு அறிவிப்பர்'' என்றான்.

இன்னணம் எண்ணித் துணிந்தபின் யாவரும் மலையை விட்டு வஞ்சிபோய்ச் சேர்ந்தனர். சேர்ந்ததும், அரசனாணை பெற்ற பறையறை மாக்கள், "எமது காவலன் தனது விற்கொடி தங்கிய இமயம் சென்று கல் ஒன்று கொணர எழுகின்றான், ஆதலாலே

படை யெழுச்சி.

வடதிசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடுதிறை கொடுவந் தெதிரீ ராயிற்
கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தையும்
விடர்ச்சிலை பொறித்த வியன்பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின் கேளீ ராயின்
தோட்டுணை துறக்குந் துறவொடு வாழுமின்
தாழ்கழன் மன்னன் றன்றிரு மேனி
வாழ்க சேனா முகம்''

என்று கூறி ஆனைப்பிடர்த்தலை அணிமுரச றைந்தனர்.

பின்னர், செங்குட்டுவமன்னன் அரிமான் சுமந்த அரசுகட்டிலிலேறிக் கொலுவீற்றிருக்க, அப்பொழுது, அமைச்சர் அந்தணர் நிமித்திகர் படைத்தலைவர் முதலியோர் ஆண்

டுக் குழுமினர். அரசன் சேனைத் தலைவரை நோக்கி, " இமயத்தினின்றும் இங்குநன்னீராடவந்த முனிவர்கள், கனகன் விசயன் உள்ளிட்ட ஆரிய அரசர்கள் தமிழ்வேந்தர்களின் ஆற்றல் அறியாது இகழ்ந்து உரைத்தவாற்றை எமக்கு இசைத்தனர். அவர்தம் இகழ்ச்சியை ஏற்று, வாளாவிட்டிடின் அது தமிழ் மூவேந்தர்க்கும் வருவதோர் இழிவாகும். ஆதலால், அங்ஙனம் பழித்த ஆரிய அரசர்தம் முடித்தலையில், யான் எடுக்கும் பத்தினிக் கடவுளின் படிமக்கல்லைச் சுமந்து வரச்செய்வேன். அங்ஙனம் செய்யேன் ஆயின்,

செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழுவைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலேன் ஆக "

என்று வஞ்சினம் கூறலாயினன்.

அதுகேட்ட அந்தணன் அண்ணலை நோக்கி, "வடவரசர்கள் சோழ பாண்டியர்களைப் பழித்திருப்பரேயன்றி நின்னைப் பழித்திரார். அடுபோர் அண்ணல்! அங்ஙனம் நின்னைப் பழித்து வாழும் பான்மையரும் உளரோ? சினம் தணிக" என்று செப்பினன்.

உடனே நிமித்தநூல்வல்லான் எழுந்து, "செம்மலே! இந்நேரந்தான் படையெடுத்துச் செல்லுதற்கேற்ற நன்னேரம். இப்பொழுது படையெடுக்கின், இருநில மன்னவர் யாவரும் நின் திருமலர்ச் சேவடி பணிகுவர்" என இசைத்தனன்.

உடனே "வாளுங் குடையும் வடதிசைப் பெயர்க்க" என்று, காவலன் கட்டளை பிறந்தது. போர்வீரர் முழங்கி

னர்; முரசமதிர்ந்தன; கொடிகளசைந்தன. படைவீரர்களுடன்,

> ஐம்பெருங் குழுவும் எண்பேர் ஆயமும்
> வெம்பரி யானை வேந்தற்கு ஓங்கிய
> கரும வினைஞரும் கணக்கியல் வினைஞரும்
> தரும வினைஞரும் தந்திர வினைஞரும்
> மண்திணி ஞாலம் ஆழ்வோன் வாழ்கென

வாழ்த்தினர். வாளுங் குடையும் பட்டத்து யானைமீது அமைத்து, மாளிகை மதிலின் புறத்தே சென்றபின், மீட்டும் அவையினர் அரண்மனையை அடைந்தனர். அங்கு மிகப்பெரிய விருந்தொன்று நடந்தது. அரசர்கள், படையெடுத்துச் செல்லுங்கால் அணியும் வஞ்சிமாலையை, வஞ்சி மன்னவன் சூடினான். மற்றைநாட்காலையில், மன்னர் மன்னவன்,

> நிலவுக் கதிர்முடித்த நீளிருஞ் சென்னி
> யுலகு பொதியுருவத்து உயர்ந்தோன்

ஆகிய சிவபெருமான் சேவடிகளிற் பூத்தூவிப் போற்றி அவ்வடிகளை முடியிற்சூடி அப்பெருமான் கோயிலை வலங்கொண்டான். அப்பால், மறையோராக்கிய வேள்விப் புகையையும் ஏற்று யானை யேறினன். அப்பொழுது சிலர், **"ஆடகமாடத் தரவணைக் கிடந்தோன் சேடங் கொணர்க"** என்று வாழ்த்தி **ஆடகமாடம்** (திருவனந்தபுரம்) என்னும் பதியில் அரவணைத் துயிலும் திருமாலைப் பூசித்த பொருள்களைக் கொடுத்தனர். அவற்றை அவன்,

> தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
> வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்

ஆங்கது வாங்கி யணிமணிப் புயத்துத்
தாங்கினனாகி

மேற்சென்றான்.

செல்லுழி, நாடக மடந்தையர் கூப்பிய கையுடன் ஏத்தி வந்தனர்; வீரம்புகழுவோர் புகழ்ந்துவந்தனர்; வெற்றி போற்றுவோர் போற்றிவந்தனர்.

நீலகிரி.

இவர்களோடு அரச உறுப்பினரும் பல் பெருந் தானைகளும் புடைசூழச் சென்ற செங்குட்டுவன், நீலகிரியை அடைந்து, அங்கே தங்கினான். தங்கியிருக்கையில், சுற்றச்சூழ மொய்த்திருந்த படைகள் ஆர்ப்பரிப்ப விசும்பின் வழியே செல்லும் முனிவர்சிலர், மின்னொளி, தன்னையும் பின்னிடச்செய்திடும் மேனியாளர், சேரன் அருகில் வந்து சேர்ந்தனர். மன்னவன் எழுந்து அவர்களை வணங்கி நின்றான். முனிவரர் அவனை நோக்கி, "சிவனருளால் தோன்றிய செங்குட்டுவ! யாங்கள் பொதியம் போகின்றோம். நீ இமயம் போகின்றாய்; அங்கே, அருமறை அந்தணர் அமர்ந்து வாழ்கின்றனர் அவர்கட்கோர் இடுக்கணும் எய்தாது காத்தல் நினது கடன்" என்று பணித்து வாழ்த்தி சென்றனர். பின்னர் மன்னவன், கொங்கணர் கருநாடர் முதலானவர்கள் இசைத்துக் காட்டிய ஆடல் பாடல்களைக் கண்ணுற்று, அவர்கள் வியக்கத்தக்க பரிசுகளை அவர்கட்கு வழங்கியிருந்தான்.

அவ்வமயத்தில் நூற்றுவர்கன்னர் அனுப்பிய தூதுவர் தலைவனாகிய சஞ்சயன், நாடகமகளிர் ஐம்பத்திருவரும் குயிலுவர் இருநூற்றெண்மரும் நகைவேழம்பர் நூற்றுவரும் உடன் வர, அரசனை அணுகி வணங்கிப் பல சொல்லித்

துதித்து "கோற்றொழில் வேந்தே! உம்முடைய நண்பர் நூற்றுவர்கன்னர், நூறு தேர்களும் ஐந்நூறு யானைகளும் பதினாயிரம் குதிரைகளும் பல்சரக்கேற்றிய இருபதினாயிரம் டண்டிகளுயும், நினக்குத் திறைப்பொருளாக எம்முடன் அனுப்பினர். மேலும் அவர், 'சேரர்பெருமான் வடதிசைச் செல்வது ஒரு கல்லின் பொருட்டே யாகலின் அதனைக் கொண்டு கங்கையில் நீர்ப்படை செய்தலை யாங்களே ஏற்றுச் செய்வோம்' என்று நினது திருமுன்பு தெரிவிக்கச் சொல்லினர்" என்றான். அதனைச் செவிக்கொண்ட சேரர்கோன் "சஞ்சய! ஆரியமன்னன் பாலகுமரனின் மக்களாகிய கனகனும் விசயனும், தமிழராற்றலறியாத சில புதிய அரசர்களோடு சேர்ந்து தமிழ்வேந்தரை இகழ்ந்தனராம்; அதனால் காய்சினங்கொண்டு செல்கின்றது எமது சேனை. இதனை நூற்றுவர்கன்னருக்குச் சாற்றுக. இந்தச்சேனை கங்கையாற்றைக் கடத்தற்கு வேண்டிய மரக்கலங்களை விரும்பினேனென்றுஞ் சொல்லுக. இதன்பொருட்டு நீ முன்னே செல்லவேண்டும்" என்று விடைகொடுத் தனுப்பினான்.

அஞ்ஞான்று, பாண்டியன் அனுப்பிய திறைப்பொருள்களாகிய, முத்தும் சந்தனமும் வந்து ஏற்றுக்கொள்ளப் பட்டன.

பின்னர், அதினின்றும் புறப்பட்டுச் சென்று நூற்றுவர்கன்னர் வகுத்த வங்கத்திரள்களின் உதவியால் கங்கையைக்கடந்து அக்கரை சேர்ந்தது சேரர் படை. அங்கே நூற்றுவர்கன்னர் சேரர் பெருமானை எதிர்கொண்டு வரவேற்றுப் பாராட்டினர். அதன்பின் சேரமான் அவ்விடத்தினின்றும்

ஆரியமன்னரை அமரில் வெல்லல்.

புறப்பட்டு வடக்கேசென்று பகைவர் நாட்டை அடுத்துப் படைவீட்டை அடைந்திருந்தான்.

இனி, சேரன்செங்குட்டுவன் தம்மேற் படையெடுத்து வந்திருக்கின்றான் என்பதை அறிந்த கனகனும் விசயனும், அவர்க்கு உதவியாய் வந்த,

உத்தரன் விசித்திரன் உருத்திரன் பைரவன்
சித்திரன் சிங்கன் தனுத்தரன் சிவேதன்

என்பார் வடதிசை மன்னரும் ஒருங்குசேர்ந்து, 'தமிழரசன் ஆற்றலை இப்போரில் காண்குவம்' என்று, கடலெனத் திரண்ட சேனைத்திரளுடன் வந்து எதிர்க்கலாயினர். போர் மூண்டது. சிறிது நேரத்தில் ஆரியப்படைகளைச் சிதற அடித்தான் சேரர்கோமான். இத்தனை உயிர்களையும் கூற்றுவன் ஒரேநாளில் உண்ணுந் திறலோன் என்பதை அந்த அமர்க்களத்தில் ஆரியர் கண்டனர்.

இப் போர்முனையில் இறக்காமல் எஞ்சிய ஆரியவீரர்கள், புறமுதுகிட்டோடிச் சடைமுடி வேடமும், சாமியார் வேடமும், சாம்பற் பூச்சும், சமணக்கோலமும் தாங்கி மறைந்து திரிவாராயினர். அன்றியும், கூத்தாடுநராகவும், பாடுநராகவும், இன்னும் தெரிந்த தெரிந்த தொழில்களைச் செய்குநராகவும் மாறி ஓடி ஒளிப்பாராயினர். இவர்களுள் சிறைபிடிக்கப் பட்டவர், கனகனும் விசயனும் மற்றுத் தேர் வீரர்கள் ஐம்பத்திருவரும் ஆவார்.

இங்ஙனம், 'இராமராவணப் போர் பதினெட்டு மாதங்களினும் பாரதப்போர் பதினெட்டு நாட்களினும் சேரர் ஆரியர் சண்டை பதினெட்டு நாழிகையினும் முடியலாயின' என்று உலகங் கூறும்வண்ணம் போர்முடிந்தது.

அப்பால், செங்குட்டுவன் நீலகிரியில் முனிவர்கள் மொழிந்ததை நினைத்து, அமைச்சன் வில்லவன்கோதையையும் பலவீரர்களையும் இமயத்து அந்தணரைக் காத்தற்பொருட்டு அனுப்பினான். பின்பு, உரு அமைத்தலிற் கைதேர்ந்த கற்றச்சரை ஏவிப் பத்தினிக் கல்லுருப் படைக்கச் செய்தனன். கண்ணகி கல்லுரு கவினுறச் சமைந்தது. அதனை, இமயத்தினின்றும் செருவிற் சிறைப்பட்ட கனக விசயர்தலையில் ஏற்றிக் கொணர்ந்து,

கங்கை நீர்ப்படை.

கங்கைப் பேர்யாற்றுக்கரையகம் புகுந்து
பாற்படு மரபிற் பத்தினிக் கடவுளை
நூற்றிறன் மாக்களின் நீர்ப்படை செய்து,

அதன்பின், மரக்கலங்களால் கங்கைத் தென்கரையைச் சேரபடை சேர்ந்தது. ஆங்கு, சேரர்கோமானுக்கென்று ஆரியவரசர்களால் அமைக்கப்பட்டிருந்த வண்ணமாளிகை, மணிமண்டபங்கள், பொன்புனை அரங்கம், புனைபூம் பந்தர், பூஞ்சோலை, மலர்ப்பொய்கை ஆகிய இவைகளும், மன்னவர்க் கேற்ற பிறவும் அழகுற அமைந்த வெள்ளிடைப்பாடியில் செங்குட்டுவன் அவ்வரசர்கள் விருப்பியவண்ணம் அமர்ந்து உறைவான் ஆயினன்.

அங்கே, தாம் ஆற்றிய போரில் மாண்டவர்களுடைய மக்களையும், காயப்பட்டார் மகார்களையும், வெற்றிபெற்ற வீரர்களையும் அருகழைத்துப் பாராட்டி, அவர்கட்குப் பொன்வாகைத் தோடுகளை நீண்டநேரம் வழங்கிவிட்டுக் கொலுவீற்றிருந்தான்.

அந் நிலையில், மாடலமறையோன் வந்துதோன்றி, சேரர்தலைவனை நோக்கி,

"வாழ்க எங்கோ; மாதவி மடந்தை
கானற் பாணி கனக விசயர்தம்
முடித்தலை நெரித்தது"

என்று சொல்லி வாழ்த்தினான். அப்பொழுது சேரன், "ஓ நான் மறையாளா! நீ இங்குள்ள பகைப்புலத்தரசர் பலரும் அறியாத தொரு நகை விளைக்குஞ் செய்தியை நவின்றனை. அங்ஙனம் நீ 'மாதவி மடந்தை கானற்பாணி கனக விசயர்தம் முடித்தலை நெரித்தது' என்றதன் பொருள் யாது? என்று வினவினான்.

சேரன்பால்
மாடலன்
சென்றுரை
யாடல்.

அதற்கு மறையோன், "மன்னவர் மன்ன! வழுத்து வன் கேண்மோ. காவிரிப்பூம்பட்டினத்துக் கோவலன் என்பான், தன் காதற்பரத்தையாகிய மாதவியுடன் கடல் விளையாட்டுக்குச் சென்றிருக்கையில் அவள் கானல்வரி பாடினாள். ஊழ்வினையுங் கூடிற்று, கோவலன் வேறொன் றன்மேல் மனம்வைத்துப் பாடினாளென்று பிணங்கி, அவளைப் பிரிந்து, மனைவி கண்ணகியுடன் சிலம்பு விற்றற் காக மதுரைவந்து, வழுதியர்கோன் உயிர்நீங்கி வானகம் புகுமாறு கொலைக்களப் பட்டான். அவன் மனைவி உனது நாட்டை அடைந்தாள். அவட்குச் சிலையெடுத்தற்காகவே நீ இங்கு வந்தனை. அவ் வீரபத்தினியின் சிலையுருவைச் சுமந்து கனகவிசயர் முடித்தலை நெரிந்தனரன்றோ! இவற்றை அடக்கி 'அவ்வண்ணம் மொழிந்தேன். அதுநிற்க. இனி, நான் இங்கு வந்தகாரணமுங் கூறுவேன்.

"முன்பு பொதியின் மலையை வலங்கொண்டு குமரி யாடித் திருப்பிவந்த யான், எனது முன்வினை விளைவோ

அன்றி வேறியாதோ மதுரைக்குச் சென்றேன்! அங்குச் சிலம்புகாரணமாகக் கோவலன் வெட்டுண்டதும், கண்ணகி வழக்குரைத்தமையால் உண்மை யுணர்ந்து அறநெறி பிழைத்தோமே என்று பாண்டியன் ஏங்கி உயிர்நீங்கியதும், அவன்மனைவி கோப்பெருந்தேவி அவனுடன் வீழ்ந்து பொன்றியதும், இவையெல்லாம் அறிந்த மாதரி அடைக்கலம் இழந்தோமே யென்று மனநைந்து நடுச்சாமத்தில் தீக்குளித்ததும், கவுந்தியடிகள் சபிக்கவேண்டுமென்று எழுந்த சீற்றத்தைப் பாண்டியன் மாண்ட காரணத்தால் அடக்கி உயிர் நீங்கியதும், மதுரை மாநகர் எரிந்தழிந்ததும் தெரிந்தயான் என் ஊருக்குப் போயினேன். அங்கு, என்னைக் காணவந்த நண்டர்களுடன் மதுரைச்செய்தியைப் பேசியிருந்தேன். அச்செய்தி எங்கும் விரைவிற் பரவிற்று.

இவ் வழியே,

மைந்தற்கு உற்றதும் மடந்தைக்கு உற்றதும்
செங்கோல் வேந்தற்கு உற்றதும்

கேட்டு, கோவலன் தந்தை கொடுந்துயர் எய்தித் தன் திரண்ட செல்வங்களை யெல்லாம் பலர்க்கும் வழங்கிவிட்டுப் புத்தமதத் துறவியாயினன்; கண்ணகிதந்தையும் அவ்வாறே செய்து சமணத் துறவியாயினன்; கோவலன் தாயும் கண்ணகி தாயும் மனம் பொறாமல் மாண்டனர்; மாதவி, தன் அருமைமகளாகிய

மணிமே கலையை வான்றுய ருறுக்குங்
கணிகையர் கோலம் காணா தொழிக

என்று நற்றாய் சித்திராபதிக்குச் செப்பிவிட்டுத் தான் மலரணி கூந்தலைக் களைந்து புத்தசமயப் பிட்சுணி யாயினள்.

இதில் இறந்துபட்டவர்கள் என்றால் வெளிப்படுத்தப்பட்ட செய்திகேட்டு இறந்தார்கள் ஆகலின், அப் பாவம் கழிதற் பொருட்டுக் கங்கையாட இங்கு வந்தேன்" என்றான்.

சேரன், மறையோன்பால் "நெடுஞ்செழியன் இறந்த பின் பாண்டிநாடு என் ஆயது? அதையும் செப்புக" என்று வினவலும், "நீடுவாழியரோ நீணிலவேந்தே! மதுரை தீப் பட்டஞான்று கொற்கையிலிருந்த இளவரசன் வெற்றிவேற் செழியன், வீரபத்தினியாம் கற்புக்கடவுளுக்குப் பொற் கொல்லர் ஆயிரவரை ஒரேநாளில் உயிர்ப்பலியூட்டி, அரசு கட்டிலில் ஏறிச் செங்கோலோச்சுகின்றான்" என்றுரைத்து ஆசிகூறி அமர்ந்தனன்.

வஞ்சிமாநகர்க்கு வந்துசேரல்.

அன்னகாலையில் மாலைவந்தது. மதியமும் வந்தது வானகஞ் சிறந்தது. மாலைக்கடன் முடிக்க வெளிச்சென் றான் சேரர் கோமான். சென்றவன், மாலைப் பிறையை மகிழ்வொடு நோக்கினான். இதுதான் நல்லசமயமென்று கருதிய அரசாங்கக் கணிதன், "மண்ணாள் வேந்தே! வாழ்க வாழ்க யாம் வஞ்சியை நீங்கி முப்பத்திரண்டு மாதங்கள் ஆயின" என் றான். அதை மனங்கொண்ட குடகர்கோ, இருக்கையை யடைந்து பின்னும் மாடலனைக் கூய், "என் மைத்துனன் பெருங்கிள்ளி தன்னொடு பகைத்த ஒன்பதின்மர் சோழ இள வேந்தர்களும் போரிற்பட்டபின்னர், அக் கிள்ளியின் செங் கோல் திறம்பட நடக்கின்றதா?" என்ன, "ஆம் அரசே ஒருகுறையும் இன்று" என்ற மாடலமறையோற்கு ஐம்பது துலாம்பாரம் பொன்னைப் பரிசாக அளித்து அகமகிழ் வூட்டினன்.

பின்னர், கன்னர்நூற்றுவரையும் அவர் தேயத்துக்குக் களிப்புற அனுப்பினன். "தமிழராற்றலை மதியாது மலைந்த கனகவிசயர் முதலாயினோரை, சோழ பாண்டியற்குக் காட்டுக" வென்று நீலன் முதலிய தூதரை ஏவினான். மற்றை நாள், நாற்படையும் புடை சூழ எழுந்து, தேவி வேண்மாள் சிந்தை களிகூரவும் வலம்புரி முழங்கவும் மாநகர்மக்கள் வழிஎதிர்கொள்ளவும் விஞ்சிய வென்றி வேந்தர்வேந்தன் வஞ்சிப் பெருநகர் வந்து சேர்ந்தனன். உடன்வந்த படைவீரர் ஆதியர், தங்கள் தங்கள் மனைவி மக்கள் உற்றார் பெற்றார்களை அணைந்து அளவளாவி, அளவற்ற மகிழ்வெய்தி இனிது வாழலாயினர். சேரநாடு கழிபேரின்பக் கடலுள் திளைத்தது.

தேவி வேண்மாளொடு தமனியமாளிகைப் புனைமணி அரங்கில் இருந்து, ஆடல் பாடல் ஆதியவற்றை நுகர்ந்து களிப்புற்ற செங்குட்டுவவேந்தன் ஒருநாள் தனது பேரோலக்கமண்டபத்தில் வீற்றிருந்தான். ஆங்கு, நீலன் முதலான தூதுவர்கள் மாடல மறையோனொடும் வந்து வணங்கினர். அவர்களுள் நீலன் அரசனை நோக்கி, "சூழ்கழல் வேந்தே! நினது கட்டளைப்படிக் கனகவிசயர் ஆதியரைக் கொண்டுபோய்ப் புகார்நகரத்துச் சோழமன்னனிடத்தும் பாண்டிய அரசனிடத்தும் காட்டினோம். சோழமன்னர், 'சமரில் தோற்றுத் தவக்கோலம் பூண்டு உயிர்பிழைத்த இவர்களைப் பிடித்துக் கொணர்ந்தது வெற்றியன்று' எனவும், பாண்டிய அரசன், 'இவர்கள் தவக்கோலம் தாங்கிய பின்னும் சீற்றங்கொண்ட சேரமான் வெற்றியோ புத்மை' எனவும் பழித்தனர்" என்று விவரித்தான்.

பத்தினிக் கல்நாட்டு

சேரன், உடனே கண்சிவந்து, "இரு பெருவேந்தரும் இசைத்தவை இவையோ!" என்று சினநகை நகைத்தனன்.

அப்பொழுது, மாடலமறையோன் வாழ்த்தி எழுந்து, "பெரும்படை வேந்தே! தணிக நின் சீற்றம். நீ நீடூழி வாழக்கடவை. யான் சொல்லப்போவதை இகழாமற் கேட்பாயாக. உனக்கோ வயது ஐம்பது ஆகின்றது. இதுகாறும் அமர்க்களங்களில் வீரச்செயல் பல புரிந்துளாய். ஆனால் அறக்கள வேள்விகள் ஆற்றினையல்லை. யாக்கையோ நிலையற்றது. உன் முன்னோர்களில் எத்தனையோ வெற்றி வீரர்களிருந்து நிலம் புரந்தனரே! அவர்களெல்லாம் இப்பொழுது எங்கே? எவரும் ஒருநாளைக்கு இறந்தொழிதல் திண்ணமேயன்றோ! அதுவேயுமன்றி,

செல்வம் நில்லா தென்பதை வெல்போர்த்
தண்டமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ?

இனி, இளமை நில்லா தென்பதற்குச் சான்றுகாட்ட வேண்டா. ஏனென்றால் நரைத்து முதிர்ந்த யாக்கையை நீயும் கண்டனை. மேலும், தேவஉடலைப் பெற்ற ஓர் உயிர் மனிதஉடம்பை அடைதலும் ஆகும். மனித உடம்பை எய்திய உயிர் விலங்கின் யாக்கையைக் கொள்ளலுங் கூடும். அதைவிட்டு, வேதனை மிகுந்த நரகர் உடம்புள் தங்குதலும் உண்டு. மேலும்,

ஆடுங் கூத்தர்போல் ஆருயிர் ஒருவழிக்
கூடிய கோலத்து ஒருங்குநின்று இயலாது
செய்வினை வழித்தாய் உயிர்செலும் என்பது
பொய்யில் காட்சியோர் பொருளுரை.

வேந்தே! யான் பொருளை விரும்பி இங்ஙனம் புகன்றேனல்லேன். நின்னைச் செந்நெறிச் செலுத்துவதே எனது பெரு விருப்பம். ஆகலின், நான்மறைகளால் அரசருக்கென்று விதிக்கப்பட்ட இராசசூயயாகத்தை வேட்டல் வேண்டும். அதுதான் வீடுபேற்றைத் தரவல்லது. அரசே!

நாளைச் செய்குவம் அறமெனின், இன்றே
கேள்வி நல்லுயிர் நீங்கினு நீங்கும்.
இதுவென வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவது மில்லை.

ஆகலின், யான் மேற்குறித்த யாகத்தை விரைவிற் செய்யக்கடவை. அண்ணலே! நீ

வேள்விக் கிழத்தி யிவளொடுங் கூடித்
தாழ்கழல் மன்னர் நின்னடி போற்ற
ஊழியோ டூழி உலகங் காத்து
நீடு வாழியரோ"

என்று பேசினான்.

இவ்வாறு மாடலமறையோன் பேசிய மாற்றத்தை மனத்தேற்ற சேரர்கோன் சிற்றறந் தணிந்து, கேள்வியில் வல்ல மறையோர்களை வேள்விக்காவன செய்ய ஏவினான். அப்பால், அமைச்சன் வில்லவன் கோதையை அழைத்து, "சிறைப்படுத்து வைத்திருக்கும் ஆரிய அரசரை விடுதலை செய்க; யாம் செய்ய விரும்பும் வேள்வி முடியும்வரையில் ஈண்டிருந்து அப்பால் தத்தம் நகரத்தை அடையலாமென அவர்களுக்குச் சொல்லுக; இந்நகர்ப் புறத்தேயுள்ள வேளாவிக்கோ மந்திரத்தில் அவர்களை இருக்கச்செய்து அவர்களுக்கு வேண்டுவன செய்க" என்றுகட்டளையிட்

டான். அதன்பின் அழும்பில்வேளையும், ஆயக்கணக்கரையும் அழைத்து "நம் நாட்டில் சிறைப்பட்டிருப்பவர்கள் எல்லாரையும் விடுவியுங்கள்" என்று பணித்தான்.

அதன்மேல், அறவேள்வியாற்றும் அந்தணர், ஆசான், பெருங்கணி, சிறப்புடைக் கம்மியர் ஆயினொருடன் சென்று,

அருந்திறல் அரசர் முறைசெயின் அல்லது
பெரும்பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாதெனப்
பண்டையோர் உரைத்த தண்டமிழ் நல்லுரை

க்கு ஆத்திமாலை யணிந்த சோழனை இலக்காக்கியும், அறநெறியரசர்கள் 'செங்கோல் வளைய உயிர் வாழார்' என்பதற்குப் பாண்டியனை இலக்காக்கியும்,

வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை யாவதும்
வெஞ்சினம் விளியார் வேந்தர் என்பதை

வடதிசை ஆரிய மன்னர்கள் அறியச்செய்து அதற்குத் தன்னையே இலக்காக்கியும்,

மதுரை மூதூர் மாநகர் கேடுறக்
கொதியழற் சீற்றம் கொங்கையின் விளைத்து

தனது நன்னாட்டை யடைந்து, திருச்செங்குன்றில் வேங்கை மாநிழலிற் பொருந்திய வீரபத்தினியின் சிலையைக் கை தேர்ந்த சிற்பிகளால் கட்டப்பெற்ற கோயிலில் நிறுவி, திருவாபரணங்களை நிறையப்பூட்டி,

பூப்பலி செய்து காப்புக்கடை நிறுத்தி
வேள்வியும் விழாவும் நாடொறும் வகுத்து

கடவுள் மங்கலம் செய்வித்தான் சேரர்கோமான். யாவும் சிறப்புற நடந்தன. அரசன் முதலானோர் அங்கேயே இருக்கலாயினர்.

இஃதிவ்வாறாக. கோவலன் கொலையுண்ட செய்தியை மாடலனால் அறிந்து கோவலன் தந்தையும் கண்ணகி தந்தையும் துறவறம் புகுந்தும் கண்ணகி தாயும் கோவலன் தாயும் உயிர் நீங்கியும் போயினபின்னர், 'காவற்பெண்டும், அடித்தோழியும், தேவந்தியும் மிகுந்த துக்கங்கொண்டு கண்ணகியைத் தேடிக் காண் போமென்று காவிரிப்பூம்பட்டினத்தை விட்டு மதுரையை அணுகினர்; ஆங்கு, கண்ணகியால் மதுரையெரிந்த வகைகளைக் கேட்டனர்; அதன்மேல், அடைக்கலம் இழந்து உயிர்நீங்கிய மாதரியின் மனைக்குச் சென்றார்கள்; அவள்மகள் ஐயையைக் கண்டார்கள்; அவளோடும் புறப்பட்டு வையைக்கரைவழியே நடந்து திருச் செங்குன்றிலேறிக் கண்ணகி கோயிலைச் சேர்ந்தனர். இவ்வாறு சேர்ந்தவர்கள் வீரபத்தினிக்குச் சிறப்புச் செய்த சேரன் செங்குட்டுவனை அடுத்து, அவன்முன்பு தாங்கள் இன்னார் இனையர் என்று தங்கள் தங்கள் வரன்முறைகளை இயம்பி அரற்றலாயினர்.

வீரபத்தினியார் விண்ணிடைத் தோன்றல்

இந்நிலையில், பொற்சிலம்பும் மேகலாபரணமும் வளையல்களும் வயிரத்தோடும் பொன்அணிகளும் அணிந்த வீரபத்தினியின் தெய்வக் காட்சியை விண்ணிற்கண்டான் செங்குட்டுவன். கண்டவன், பெருவியப்புடையோனாகி,

"என்னேயிஃ தென்னேயிஃ தென்னேயிஃ தென்னேகொல்
பொன்னஞ் சிலம்பிற் புனைமே கலைவளைக்கை

நல்வயிரப் பொற்றோட்டு நாவலம் பொன்னிழைசேர்
மின்னுக் கொடியொன்று மீவிசும்பிற் றோன்றுமால்"

என்று கூறினான். கூறின அளவில், வீரபத்தினியார் விண்ணினின்றும்,

"தென்னவன் தீதிலன் தேவர்கோன் றன்கோயில்
நல்விருந்து ஆயினான் நானவன் றன்மகள்
வெல்வேலான் குன்றில் விளையாட்டு யானகலேன்
என்னோடுந் தோழிமீர் எல்லீரும் வம்மெல்லாம்"

என்று மொழியலாயினர். ஆங்குக் குழுமிநின்றோர் எல்லாரும் இத் திருவாக்கைச் செவியுற்று வீரபத்தினியைத் தொழுது புகழ்ந்தார்கள். அப்பால் மூவேந்தரையும் குறித்து,

தொல்லை வினையால் துயருழந்தாள் கண்ணினீர்
கொல்ல உயிர்கொடுத்த கோவேந்தன் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனல்நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்றன் தொல்குலமே

மலையரையன் பெற்ற மடப்பாவை தன்னை
நிலவரசர் நீள்முடிமேல் ஏற்றினான் வாழியரோ
வாழியரோ வாழி வருபுனல்நீ ரான்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்றன் தொல்குலமே

வீங்குநீர் வேலி யுலகாண்டு விண்ணவர்கோன்
ஓங்கரணம் காத்த உரவோன்யார் அம்மானை
ஓங்கரணம் காத்த உரவோன் உயர்விசும்பில்
தூங்கெயில் மூன்றெறிந்த சோழன்காண் அம்மானை
சோழன் புகார்நகரம் பாடேலோர் அம்மானை

புறவுநிறை புக்குப் பொன்னுலகம் ஏத்தக்
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்யார் அம்மானை
குறைவில் உடம்பரிந்த கொற்றவன்முன் வந்த
கறவை முறைசெய்த காவலன்காண் அம்மானை
காவலன் பூம்புகார் பாடேலோர் அம்மானை

என்னும் பாடல்களாலும் இவை போல்வன பிற பாடல்களாலும் புகழ்ந்து கொண்டாடினார்கள். அப்பொழுது, கடவுட்கோலம் காட்டிய **கண்ணகியார்,** விண்ணினின்றும் **'நீடூழி செங்குட்டுவன் வாழ்க'** என்று வாழ்த்தி மறைந்தருளினர்.

பின்பு சேரர்பெருமான் தேவந்தியை நோக்கி,

"காதலன் தன்வீவும் காதலிநீ பட்டதுவும்
ஏதிலார் தாங்கூறும் ஏச்சுரையும் கேட்டேங்கிப்
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணியதானம்புரிந்த
மாதவி தன் துறவுங் கேட்டாயோ தோழீ
மணிமேகலைதுறவுங் கேட்டாயோ தோழீ

என்று சொல்லி அரற்றினீரே. மணிமேகலை என்பாள் யார்? அவளைப்பற்றி நீர் அரற்றவேண்டிய காரணம் என்னை?" என்றான். அதற்கவள் அரசே! கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தவள் மணிமேகலை. அவள் பேரழகு படைத்தவளாயிருந்தும், தக்க பருவம் வந்தும் தன் தந்தை இறந்த துக்கமேலீட்டால் குலத்தொழிலிற் கருத்தற்றவளாயிருந்தாள். அதனால், மாதவியின் தாயாகிய சித்திராபதி, துறவு பூண்ட மாதவியை அடுத்து, "மகளே! உன் மகள் நிலை இது வாகும். இதற்கு என்செய்வது?" என்றாள். அதுகேட்ட மாதவி, 'என்மடமகள் என்னுடன் வருவாளாக' என்று

தேவந்தி மங்கை தெய்வமுற் றுரைத்தல்.

அழைத்துச் சென்று அவளுடைய கூந்தலையும் மாலையையும் களைந்துவிட்டுப் போதியின்கீழ் மாதவர்க்குப் புண்ணிய தானமாக அவளைக் கொடுத்து அறவழிப்படுத்தினுள். இங்ஙனம் இளவயதில் மணிமேகலை துறவெய்த நேர்ந்ததை நினைத்து அவளைக்குறித்து ஆற்றினேன்" என்று சொன்னுள். அப்படிச் சொல்லிய தேவந்தி உடனே தெய்வம் ஏறப்பெற்றுளாயினள். அவள் கூந்தல் குலைந்து தாழ்ந்தது; புருவந்துடித்தது; வாய் மடிப்புற்றது; எயிறு இலங்கிற்று; சொல் தடுமாறிற்று; திருமுகம் வியர்த்தது; செங்கண்சிவந்தது. இங்ஙனமெல்லாம் ஆயின தேவந்தி, கைதூக்கிக் காலெடுத்து ஆடினளாய் மாடலனை நோக்கிப் பேசுகின்றுள்.

"மறையோய்! நான் பாசண்டச் சாத்தன். இந்தத் தேவந்தி மீது பொருந்தினேன். இங்குள்ள மங்கையருள் அரட்டன் செட்டியின் இரட்டைப் பெண்களும் ஆடகமாடத்துச் சேடக்குடும்பியின் மகளும் இருக்கின்றுர்கள். அம்மூவரின்மீது உன் கரகத்திலுள்ள நீரைத் தெளி. அந்த நீரை நீ மங்கலா தேவியின் கோயிலில் இருந்தபோது உன் கையில் அந்தணுக வந்து தந்தவன் நான்தான். அது இந்த மலையிலுள்ள ஒரு சுனையிலிருந்தெடுத்தது. அந்நீர் மாவைக் கரைத்தாற் போன்றிருக்கும். அதிற் குளித்தோர் முற்பிறப்பைக் கொள்வார்கள்" என்று மொழிதலும், அரசன் விம்மிதமுற்று மறையோனை நோக்கினுன்,

மாடலன், மன்னவனுக்குத் தேவந்தியின்* வரலாறெல்

* 28-ம் பக்கம் தேவந்திவரலாறு என்ற பிரிவைப் பார்க்க.

லாம் விளங்கவுரைத்து அப் பெண்கள் மூவர்மீதும் கரக நீரைத் தெளித்தனன். உடனே அம் மூவரும் முற்பிறப்பின் மனநிலை யெய்திக் கண்ணகியையுங் கோவலனையுங் குறித்துப் புலம்பலாயினர். அவர்களுள் கண்ணகியின் தாய்,

மூவர் பெண்களின் முன்னைப் பிறப்பு.

'புகழ்ந்த காதலன் போற்றா ஒழுக்கின்
இகழ்ந்ததற் கிரங்கும் என்னையும் நோக்காய்
ஏதில் நன்னாட்டு யாருமில் ஒருதனிக்
காதலன் தன்னொடு கடுந்துயர் உழந்தாய்
யான்பெறு மகளே! என்றுணைத் தோழீ!
வான்றுயர் நீக்கும் மாதே வாராய்'

என்று புலம்பினள். கோவலனின் தாய்,

'என்னோ டிருந்த இலங்கிழை நங்கை
தன்னோடு இடையிருள் தனித்துயர் உழந்து
போனதற்கு இரங்கிப் புலம்புறும் நெஞ்சம்
யான்அது பொறேஎன் என்மகன்! வாராய்'

என்று புலம்பினள். மாதரி,

'வருபுனல் வையை வான்துறைப் பெயர்ந்தேன்
உருகெழு மூதூர் ஊர்க்குறு மாக்களின்
வந்தேன் கேட்டேன் மனையிற் காணேன்
எந்தாய்! இளையாய்! எங்கொளித் தனையோ'

என்று புலம்பினள். இப் புலம்பலிற் கூறிய மொழிகளால் கண்ணகியின் தாயும் கோவலன் தாயும் அரட்டையனுக்கு இரட்டைப் பெண்களாகப் பிறந்தனர் என்பதும் மாதரி சேடக்குடும்பியின் மகளாய்ப் பிறந்தாள் என்பதும் வெளிப்படலாயின.

இந் நிலையில், அரசன் மறையோன் முகத்தைப் பார்த்தான். மறையோன், "மன்னவர் கோவே! இம் மூவரும் இன்னின்னார் என்பதை அவர்களின் சொற்களால் உணர்ந்தனையன்றோ! கோவலன் கண்ணகி தாய்மாரும் மாதரியும் இவ்வண்ணம் பிறந்தமைக்குக் காரணமுங் கூறுவேன். இவர்கள் கண்ணகியின் மீது அளவற்ற அன்புடையவர்கள். அவ் அன்பின் மிகுதியால் அவர்கள் அவளெய்திய பதவி எய்தி அவளை என்றும் நீங்காது உடனுறைய வேண்டியவர்களே. என்றாலும், அவளுடன் வானுலகடைதற்குத் தக்க நல்லறம் புரிந்தவர் அல்லர். ஆயினும், கண்ணகிமீது கொண்ட அன்பினால் அவள் தெய்வமாயிருக்கின்ற இந்த வஞ்சிநாட்டில் வந்து பிறந்தனர். மாதரி, கண்ணகிமேற்கொண்ட அன்பேயுமன்றிக் கண்ணனைக் கருதி ஆடிய குரவைக் கூத்தின் பயனாலும் இந் நாட்டில் திருமாலுக் கடிமைசெய் சேடக்குடும்பிக்கு மகளாய்ப் பிறந்தாள். இவற்றால்,

நற்றிறம் புரிந்தோர் பொற்படி யெய்தலும்
அற்புளஞ் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்
அறப்பயன் விளைதலும் மறப்பயன் விளைதலும்
பிறந்தவர் இறத்தலும் இறந்தவர் பிறத்தலும்
புதுவதன்றே தொன்றியல் வாழ்க்கை

என்னுமிவை வெள்ளிடை மலைபோல் விளங்கும் அன்றோ! நெடுந்தகாய்! நீ,

ஆனேறு ஊர்ந்தோன் அருளிற் றோன்றி
மாநிலம் விளக்கிய மன்னவன் ஆதலிற்
செய்தவப் பயன்களும் சிறந்தோர் படிவமும்
கையகத் தனபோற் கண்டனை"

என்று எடுத்துக்கூறி வாழ்த்தி யிருந்தான்.

இவற்றை யெல்லாம் அறிந்து மகிழ்ந்த சேரர் செம்மல் பத்தினிக் கோயிலின் பூசையை நித்தலுஞ் செய்யும் வண்ணம் தேவந்தியை நியமித்து அக்கோயிலை மும்முறை வலம் வந்து வணங்கி நின்றான். அன்னவேளையில் அவனொடு நின்றாராகிய,

வரம் தரல்.

அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்
குடகக் கொங்கரும் மாளுவ வேந்தரும்
கடல்சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்

கண்ணகியின் திருச்சிலையை வணங்கி, "தேவீ! இச் சேரர் கோமான் செய்தவாறே நாங்களும் எங்கள் நாட்டில் நின்னை நாட்டி விழாமுதலியன செய்து வழிபடக் கருதுகின்றோம். அவ்விடங்களிலும் நீ எழுந்தருளி அருள்புரிய வேண்டும்" என்று வேண்டினர். அப்பொழுது 'தந்தேன் வரம்' என்று ஒரு குரல் எழுந்தது. அதைக் கேட்டார் யாவரும் வீடுபேறு பெற்றார் போன்று மட்டற்ற களிப்புற்றோராய்ப் பின்னும் பின்னும் வணங்கினர்.

அப்பால், சேரமான் மாடலமறையோன் முதலாயினாருடன் சென்று வேள்விச்சாலையிற் சேர்ந்தான்.

அதன்மேல் இளங்கோவடிகள் பத்தினிகோயிலை அடைந்தனர். அவர் முன்பு தேவந்திமேற் பொருந்திய பத்தினித் தெய்வம், "சீரியோய்! நின் வரலாறு செப்புவேன் கேட்க.

பத்தினித் தெய்வம் இளங்கோவடிகட்கு அருளல்.

வஞ்சி மூதூர் மணிமண் டபத்திடை
நுந்தை தாள்நிழல் இருந்தோய்! நின்னை

அரைசு வீற்றிருக்கும் திருப்பொறி உண்டென்று
உரைசெய் தவன்மேல் உருத்து நோக்கிக்
கொங்கவிழ் நறுந்தார்க் கொடித்தேர்த் தானைச்
செங்குட் டுவன்றன் செல்லல் நீங்கப்
பகல்செல் வாயிற் படியோர் தம்முன்
அகலிடப் பாரம் அகல நீங்கிச்
சிந்தை செல்லாச் சேண்நெடுந் தூரத்து
அந்தமில் இன்பத்தரசாள் வேந்து"

என்று முன் நிகழ்ந்ததையும் பின் நிகழ்வதையும் திருவாய் மலர்ந்து அருளிற்று.

பத்தினி கோயிற் கண்டவர்.

நிற்க. கோவலன் வெட்டுண்டுவிழுந்த நாள்தொட்டுப் பாண்டிநாட்டில் மழை பொழியாது ஒழிந்தது; பிணியும் வறுமையும் பெருகின. அது தெரிந்து, கொற்கையிலிருந்து அரசாண்ட பாண்டியன் வெற்றிவேற் செழியன் பத்தினிக் கடவுளுக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைப் பலியூட்டிக் களவேள்வி செய்து திருவிழாக் கொண்டாடினன். அதன்பின் அந் நாடுமலிய மழைபெய்து வளம் பெருகிற்று. கொங்குநாட்டு அரசர்களும் இலங்கைக் கயவாகு மன்னனும், உறையூரிலிருந்து அரசாண்ட சோழன் பெருங்கிள்ளியும் தங்கள் தங்கள் நாடுகளில் வீரபத்தினிக்குக் கோயில் அமைத்து நாள் விழாவும் ஆண்டுவிழாவும் நடாத்தினர். அவர்கள் நாடுகளும் மழைவளம் மிகுந்து மங்கலம் பெற்றன.

முற்றிற்று.

# இளங்கோவடிகள் திருவாக்கு:

இக் கதையை நன்கு கேட்ட நல்லவர்காள்! நீவிர்,

பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊன்ஊண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட்பு இகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருள்மொழி நீங்கன்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவும் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையுஞ் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது ஒல்லுவது ஒழியாது
செல்லுந் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்;
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர்!



# அரும்பொருள் விளக்கம்.

பக்கம்.

1 பூமடந்தை-பூதேவி.
நாமடந்தை-சரசுவதி.
புனைகலன்-ஆபரணம்.

2 தூசு-ஆடை.
துகிர்-பவளம்.
ஆரம்-சந்தனம்.
அருங்கலம்-ஆபரணம்.
வெறுக்கை-செல்வம்.
கருங்கை-வலிமையுடைய கை.
ஓவியம்-சித்திரம்.
காலக்கணிதர்-சோதிடர்.
நாளங்காடி-காலைக்கடைத்தெரு.

4 பொருப்பு-மலை.
நண்ணார்-பகைவர்.
இமையவர்-தேவர்.
செம்பியன்-சோழன்.

5 பொதி-பண்டங்களைப் பொதிந்த மூட்டை, முடிச்சுகள்.

6 பொய்க்கரி-பொய்ச்சாட்சி.

7 அறங்கூறவையத்தார்-நீதிபதிகள்.

9 இன்னல்-துன்பம்.

பக்கம்.

கோட்டம்-கோயில்.

10 பாசம்-கயிறு.
ஞாயிறு-சூரியன்.

11 பதுமபீடம்-புத்தருடைய பாதபீடம்.

12 கிளைஞர்-சுற்றத்தார்.
வைகறை-விடியற்காலம்.

13 வதுவை-விவாகம்.
ஒக்கல்-உறவு.
எழில்-அழகு.
சான்று-சாட்சி.

14 பிச்சி-பைத்தியங்கொண்டவள்.

15 கொழுநன்-கணவன்.

17 சிற்றில்-சிறுவீடு.

18 அவலம்-வருத்தம்.

19 ஆயம்-மகளிர் கூட்டம்.
செவ்வேள்-முருகக்கடவுள்.
போதிலார்திரு-இலக்குமி.
வடமீன்-அருந்ததி.
காசறுவிரை-குற்றமற்ற மணம்.

20 அகன்றில்-ஆணன்றில்.

பக்கம்.

வாய்மை-உண்மைபேசல்

துளவம்-துளசி.

21 இந்திரசிறுவன்- இந்திரன் மகன்.

முனிந்து-கோபித்து.

கால்வழி-சந்ததி.

23 மரக்கலம்-கப்பல்.

அயில்பொரு-வேல்போன்ற.

24 சீற்றம்-கோபம்.

தூங்கயிலெறிந்த தொடித்தோட்செம்பியன்--தேவர்கட்குப் பகைவராகிய அசுரர்களுடைய, ஆகாயத்திலே அசைகின்ற, மதில்களையழித்த, வீரவளையையணிந்த தோள்களை யுடைய சோழன்.

வச்சிரக்கோட்டம்-(இந்திரனுடைய) வச்சிராயுதம் இருக்குங் கோயில்.

25 தாது-மகரந்தப்பொடி.

கொற்றம்-வெற்றி.

பிறவாயாக்கைப்பெரியோன்--மகாதேவன், சிவபெருமான்.

வால்வளைமேனி வாலியோன்-வெள்ளைமூர்த்தி: பலதேவர்.

பக்கம்.

நீலமேனி நெடியோன்-திருமால்.

26 தாமம்-மாலை.

வனப்பு-அழகு.

கவின்-அழகு.

27 தணந்த-பிரிந்த.

28 பெருங்குடிச் செல்வன்-கோவலன்.

29 பொருளுரை-மெய்யுரை.

பாசண்டச்சாத்தன்-தொண்ணூற்றறுவகைச் சமய சாத்திரங்களினும் வல்ல ஐயனார்.

சாத்தன்-ஐயனார்.

32 இடுதேள்-பாய்ச்சுத்தேள்: ஒருவர் மற்றவர் மீது அவரைப் பயப்படுத்தற் பொருட்டுத் தேளல்லாதவொன்றைத் தேளென்றுகூறி இடுவது.

33 காமவேள்கோட்டம்-மன்மதன் கோயில்

கழுவாய்-பிராயச்சித்தம்.

பயன்வேட்டு-பயன்விரும்பி.

34 சேக்கை-சயனம்.

நவை-குற்றம்.

ஓவியம்-சித்திரம்.

36 வைகறைப் போழ்து-விடியற்காலம்.

பக்கம்.

மாபோதி-மஹாபோதி: கௌதமபுத்தருக்கு ஞானோதயமான இடத்துள்ள அரசமரம்.

அந்தரசாரிகள்-ஆகாயத்திற் சஞ்சரிப்போர்.

விகாரம்-அரங்கு. (கையால் கருவியால் பண்ணாது மனத்தால் நிருமித்தது.)

அழுக்காறு-பொறாமை.

அவா-பேராசை.

வெகுளி-கோபம்.

இன்னாச்சொல்-கடுஞ்சொல்.

சிலாதலம்-சந்திரகாந்தக் கல்லாலாக்கியது. (சிலை-கல்).

37 எயிறு-பல்.

பெருமகன்-அருகதேவன்.

38 மறவுரை-அதர்ம மொழி.

40 கம்புட்கோழி-சம்பங்கோழி.

கானக்கோழி-கானாங்கோழி.

உள்ளு உள்ளான்.

ஊரல்.குளுவை.

புள்ளு-கணந்துட்புள்.

புதா-போதா வென்பதன் விகாரம்: பெருநாரை, மாக்கால் நாரையுமாம்.

பக்கம்.

41 முத்தீ-ஆகவனீயம், தட்சணக்கினியம், காருகபத்தியம்.

42 இட்டவித்தின்-விளைநிலத்திட்ட வித்துப்போல.

செறிவன்-எல்லாவுயிர்கட்கும் இதஞயுள்ளவன், சலியாதவனென்றுமாம்.

சினேந்திரன்-எண்வகைக் கன்மங்களையுஞ் சயித்தவன்.

சித்தன்-எண்வகைச் சித்திகளையும் உண்டாக்கினவன், கன்மங்களைக் கழுவினவன்.

பொருளன்--உண்மைப் பொருளாயுள்ளவன்.

புராணன்-பழையவன்.

குணவதன்-குணத்தையுடையவன், குணவிரதனெனவுமாம். (வதம்-விரதம்)

பரத்தில் ஒளியோன்-மேலாய உலகிற்கு விளக்காயுள்ளவன்.

சாதுவன்-ஒடுங்கினவன்.

அங்கம்பயந்தோன்-அங்காகமத்தை யுண்டாக்கினவன்.

பக்கம்.

43 பண்ணவன்-கடவுள்.

பாத்தில்பழம்பொருள்-பகுத்தற்கரிய புராணப் பொருளாயுள்ளவன், ஒட்டமற்ற பொன்னையொப்பான் என்றுமாம்.

ஒருமூன்று-காமம், வெகுளி, மயக்கம்.

ஐவரை வென்றோன்-ஐவகைப்பட்ட இந்திரியங்களையும்வென்றவன்.

கைவரைக் காணினும்-கையகத்தே காணினும்.

பொருளில் யாக்கை-பயனற்ற உடம்பு.

அருகாறவன்- அருகருக்கு அறத்தைக் கூறுவோன்.

மறுதா ஒதி-பிறிதொரு மொழியையோதி. (மறுதா-மீளவும்.

பவந்தரு பாசம்-பிறப்பைத்தரும் பாசம்.

44 பொதும்பர்-சோலை

45 சாபவிடை-சாபவிடுதலை

குணதிசை-கீழ்த்திசை.

46 தென்னவன்-பாண்டியன்.

அரவப்பாயல்-சேஷசயனம்.

பக்கம்.

பொன்னுடை-பட்டாடை.

ஆழி-சக்கரம்.

வளை-சங்கு.

48 பிலத்துவழி-குகைவழி.

49 எட்டெழுத்து-அஷ்டாட்சரம்.

ஐந்தெழுத்து-பஞ்சாட்சரம்.

50 அரவணைச்செல்வன்-திருமால்.

கப்பத்திந்திரன்-ஆயுக்கற்பத்தினை மிகவுடைய இந்திரன்; தேவர்களிடைச் சென்று கற்பிக்கும் இந்திரன் என்றுமாம்.

51 சிலதி-தோழி.

52 பால்வகை தெரிந்த பகுதியோர்-நன்மைத் தன்மை யறிவோர்.

பிறக்கிட்டொழியும்-விட்டுநீங்கும்.

53 சூர்-தெய்வம்.

சுரம்-கடுவழி

விரவி-கலந்து.

54 ஐயைகோயில்- துர்க்கை கோயில்.

தொல்குடி-பழங்குடி.

கலையூர்தி-துர்க்கை.

55 பாவை-மதனப்பாவை.

கிள்ளை-கிளி.

பக்கம்.

ஆறெறி பறை-வழிபறிக்குங்காற் கொட்டும்பறை.

சூறைச்சின்னம்-சூறைகொள்ளுங்கால் ஊதுஞ்சின்னம்.

கருந்தலை-பசுந்தலை.

நடுக்கினறி-சலிப்பின்றி.

56 எயின்கடன்-எயினர் இடும் பலிக்கடன்.

கண்ணில் எயினர்-கருணையில்லாத மறவர்

குடமலை யாட்டி-குடநாட்டையாளுஞ்செல்வி. (குடநாடு-சேரநாடு.)

ஒருமாமணி-முழுமாணிக்கம்.

57 கொற்றவை-துர்க்கை.

ஏதம்-குற்றம்.

58 இடிக்கும்-அதிரும்.

துயில்-நித்திரை.

59 சாம்பினர்-வருந்தினர்.

60 இன்னலை-துன்பத்தை.

62 போர்க்கரி-போர்யானை.

வாரிக்கொண்ட--காட்டிற் பிடித்துக்கொண்டு வந்த.

வயக்கரி-வலியயானை.

பணை-பந்தி.

புரவி-குதிரை.

வகுளம்-மகிழமரம்.

பக்கம்:

அரவம்-வெண்கடம்பு.

நாகம்-சுரபுன்னைமரம்.

திலகம்-மஞ்சாடிமரம்.

சேடல்-உச்சிச்செலுந்தி.

செருந்தி-ஓர்மரம்.

பாடலம்-பாதிரி.

குருகு-குருக்கத்தி.

தளவம்-செம்முல்லை.

அதிரல்-மோசிமல்லிகை.

கூதாளம்—கூதாளிச்செடி.

குடசம்-வெட்பாலை.

வெதிரம்-மூங்கில்.

பகன்றை-ஓர்கொடி.

பிடவம்-ஓர்கொடி.

மயிலை-இருவாட்சி.

63 தென் மலை—பொதியின்மலை.

கூலக்கடை—தானியக்கடை. (கூலம்-நெல்லு, புல்லு, வரகு, தினை, சாமை, இறுங்கு, தோரை, இராகி).

65 மறத்துறை-தீச்செயல்.

அறத்துறை மாக்கள்-அறங்களை யுணர்த்தும் பெரியோர்.

கழிப்பு-கோல்.

கந்து—பற்றுக்கோடு

பக்கம்.

ஒய்யாவினை-போக்க வொண்ணாத வினை.

உண்ணுங்காலை-நாகருங் கால்.

கையாறு-செயலறவு.

66 வேதனை-பிரமாவை.

அம்மை-முற்பிறப்பு.

மங்குல்-மேகம்.

67 அறுவை வீதி-புடவைக் கடைத்தெரு.

நால்வேறு வீதி-அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் எனச்சொல் லப்பட்டாரிருக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்கள்.

69 மறுகு-வீதி.

செல்லாச் செல்வன்-தொலையாச் செல்வன்.

படிற்றொழுக்கம்-கள வொழுக்கம்.

70 அம்மையில்-முற்பிறப் பில்.

72 சின்மலர்-சிலமலர்.

தூமடி யுடீஇ-தூயமடி ப்புடைவையை யுடுத்து.

73 பொற்புடை-பொலிவு டைய.

கொற்றம்-அரசியல். வலிமை.

பக்கம்.

75 வீட்டுலகம்-மோட்சவுல கம்.

பொறிகள்-இயந்திரங் கள்.

காவணம்-பந்தர்

76 கோளிப்பாகல்-பலா.

வாள்வரிக் கொடுங்காய்-வெள்ளரிக்காய்.

மாதுளம்பசுங்காய்-கொம்மட்டி மாதுளங் காய்.

சாலி-செந்நெல்.

77 பூவைப் புதுமலர்-புதிய காயாம்பூ.

நம்பி-ஆடவரிற் சிறந் தோன் : புருஷோத்த மன்.

தொழுனையாறு-காளி ந்திநதி : யமுனை.

தூமணிவண்ணன்-கண் ணபிரான்.

விழுமம்-துயர்.

79 மாட்டாநடை-தளர் நடை.

தாதெருமன்றம்-இடை யரூர்களிலுள்ள அம்ப லம்.

முடிமுதற் கலன்கள்-கி ரீடம் முதலான ஆபா ணங்கள்.

80 அக்கசாலை-கம்மாளரின் தொழிற்சாலை.

கூடல்மகளிர்-கூடலின்

பக்கம்.

நாடக மகளிர். (கூடல்—மதுரை.)

81 காந்து-மறைந்து.

84 துயில்-நித்திரை

85 ஒறுக்க—தண்டிக்க.

களிமகன்-அறிவு மயங்கினேன்.

86 நண்ணுமின்கள்-செய்யுங்கள்.

கேள்வன்-கணவன்.

தாதெருமன்றம்-79.

87 கொல்லைப்புனம்-முல்லைநிலம்.

குருந்தொசித்தான்—வஞ்சனையாக வந்துநின்ற குருந்த மரத்தை முறித்தவன். (கண்ணபிரான்).

கன்றுகுணிலாக் கனியுதிர்த்த மாயவன்-பசுவின் கன்றைக் குறுந்தடியாகக்கொண்டு விளவின் கனியை உதிர்த்த கண்ணபிரான். (குணில்—குறுந்தடி).

நம்மானுள்-நம் பசுநிரையுள்.

88 மலையாரம்—சந்தனம்.

கடலாரம்-முத்து

மருட்கைத்து-மருட்கையை யுடைத்தாயிராநின்றது. (மருட்கை-மயக்கம்.)

பக்கம்.

அறுபொருள்-அய்யமற்பொருள், தீர்ந்தபொருள், அறுவகைச் சமயத்தாருந்துணிந்தபொருள்.

மடங்கல்-நாரசிங்கம்.

மாறு-பகை.

89 சோவரணம்-சோ என்னும் பெயரையுடைய நகரம் வாணாசுரானுடையது.

மடந்தாழும்-மடமை தங்கிய.

ஆய்ச்சி-இடைச்சி.

90 மன்பதை-மக்கட் பரப்பினுள்ளோர்.

நறை-மணம்.

93 வாளிற்றப்பிய-வாளாற்கொன்ற.

94 சிலதி-தோழி.

96 அறைபோகிய-கீழறுத்த. (பழுதுபட்ட.)

பொறியற-புண்ணியமற்ற.

இறைமுறை-அரசநீதி.

மயிடன்-மகிஷாசுரன்.

மாற்றம்-பகை.

கண்ணை-கண்ணையுடையையாய்.

98 தென்புலம்-பாண்டிநாடு.

பக்கம்.

என்முதல்-என்னைத் தொடங்கி.

பொடி-புழுதி.

வையைக்கோன்-பாண்டியன்.

99 வளவன்மகள்-ஆதிமந்தியார்.

வஞ்சிக்கோன்-சேரன் ஆட்டனத்தி.

101 அறவோர்-துறவிகள், முனிவர்கள்.

குழவி-குழந்தைகள்.

அரசுகட்டில்-சிம்மாசனம்.

ஓவியக்கூட்டம்-சித்திரத்திரள்.

பரிக்காரர்-யானைப் பாகர்.

102 சேக்கை-படுக்கை.

ஆடரங்கு-நாட்டிய சாலை.

தண்ணுமை-மிருதங்கம்.

104 வேலி-காவல்.

மன்றத்து-அரணில்லாத வீட்டில்.

105 சிறூர்-சிறுவர்.

மனமறுகி-மனமயங்கி.

106 சிறைப்படுகோட்டம்-சிறைச்சாலை.

சீமின்-வறிதாக்குங்கள்.

கறை-கடமை.

பக்கம்.

வீடு-விடுதலை.

இடுபொருள்-பிறர்வரவிட்ட பொருள்.

படுபொருள்-புதையல்.

உற்றவர்க்கு-எடுத்தவர்க்கு.

பெற்றவர்க்கு-கொண்டவர்களுக்கு.

உறுதி-உரித்து.

பேரிருட்பக்கம்-கிருட்டின பட்சம், அமரபட்சம்.

அழல்சேர்குட்டம்-கார்த்திகை பரணி.

107 கோத்தொழில்-அரசசேவகம்.

மன்றினும்-வெளியிலும்.

மறுகினும்-தெருக்களிலும்.

109 ஒப்பியும்-ஒட்டியும்.

கடிந்தும்-வெருட்டியும்.

உருத்தகாலை-மூண்டபோது.

110 இறும்பூது-அதிசயம்.

தொண்டகம்-குறிஞ்சி நிலப்பறை.

தொடுமின்-வாசியுங்கள்

கோடு-கொம்பு : ஓர் ஊதுகருவி

கொடுமணி-ஓசைகடிதான மணி.

பக்கம்.

செந்தில்-திருச்செந்தூர்.
செங்கோடு-திருச்செங்கோடு.
வெண்குன்று-சுவாமிமலை.
ஏரகம்-திருவேரகம்.
பௌவம்-கடல்.
சூர்மா-சூரனாகியமா.
111 பிணிமுகம்-மயில்.
விசும்பிற்கோன்-இந்திரன்.
அறவர்-கார்த்திகையார் அறுவர்.
திகிரி-மலை.
கோலவுணன்-சூழவரும் அவுணன்.
குருகுபெயர்க்-குன்றம் கிரவுஞ்சகிரி.
உடம்பிடி-வேல்.
கடம்பூண்-கடம்பூணல்: முறைமையை மேற்கொள்ளல்.
112 மறுதாவு-மீட்சி.
113 அரியணை-சிம்மாசனம்.
நிமித்திகன்-சோதிடன்
மஞ்சு-மேகம்.
நாகம்-சுரபுன்னை.
திலகம்-மஞ்சாடிமரம்.
ஆரம்-சந்தனமரம்.

பக்கம்.

கொடிச்சியர்-குறத்தியர்.
114 மது-தேன்.
சிந்தூரக்கட்டி-சிவப்புக் கட்டி.
அஞ்சனத்திரள்-கருமையுருண்டை.
அரிதாரம்-மஞ்சட் கட்டி.
கறிவல்லி-முளகுக் கொடி.
கூவைநூறு-கூவைக் கிழங்கின் நீறு.
கவலை-ஓர்கொடி.
பைங்கொடிப்படலை-பச்சிலைமாலை.
காயம்-வெள்ளுள்ளி.
அணங்கு-குட்டி.
அரியின் குருளை-சிங்கக் குட்டி.
வாள்வரி-புலி.
பறழ்-குட்டி.
கரிக்களபம்-யானைக் குட்டி.
குடாவடி உளியம்-பிள்ளைக்கரடி. (குடாவடி-வளைந்த அடிகளையுடையது).
வரையாடு வருடை-மலையிற்பாய்ந்து விளையாடும் வருடைமான்.
மறி-குட்டி.

பக்கம்.

காசறைக்கரு-கஸ்தூ ரிக்குட்டி.

நகுலம்-கிரி.

மஞ்ஞை-மயில்

நாவி-கஸ்தூரி மிருகம்.

115 பீடிகை மறுகு-வணிகர் தெரு.

யாப்புறவில்லை-பொ ருத்தமில்லை.

116 சினையலர் வேம்பன்-பாண்டியன்.

117 ஈேனேர்-இங்குள்ளோர்

பிழையுயிர் எய்தின்-மக்கள் யாதானு மொன்ருல் வருந்தின்.

120 திறை-காணிக்கை.

கடற்கடம் பெறிந்த கடும்போர் வார்த்தை-கடல் நடுவிலுள்ள தீவிற்குக் கப்பற்படையுடன் சென்று, ஆங்கு வாழ்ந்த பகைவரை வென்று, அவர்தம் காவல் மரமாகிய கடம்பை வெட்டிய செய்தி.

விடர்ச்சிலை பொறித்த-இமயமலையில் வில் முத்திரையைப் பொறித்த (வில்முத்திரை சேரர்க்குரியது).

தோட்டுணை-மனைவியர்.

அரிமான்-சிங்கம்.

பக்கம்.

122 ஐம்பெருங்குழு-அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதர், சாரணர்.

எண்பேராயம்-அமைச்சர், கருமகாரர், சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், படைத்தலைவர், குதிரைவீரர், யானைவீரர்.

கரும வினைஞர்-தேசத்தின் ஆட்சியை நடாத்துவோர்.

கணக்கியல் வினைஞர்-தேசத்தின் வரி வருவாய்களை கவனிக்கும் அதிகாரிகள்.

தருமவினைஞர்-நாட்டின் அறங்களைப் பாதுகாப்போர்.

தந்திரவினைஞர்-போர்த்தலைமை வகிப்போர்.

செஞ்சடைக் கடவுள்-சிவபெருமான்.

123 குயிலுவர்-வாத்திய காரர்.

நகைவேழம்பர் - நகை விளைத்து மகிழச்செய்வோர். (நகை-சிரிப்பு)

124 மரக்கலம்-படகு.

126 மகார்-மைந்தர்.

வாகைத்தோடு-வெற்றிக் கடையாளமாகக் கொடுக்கும் பொற்பூ.

பக்கம்.

128 வான்றுயர்-பெருந்துயர்.

129 வஞ்சி-சேரர் தலைநகர்.

131 கூடியகோலம்-கொண்டகோலம்.

132 கேள்வி நல்லுயிர்-கேள்வியளவேயான நல்லுயிர்.

வரைந்து-அளவிட்டு.

வேள்விக்கிழத்தி-தேவி வேண்மாள்.

133 பெருங்கணி-சோதிடன்.

வஞ்சினம்-சூள்: சபதம்.

விளியார்-நீங்கார்.

135 கோவேந்தன்-பாண்டியன்-நெடுஞ்செழியன்.

மலையரையன்-சேரன் செங்குட்டுவன்.

மடப்பாவை - கண்ணகி உரு.

ஓங்கரணம்-உயர்ந்த மதில்.

தூங்கெயில்-வானிற் சஞ்சரிக்கும் மதில்.

136 வீவு-மரணம்.

137 ஆடகமாடம்-திருவநந்தபுரம்.

பக்கம்.

138 போற்றாஒழுக்கு-கூடாவொழுக்கம்.

ஊர்க்குறுமாக்கள்-ஊரார். (குறுமாக்கள்-அறிவிலாச்சிறியோர்)

139 பொற்படி-பொன்னுலகம்.

பற்றுவழி-பற்றுள்ளவிடம்.

ஆன்ஏறு ஊர்ந்தோன்-சிவபெருமான். (ஆன் ஏறு-ரிஷபம்)

சிறந்தோர்படிவம்-சிறந்தோர் தரிசனம்.

141 திருப்பொறி-இலக்கணம்.

செல்லல்-துன்பம்.

பகல்செல்வாயில்-திருக்குணவாயில். இது, வஞ்சிநகரின் கீழ்த்திசையிலுள்ளதோர் ஊர்.

படியோர்-முனிவர்.

அந்தமில் இன்பத்து-வீட்டுலக இன்பத்தில்.

142 பரிவு-துன்பம்.

புறஞ்சொற் போற்றுமின்-புறங்கூறாதபடி காத்துக்கொள்ளுங்கள்.

பக்கம். பக்கம்.

பொய்க்கரி - பொய்ச் சாட்சி.

பொருள்மொழி-மெய் வார்த்தை.

அறவோர்-நல்லோர்.

பிழையுயிர்ஓம்புமின்-வருந்தும் உயிரைப் பேணுங்கள்.

அறமனை-மனையறம்.

வெள்ளைக்கோட்டி-வீண்பேச்சுக் கூட்டம்.

வரையாது-வீணாகாது.

ஒல்லுவது ஒழியாது-இயலுமதை ... க ... து.

தேளத்துக் ... கு.

ஞாலம்-உல ...

அரும்பொருள்விளக்கம் முற்றிற்று.

கொழும்பு, 55-ம் நிர். நெல்வீதி,
“ராபர்ட்” அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.